


குறோய்டன்

# அருள்மிகு சக்தி கணபதி ஆலய

# மஹா கும்பாபிஷேக விழா

## சிறப்பிதழ்

21.06.2013



WESTERN
Jewellers
நன்னீராட்டு திருவிழா இனிதே நடைபெற
எங்களின் வாழ்த்துக்கள்
வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகளை குறைந்த
விலையில் பெற்று கொள்ள நாடுங்கள் உங்கள் வெஸ்டன் ஜுவலர்ஸ்.
First Tamil Jewellery shop in UK
Specialise in 22ct Gold, White Gold, Platinum
& Diamond Jewellery.
Tooting Branch.
230 Upper Tooting Road
London SW17 7EW
Tel: 020 8767 3445
Wembley Branch.
5, Plaza Parade, 29-33 Ealling Road,
Wembley, Middlesex HA0 4YA
Tel: 020 8903 0909
SEASON'S BEST IS SUMMER, SAREE'S BEST IS SILK EMPORIM SAREES
SILK
EMPORIUM
122 Upper Tooting Road
London SW17 7EN
Tel: 02086721900
OPENING HOURS : MONDAY - SATURDAY (10.30 am - 6.30pm) , SUNDAY (11.30am - 6.30pm)



குறோய்டன்

# அருள்மிகு சக்தி கணபதி ஆலய

# மஹா கும்பாபிஷேக விழா

## சிறப்பிதழ்

21.06.2013



# விநாயகப் பெருமான் போற்றி

ஓம் அனுகை விநாயக போற்றி
ஓம் அர்க்க விநாயக போற்றி
ஓம் அபிசாண்டி விநாயக போற்றி
ஓம் அபர விநாயக போற்றி
ஓம் அபிமுத்த விநாயக போற்றி
ஓம் அரிச்சந்திர விநாயக போற்றி
ஓம் அழகிய விநாயக போற்றி
ஓம் ஆசரசிருஷ்டி விநாயக போற்றி
ஓம் ஆக்கினை விநாயக போற்றி
ஓம் ஆமோத விநாயக போற்றி

ஓம் ஆண்ட விநாயக போற்றி
ஓம் ஆதி விநாயக போற்றி
ஓம் ஆழத்துப் பிள்ளையார் போற்றி
ஓம் உபநாப விநாயக போற்றி
ஓம் உச்சி பிள்ளையார் போறறி
ஓம் உடுண்டி விநாயக போற்றி
ஓம் ஊர்த்துவாண்ட முண்ட விநாயக போற்றி
ஓம் ஏகதந்த விநாயக போற்றி
ஓம் ஏரம்ப விநாயக போற்றி
ஓம் ஏகோபயப்பிரத விநாயக போற்றி

ஓம் கசகன்ன விநாயக போற்றி
ஓம் கண்டா விநாயக போற்றி
ஓம் கணப விநாயக போற்றி
ஓம் கற்பகப் பிள்ளையார் போற்றி
ஓம் கல்முத்து விநாயக போற்றி
ஓம் கஜான விநாயக போற்றி
ஓம் கணேசர் விநாயக போற்றி
ஓம் கணபதி விநாயக போற்றி
ஓம் கபில விநாயக போற்றி
ஓம் கங்கை கணபதி போற்றி

ஓம் கடுக்காய் விநாயக போற்றி
ஓம் கருக்கடி விநாயக போற்றி
ஓம் கள்ளவாரணப் பிள்ளையார் போற்றி
ஓம் கார்த்தி விநாயக போற்றி
ஓம் குலப்பிரிய விநாயக போற்றி




ஞானத் திரளாய் நின்ற பெருமான் நல்ல அடியார் மேல்
ஊனைத் திறனை நீக்கும் அதுவும் உண்மைப் பொருள்போலும்

- திருஞான சம்மந்தர்



ஓம் கூபதந்த விநாயக போற்றி
ஓம் கூப்பிடு பிள்ளையார் போற்றி
ஓம் கூர்நிதாக்ஷ விநாயக போற்றி
ஓம் கைகாட்டி விநாயக போற்றி
ஓம் கோடி விநாயக போற்றி

ஓம் சந்திர விநாயக போற்றி
ஓம் சலாடக விநாயக போற்றி
ஓம் சதுர்த்தி விநாயக போற்றி
ஓம் சமுசிக விநாயக போற்றி
ஓம் சித்தி விநாயக போற்றி
ஓம் சித்தரூப விநாயக போற்றி
ஓம் சிங்கமுக விநாயக போற்றி
ஓம் சிந்தாமணி விநாயக போற்றி
ஓம் சித்தி புத்தி விநாயக போற்றி
ஓம் சிவப்பிரகாச விநாயக போற்றி

ஓம் சிகாமணி விநாயக போற்றி
ஓம் சுமுக விநாயக போற்றி
ஓம் சுந்தர கணபதி போற்றி
ஓம் சுமங்கள விநாயக போற்றி
ஓம் சூதவனப் பிள்ளையார் போற்றி
ஓம் செவிசாய்த்த விநாயக போற்றி
ஓம் செல்வ விநாயக போற்றி
ஓம் சொர்ண விநாயக போற்றி
ஓம் தந்தவக்கிர விநாயக போற்றி
ஓம் தரணிதர விநாயக போற்றி

ஓம் தால மூல விநாயக போற்றி
ஓம் திரிமுக  விநாயக போற்றி
ஓம் திருமுறைகட்டிய விநாயக போற்றி
ஓம் துண்டி விநாயக போற்றி
ஓம் துர்க்கை விநாயக போற்றி
ஓம் துன்முக விநாயக போற்றி
ஓம் துவாரக விநாயக போற்றி
ஓம் துன்பந்தீர்க்கும் விநாயக போற்றி
ஓம் துணைவந்த விநாயக போற்றி
ஓம் தூமகேது விநாயக போற்றி

ஓம் நீச விநாயக போற்றி
ஓம் பஞ்சமி விநாயக போற்றி



அருள்மிகு திருச்செந்தூர் முருகன்



ஓம் பஞ்சமுக விநாயக போற்றி
ஓம் பந்து விநாயக போற்றி
ஓம் பாகீரத விநாயக போற்றி
ஓம் பாலசந்திர விநாயக போற்றி
ஓம் பால விநாயக போற்றி
ஓம் பிரசன்ன விநாயக போற்றி
ஓம் பிரணவ விநாயக போற்றி
ஓம் பிரவாள விநாயக போற்றி

ஓம் மணிகன்ன விநாயக போற்றி
ஓம் மந்திர விநாயக போற்றி
ஓம் மகோற்கடர் விநாயக போற்றி
ஓம் மயூரேசர் விநாயக போற்றி
ஓம் முழுமுதற்கடவுள் விநாயக போற்றி
ஓம் முண்ட விநாயக போற்றி
ஓம் மூஷிகவாகன விநாயக போற்றி
ஓம் மோதகப் பிரிய விநாயக போற்றி
ஓம் மோதக விநாயக போற்றி
ஓம் யானை முகத்து விநாயக போற்றி

ஓம் லம்போதர விநாயக போற்றி
ஓம் வக்ரதுண்டாய விநாயக போற்றி
ஓம் வக்கிரதுண்ட விநாயக போற்றி
ஓம் வரத விநாயக போற்றி
ஓம் வல்லாள விநாயக போற்றி
ஓம் வசிஷ்ட விநாயக போற்றி
ஓம் வன்னி விநாயக போற்றி
ஓம் வாமன விநாயக போற்றி
ஓம் விக்கின விநாயக போற்றி
ஓம் விடாங்க விநாயக போற்றி

ஓம் விராசபுத்திர விநாயக போற்றி
ஓம் விக்கினராஜ விநாயக போற்றி
ஓம் விக்னேஸ்வர விநாயக போற்றி
ஓம் வினை தீர்க்கும் விநாயக போற்றி
ஓம் விஷ்ணு விநாயக போற்றி
ஓம் வீம விநாயக போற்றி
ஓம் வீர சுத்தி விநாயக போற்றி
ஓம் க்ஷேத்ரபால விநாயக போற்றி



மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் வீற்றிருக்கும்
புகழ் பெற்ற முக்குருணி விநாயகர்

அல்லல்போம் வல்லினைபோம் அன்னை வயிற்றிற் பிறந்த
தொல்லைபோம் போகாத்துயரம் போம் – நல்ல
குணமதிக மாமருணைக் கோபுரத்தில் மேவும்
கணபதியைக் கைதொழுதக் கால்.

BUCKINGHAM PALACE



12th June, 2013.

Dear Mr. Paramanathan,

The Queen has asked me to thank you and the members of the Shree Sakthy Ghanapathy Temple for your kind letter sent on the occasion of the Consecration Ceremony which is being held on 21st June at the Hindu Temple in Thornton Heath.

Her Majesty was interested to learn of the rituals and ceremonies that have been planned to mark the Maha Kumbabishekam and, in return, sends her best wishes and congratulations to all concerned for a most memorable and successful event.

Yours sincerely,

Christopher Sandamas
The Chief Clerk to The Queen

Mr. K. Paramanathan.



Department for Communities and Local Government

21 Brigstock Road
Thornton Heath
Croydon
Surrey
CR0 7JJ

Our Ref: P1/27/016931/13

7 June 2013

Dear Mr Paramanathan,

**MESSAGE OF SUPPORT - MAHA KUMBABISHEKA**

Thank you for your letter of 20 May 2013 to the Prime Minister requesting a message of support for inclusion in the souvenir book to mark your temple's *Maha Kumbabisheka* following its restoration.

I am pleased to send you the following message on behalf of the Prime Minister:

> *"It is an honour to send a message of support to all those attending the Maha Kumbabishekam ceremony at the Shree Sakathy Ghanapathy Temple in Thornton Heath.*
>
> *You can be proud of your new temple and I am sure that you will all continue to make a valued contribution to the life of your local community. I wish the temple much prosperity in the future."*

Yours sincerely,

**Melisha Mckenzie**

Department for Communities and Local Government Tel
Eland House
Bressenden Place
Victoria
London
SW1E 5DU

LONDON BOROUGH OF CROYDON

Mayor's Parlour
The Town Hall, Katharine Street,
Croydon, CR9 1XW
Tel: 020 8760 5764
Fax: 020 8760 5634
Email: the.mayor@croydon.gov.uk
www.croydon.gov.uk/mayor



Many congratulations on the major renovation of your Hindu Temple. Whilst I understand that Hinduism is predominantly the religion of India and Nepal, I know that here in Croydon we have many residents who practice the philosophies of Hinduism, which include a wide spectrum of laws and prescriptions of "daily morality" based on karma dharma and societal norms.

In my maiden speech at Full Council, I mentioned that my mother was born in India and she often spoke of its diversity and the importance of religion.

As Mayor of Croydon I embrace its rich culture and I hope that during my Mayoral year to have the opportunity to wish everyone connected to the project a very successful future.

Y Hopley

**Councillor Yvette Hopley**
**Mayor of Croydon**

திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழிவழி
கயிலைக்குருமணி சீர்வளர்சீர்
**சாந்தலிங்க இராமசாமியடிகள்**
பேரூராதீனம், பேரூர்,
கோயமுத்தூர்-641 010,தமிழ்நாடு
தொலைபேசி : 0422-2607995,,2608678, நகலி : 2607994
webpage: www.sivasiva.in,
peruratheenam.blogsopt.com

உ



சாந்தலிங்கர் தாண் மலர் வாழ்க

Holy Kailasa heritage Meikandar
heritary - Kailai Guru Mani - Seervalarseer
**Santhalinga Ramasamy Adigal**
Peruraatheenam, Perur,
Coimbatore -641 010, Tamilnadu.
Telephone:0422-2607995,2608678, Fax : 2607994
Email : peruradigal@yahoo.com
: perurmutt@yahoo.com


**குருமுதல்வர் (Aatheenakarthar)**
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடம்
(Thavathiru Santhaliga Adigalar Thirumutt)

**புரவலர் (Patron)**
உலக சைவப் பேரவை
(World Saiva Council)
தமிழகத் துறவியர் பேரவை
(Tamilnadu Saints Forum)

**தலைவர் (President)**
சத்வித்யா சன்மார்க்க சங்கம்
(Sathvidhya Sanmarga Sangam)
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை, அறிவியல், தமிழ்க்கல்லூரிக் கழகம்
(Thavathiru Santhalinga Adigalar Arts, Science &Tamil College Kahzhakam)
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் மேல்நிலைப்பள்ளி
(Thavathiru Santhalinga Adigalar Higher Secondary School)
ஞானாம்பிகை நுழைவுநிலைப் பள்ளி
(Gnambikai Matriculation School)
தவத்திரு ஆறுமுக அடிகள் தாய்த்தமிழ் பள்ளி
(Thavathiru Aarumuga Adigalar Tamil School)
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் நினைவு அறக்கட்டளை
(Thavathiru Santhalinga Adigalar Memorial Trust)
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் சத்வித்யா சன்மார்க்க சங்க அறக்கட்டளை
(Thavathiru Santhalinga Adigalar Sathvidhya Sanmarga Sanga Trust)

**தாளாளர் / செயலர் (Correspondent / Secretary)**
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை, அறிவியல், தமிழ்க்கல்லூரி
(Thavathiru Santhalinga Adigalar Arts, Science &Tamil College)

**உறுப்பினர் (Member)**
பாரதத் துறவியர் பேரவை
(Bharat Saints Forum)
தமிழ்நாடு அரசு, இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை உயர்மட்டக் குழு.
(Tamilnadu Govt. Hindu Religious Endowment Board Higer Level Committee)



## சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க!

### சக்தி கணபதி கோயில் திருக்குட நீராட்டு வாழ்த்து

இன்பம் ஓங்கவும் துன்பம் நீங்கவும் இனிதருள் கணபதியை
அன்பினால் போற்றும் அடியவர் இடர்கள் அகன்று அருள்
மன்னிய வாழ்வு தந்தருள்வார் தமிழர் வாழ்வு உயர
முன்னின்றருள் அவர் முயன்று செய்யும் பணி வாழியவே

முத்தமிழ் அடைவினை எழுதும் கணபதி முதற் கடவுள்
சித்தம் ஒன்றி இலண்டனில் வழிபடும் செம்மல்கள்
புத்தம் புதிதாய்ச் சக்தி கணபதி கோவில் பொலிவு செய்து
நித்தம் வழிபட குடநீராட்டு நிகழ்த்தும் பணியை வாழ்த்துகின்றோம்

அருள்நெறி அவ்வை அகவல் பாடி கயிலை சென்றார்
திருமுறை நூல்கள் வெளிப்பட நம்பிசெய் பூசை
பெருகியதால் இராசராசன் பீடுற அப்பணி செய்துயர்ந்தார்
உருகிய நெஞ்சத்து இலங்கைத்தமிழர் வாழ்வு உயர்வாகும்

தண்ணருள் புரியும் சக்தி கணபதி தன் கோயில்
மண்புகழ் குட நீராட்டும் அன்பர்கள் வளம்பெற்று
எண்ணிய எண்ணியாங்கு எய்தி இலங்கையும் இன்புறவே
பண்ணிசைப் பாடல்கள் பாடிப்பரவிட வாழ்த்துகின்றோம்.

வேண்டுந்தங்களன்பு

அன்புள்ள

சாந்தலிங்க இராமசாமியடிகள்



**SIVASRI. K. PITCHAI GURUKKAL**
*Chief Priest, Sri Karpaga Vinayakar Temple,*
*Principal, Karpaga Vinayakar Veda Agama Vidhyalayam*
*Founder, Sivaneri Kazhakam*
*Secretary, Karpaga Vinayakar School,*
*Pillayarpatti – 630207 Sivaganga District, Tamilnadu, South India.*



04.06.2013

உ
## வாழ்த்துரை

உலகம் முழுவதும் நீக்கமற நிறைந்துள்ள பரம்பொருள் ஆன்மாக்கள் உய்திபெற வேண்டி பல்வேறு திருமேனிகளைத் தாங்கி அருள்கிறார். அந்த வகையில் வளம்மிக்க லண்டன் மாநகரில் க்ரொய்டன் பகுதியில் சக்திகணபதியாக எழுந்தருளி வேண்டுவோர்க்கு வேண்டுவன வழங்கி வருகிறார். இத்திருக்கோயிலின் மஹாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறவும், இத்திருப்பணியில் ஈடுபட்டுள்ள தலைவர் உள்ளிட்ட நிர்வாகத்தினரும் மற்றும் பக்தப்பெருமக்களும் வாழ்வில் எல்லா வளமும் நலமும் பெற்று வாழ்வாங்கு வாழவும் எல்லாம் வல்ல ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறோம்.

SIVANERI KAZHAKAM
PILLAYARPATTI
SOUTH INDIA

அன்புடன்
K. Pitchai
K.பிச்சைக்குருக்கள்
பிள்ளையார்பட்டி.

Ph: 0091 (0)4577-264275. H/P. 00919443362320 / 9842462320
Website: www.pitchaianna.com / e-mail: pitchaianna@gmail.com

உ

சிவ சிவ

"தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே"


தவத்திரு
குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

குன்றக்குடி 630206
சிவகங்கை மாவட்டம்
☎ : 04577 - 264227


நாள் :
04.06.2013



# வாழ்த்துரை

கிராய்டன் நகரில் எழுந்தருளியுள்ள அருள்தரு சக்தி கணபதி கோவில் சிறப்பாக புதுப்பிக்கப்பட்டு, திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாக் காணவிருப்பது மிக்க மகிழ்வளிக்கிறது. இத்திருக்கோவில் திருப்பணியில் ஆர்வத்துடன் ஈடுபட்டு உழைத்த அன்பர்களுக்கும் பொருளுதவி செய்த பெருமக்களுக்கும் நமது உளமார்ந்த பாராட்டு வாழ்த்துக்கள்.

இத்திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா இனிதே நிறைவெய்தவும், அருள்தரு சக்தி கணபதியின் திருவடிகளுக்கு பக்திமை பூண்டொழுகும் அன்பர்கள் அனைவருக்கும் எல்லா நலமும், வளமும் பெருகவும், இவ்விழாவை முன்னிட்டு வெளியிடப்பெறும் மலர், அருள்மணம் கமழ வெளிவரவும் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

பொன்னம்பல அடிகளார்

(பொன்னம்பல அடிகளார்)

பெறுநர்

Thiru KANAKARATHENAM PARAMANATHAN Avl.,

Trustee

SRI SAKTHI GANAPATHI TEMPLE

21 Brigstock Road,

Thornton Health

Croydon CR7 &JJ

U.K.

jothy5@yahoo.co.uk

கயிலைப் புனிதர்
**மருதாசல அடிகள்**
இளைய பட்டம், பேரூராதீனம், பேரூர்,
கோயமுத்தூர்-641 010,தமிழ்நாடு
✆ : +91-422 - 2607995, ✉ : 2607994
📱 : +91-98947 61125
website : www.sivasiva.in,
www.peruratheenam.blogsopt.com


உ



சாந்தலிங்கர் தாண் மலர் வாழ்க


Kailai - Punithar
**Dr. Marudhachala Adigal**
M.A., M.A., M.Com., B.G.L., M.Phil, Ph.D., D.Lit.,
Junior Pontiff, Peruraatheenam,
Perur, Coimbatore -641 010, India
✆ : +91-422 - 2607995, ✉ : 2607994
📱 : +91-98947 61125
Email : perurmutt@yahoo.com
perurmadam@gmail.com


**குருமுதல்வர்**

அருள்மிகு தட்சிணாமூர்த்தி திருமடம்,
காந்தள், உதகை

**இளையபட்டம்**

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் திருமடம்

**செயலர்**

தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
சத்வித்யா சன்மார்க்க சங்க அறக்கட்டளை

தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
நினைவு அறக்கட்டளை

தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
கல்விக்குழு

சத்வித்ய சன்மார்க்க சங்கம்

**இயக்குநர்**

சாந்தலிங்க அடிகளார் சமுதாயக் கல்லூரி

சீர்வளர்சீர் கயிலைக்குருமணி
சமுதாயக் கல்லூரி

தவத்திரு ஏகாம்பர தேசிகர் சமுதாயக் கல்லூரி

**இணைச் செயலர்**

தமிழகத் துறவியர் பேரவை

**மாவட்டத் தலைவர்**

உலகத் திருக்குறள் பேரவை

**தாளாளர்**

தவத்திரு சாந்தலிங்க அடிகளார்
மேல்நிலைப்பள்ளி

தவத்திரு ஆறுமுக அடிகள்
தாய்த்தமிழ் பள்ளி

**துணைத் தாளாளர்**

தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை,
அறிவியல், தமிழ்க்கல்லூரி

**ஒருங்கிணைப்பாளர்**

தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழக
தொலைநிலைக்கல்வி இயக்கக மையம்

தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழக
சேர்க்கை மையம்

பாரதியார் பல்கலைக்கழக தொலை நிலைக்
கல்வி இயக்கக மையம்

**உறுப்பினர்**

தமிழகப் புலவர் குழு

**மேனாள் உறுப்பினர்**

ஆட்சிப் பேரவை,
பாரதியார் பல்கலைக்கழகம்



சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க!

## சக்தி கணபதி கோயில் திருக்குட நீராட்டு வாழ்த்து

வானுலகும் மண்ணுலகும் வாழவுப் பான்மைதரு செய்ய தமிழ் பார்மிசை விளங்கவும் ஞானமத மூன்றுவழி நால்வாய் ஐங்கரன் வழிபாடு நீண்ட நெடுங்காலமாக நடைபெற்று வருகிறது. எச்செயல் தொடங்கினும் பிள்ளையாரை வழிபட்டுத் தொடங்குவது என்பது மரபு. இலக்கியங்கள் விநாயகர் காப்புச் செய்யுள் முதன்மையாக அமைத்துள்ளது. விநாயகர் வழிபாடு தமிழகத்திலும் இலங்கையிலும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இலங்கையில் விநாயகர் சதுர்த்தி வழிபாட்டை 21 நூல்கள் கொண்டாடுவது மரபு, இலங்கை தமிழர்கள் புலம்பெயர்ந்த போதும் இறைவழிபாட்டையும் பண்ணிசையையும் உடன் எடுத்துச் செல்லத் தவறவில்லை சென்ற இடங்களில் எல்லாம் திருக்கோயிலை அமைத்து மேலைநாட்டவரும் பங்கு கொள்ளும் வகையில் விழாக்களை நடத்தி வருகிறார்கள் அவ்வகையில் இலண்டனில் அமைந்துள்ள சக்தி விநாயகர் திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுக் காண்பது மகிழ்வுக்குரியது.

திருக்கோயில் திருப்பணியில் ஈடுபடுவது முன்வினைப் பயனின் ஈட்டம். மன்னர்கள் கட்டிய கோயில்கள் இன்றும் அவர்களை நினைக்க செய்கின்றன. இத்திருக்கோயில் திருக்குட நீராட்டுப் பெருவிழாவையொட்டி மலர் வெளியிடுவது என்றும் நினைவுப் போற்றும் செயலாகும் எச்செயலையும் திட்டமிட்டுச் செம்மையாகச் செய்யும் திறன்மிக்க திரு சோதி அவர்கள் மலர்ப்பணியைச் செம்மையாகச் செய்ய வாழ்த்துக்கள்.

திருக்கோயில் திருக்குடநீராட்டுப் பெருவிழாவிற்கு அயராது உழைத்துவரும் திருப்பணிக்குழு தலைவர் திரு.கனகரத்தினம் பரமநாதன் உள்ளிட்டோர்க்கும், பொருளுதவி செய்தோர், விழாவில் பங்கு பெற்றோர் மற்றும் அனைவருக்கும் எல்லாம் வல்ல அம்பலவாணப் பெருமான் இன்னருளும் திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழிவழி பேரூராதீன ஆதிகுருமுதல்வர் சாந்தலிங்கப்பெருமான் தண்ணருளும் கயிலை குருமணி சீர்வளர்சீர் குருமகா சந்நிதானங்களின் குருவருளும் எல்லா நலன்களும் நல்க வாழ்த்தி மகிழ்கிறோம்.

வேண்டுந்தங்களன்பு

அன்புள்ள
[signature]
மருதாசல அடிகள்

உ
Love is God

# LONDON SIVAN KOVIL TRUST

**இலண்டன் சிவன் கோயில் அறக்கட்டளை**

Charity Registration No. 1051516
4a, Clarendon Rise, Lewisham, London SE13 5ES
Tel: 020 8318 9844 Fax: 020 8318 2108

**Board of Trustees:**

**President:**
Dr. T. Sriskandarajah

**Vice President:**
Dr.(Mrs.) V.M.Karunaharan

**Secretary:**
Mr. K.V.Kanesamoorthy

**Asst Secretary:**
Mr. V.Krishnanandharaj

**Treasurer:**
Mr. T.Arulthas

**Asst Treasurer:**
Mrs. V.Gengatharan

**Building & Finance.**
**Sub Committee Chairman**
Dr. S.Rajasundaram

**Community Service.**
**Sub Committee Chairman**
Dr. S.Somasegaram

**Cultural Activity**
**Sub committee Chairman**
Mr. S.Yogarajah

Dr. S.Navaratnam
Dr. S.Sivathasan
Mr. N.Sivasubramaniam
Mr. S.Sukumar
Mr. S.Parameswaran
Mrs. R.Sritharan
Mr. S.Suthaharan

**Bankers:**
1. Barclays Bank plc
 Dartford Branch
2. Lloyds Bank plc
 Billericay Branch
3. Natwest
 Kingston Upon Thames

**Auditors:**
B.W.Chatten
Brentwood

**Solicitors:**
Nathan(KP) & Co

உ
சிவமயம்
ஸ்ரீசக்தி கணபதி திருத்தாள் சரணம்



*"ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை*
*இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை*
*நந்திமகன்தனை ஞானக் கொழுந்தினை*
*புந்தியில் வைத்து அடி போற்றுகின்றேனே"*

பரம்பொருளாகிய இறைவன் ஆன்மாக்கள் மீதுள்ள அளப் பெரும் கருணை காரணமாக திருவுருவம் தாங்கி ஆலயங்களில் வீற்றிருந்து ஆன்மாக்களாகிய நாம் செலுத்தும் பக்தியினை ஏற்று எமக்கு அருள் புரிகிறார். அவ்வகையில் சைவத்தின் தெய்வமாகிய சிவபெருமானது மூத்த பிள்ளையாகக் கூறப்படுகின்ற விநாயகப் பெருமானது பெருமையை அளவிட முடியாததாகும். இவரது பெருமைய எம்மால் எடுத்துச் சொல்லவோ அல்லது எழுத்தில் எழுதவோ சாதாரண மனிதர்களாகிய எம்மால் முடியாத ஒரு கருமமாகும். பரம்பொருளாகிய சிவபெருமானால் முதன்மை நிலை கொடுக்கப் பெற்று சகல இறை வழிபாட்டில் முழு முதற் கடவுளாக ஸ்ரீவிக்கினேஸ்வரப் பெருமான் விளங்குகின்றார். மஹாகணபதிப் பெருமான் பல்வேறு வடிவங்களைத் தாங்கி பல்வேறு நாமங்களோடு பூஜிக்கப்படுகிறார். வணங்குவதற்கு மிகவும் சுலபமான முறையில் அவரை வணங்கி தாராளமாக வரங்களைப் பெற்று வாழக் கூடிய ஓர் உன்னதமான நிலையைத் தரக்கூடிய கடவுள் ஸ்ரீவிநாயகப் பெருமானாவார். இவரை வணங்கி அருள் பெற்றவர்கள் வரிசையில் தெய்வங்கள், தேவர்கள், முனிவர்கள், அருளாளர்கள் எனப்பலர் அடங்குவர். இவ்வாறான சொல்லுவதற்கரிய பெருமைகளையுடைய அருள் மூர்த்தியாகிய விக்கினேஸ்வரப் பெருமான் குறைடன் தொண்டன் கீற்பகுதியில் ஸ்ரீசத்தி கணபதிப் பெருமானாக வீற்றிருந்து பக்தர்களின் இடர்களைக் களைந்து இன்னருள் பாலித்து வருகிறார். ஸ்ரீசக்தி கணபதிப் பெருமானது ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பெற்று பிள்ளையாருக்கும் மற்றும் மூர்த்திகளுக்கும் மஹாகும்பாபிஷேகம் நடை பெறவிருப்பதையிட்டு நாம் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். ஆலய பரிபாலன சபையும், பக்தர்களும் இணைந்து விநாயகப் பெருமானது மஹாகும்பாபிஷேகம் செய்வது மிகவும் ஓர் உன்னதமான புண்ணியமான ஓர் செயலாகும். ஸ்ரீசக்திப்கணபதிப் பெருமானது மஹாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற வேண்டும் எனவும், எல்லோருக்கும் ஸ்ரீவிநாயகப் பெருமானது திருவருள் பரிபூரணமாகக் கிடைக்க வேண்டும் என எம்பிரானைப் பிரார்த்தனை செய்து கொள்கிறோம். ஸ்ரீவிக்கினேஸ்வரப் பெருமானது திருவருட் பொக்கிஷமாகிய இக் கும்பாபிஷேக மலரில் எமது செய்தியைத் தருமாறு கேட்டு இறையருளில் எம்மையும் இணைத்துக் கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள். மீண்டும் மீண்டும் ஸ்ரீசக்திகணபதிப் பெருமானது பாதங்களைப் பணிந்து போற்றுகிறோம்.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!!

இங்ஙனம்
இலண்டன் சிவன்கோயில்
பரிபாலன சபை சார்பாக
திரு. வி. கணேசமூர்த்தி
(செயலாளர்)

**OUR SERVICES: Temple Activities - Meditation - Library - Community Hall for Social Activities, Weddings and Cultural functions - Free Education for Language, Music & Culture - Funeral Religious Services.**

# SIVAPOOMI SCHOOL
# சிவபூமி பாடசாலை

**Head Office :**Sivapoomi
Kondavil East,
Kondavil.

Valakkampirai,
Chulipuram.

T.P No: 021 2227938, website: www.sivapoomi.com
E_mail:- sivapoomi@gmail.com, sivapoomi@yahoo.com



**Board of directors**

**President**
*Mr.Aru Thirumurugan*
*Vice Prinicipal*
*Skandavaroodaya College*
*Chunnakam*

**Vice President**
*Mr. K. Sivaji*
*Principal*
*Skandavarodaya College*
*Chunnakam*

*Mrs. K. Kugathasan*
*Kondavil*

**Secretary**
*Mr.N.Sathasivaiyar*
*Asst. Registrar General*
*Kachcheri, Jaffna*

**Asst. Secretary**
*Mr. P. Srivigneswaran*
*Principal*
*Navaly Mahavidyalayam*

**Treasurer**
*Dr. S. Kugathasan*
*Eye Surgeon,*
*Teaching Hospital*
*Jaffna.*

**Asst. Treasurer**
*Mr.M. Vijayaragunathan*
*Accountant,*
*Kachcheri, Jaffna.*


மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்

Date:..........................



## செஞ்சொற் செல்வரின் ஆசியுரை

ஞான முதல்வனாகிய விநாயகரை முதன்மையாக வழிபாடு செய்யும் சைவப் பாரம்பரியம் இன்றும் நிலைபெற்றுத் தொடர்கிறது. இலண்டன் மாநகரில் குறோய்டன் பிரதேசத்தில் அருள்மிகு சக்தி விநாயகருக்கு திருக்கோவில் உருவாக்கிய பக்தர்களை வணங்குகிறேன். இத்திருக்கோவிலைப் புனிதமாகப் பேணி புனர் நிர்மாணப் பணிகளை நிறைவேற்றி மகாகும்பாபிஷேகம் நிறைவேற்றும் சிறப்பு அறிந்து மிகவும் ஆனந்தமடைகிறேன். ஆன்மீக சூழலை உருவாக்கி எம் சமூகத்தை ஆற்றல்படுத்தும் ஆலய அறங்காவலர்களது பணி மெச்சத்தக்கது. புலம் பெயர்ந்த தமிழர்கள் வாழ்வு என்னவாகுமோ? என்று ஏங்கியவர்கள் இன்று ஆறுதல் அடையும் வண்ணம் சைவசமயக் கோவில்கள் உலகம் முழுவதும் உருவாக்கப்பட்டு புதிய வரலாறு படைக்கப்பட்டுள்ளது. அருள்மிகு சக்தி விநாயகர் கும்பாபிஷேகத்துடன் எம் இனத்துக்கு சீரிய வாழ்வு கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன். இலண்டன் வாழ் உறவுகள் தாயகப் பற்றோடும், சைவத் தமிழ் உணர்வோடும் தம் பணி தொடர்வது கண்டு உள்ளம் பூரிப்படைகிறது.

*''யாவர்க்குமாம் இன்னுரை தானே''*

**கலாநிதி. ஆறு. திருமுருகன்**
தலைவர், சிவபூமி அறக்கட்டளை
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
உபதலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்




**EXECUTIVE COMMITTEE**

**Chairman**
Mr.S Ramachandran

**Vice Chairman**
Dr Mrs S Radhakrishnan

**Secretary**
Mr.K Baskeran

**Joint Secretary**
Mr.Raj Paramakumar

**Treasurer**
Mr. K Sarvananthan

**Asst Treasurer**
Mr. S Ragunathan

**Elected Comm. Member**
Mr. P Kanapathippillai

**Committee Members**
Mr.J.A.Rajakariar
Mr.S Thedchanamoorthy

**BOARD OF TRUSTEES**

**Chairman**
Mr. S. Premachandra

**Secretary**
Dr. V. Paramanathan

Mr. S. Abayalingam
Mr. R. Kanesharajah
Mr. Pon Theivendram
Mr. T. Thevaraajan
Mr.. A. Thevasagayam
Mr. S. Sri Rangan

**Accountants**
TAMSONS
177, Kingsley Road
TW3 4AS. Hounslow,
Middlesex



*"Ammanai Saran Addainthal Athika Varamperalam"*

**SHRI KANAGATHURRKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**

*5, CHAPEL ROAD, LONDON. W13 9AE.* TEL: 0208 - *810 0835*

Founded on 10-08- 1991 Charity No: 1014409 0208 - *840 0485*

www.ammanealing.com Email: info@ammanealing.com


**ஆற்றகு நோய்மிக்கு அவனி மழையின்றிப்**
**போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்**
**கூற்றுதைத்தான் திருக்கோயில்களெல்லாம்**
**சாற்றிய பூஜைகள் தப்பிடில்தானே**

-திருமந்திரம்-



ஆலயங்களிலே பூஜைகள் காலம் தவறாது நடைபெறுமாயின் நாட்டில் எதுவித குறைவும் ஏற்படாது என்பது திருமூலரின் கூற்றாகும்.

கோயில் இல்லா ஊரில் குடியிருக்காதே என்பது பழமொழி. இதற்கு அமைவாக புலம்பெயர்ந்த நாடுகளிலெல்லாம் கோவில்கள் அமைத்து வழிபட்டு குடியிருந்து வரும் எம்மவர்கள் முழுமுதற் கடவுளான ஐங்கரனுக்கு ஸ்ரீ சக்தி கணபதி ஆலயமென தொறன்டன் கீத் கொறையிடன் பகுதியில் பல ஆண்டுகளுக்கு முன்பாக ஆலயம் அமைத்து வழிபாடாற்றி இன்று கும்பாபிஷேகமும் அதனையொட்டி மலர் வெளியிடும் செய்தி அறிந்து அகமகிழ்கின்றோம், உளமார வாழ்த்துகின்றேன்.

மேலும் பல வகையிலும் வளர்ச்சி பெற்று இவ்வாலயம் மென்மேலும் சமுதாயத்திற்கு தேவையான அறப்பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டு இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க என வாழ்த்துகின்றேன். இப்பணி கொண்ட அறப்பணியாளர்களுக்கும் அதன் சார்ந்த மலர் வெளிக்கொணரும் அன்பர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள்.

**" மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

செ. இராமச்சந்திரன்
தலைவர்
லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்

om muruga

# இலண்டன் ஸ்ரீ முருகன் கோயில்

# LONDON SRI MURUGAN TEMPLE

REGISTERED CHARITY NO : 271097
78 CHURCH ROAD, MANOR PARK, LONDON E12 6AF
TEL : 020 8478 8433 FAX : 020 8478 0407
www.londonsrimurugan.org

**BOARD OF TRUSTEES**
Mr. R. V. Naidoo (Chairman)
Mr. VE. Palaniappan
Mr. G. Ramadass
Mrs. L. Sivajoti
Mr. R.C.A.Anpananthar

**PRESIDENT**
Mr.S.Sampathkumar

**VICE PRESIDENTS**
Mrs.A.Thambyrajah
Mr.N.Ravichandran

**SECRETARY**
Mr.P.Dakshinamoorthy

**ASST. SECRETARY**
Mr.R.Panneerselvam

**TREASURER**
Mrs.P.Raguvaran

**ASST.TREASURER**
Mr.G.Sathiamoorthy

**EXECUTIVE COMMITTEE**
Mr.S.Narashiman
Mrs.S.Krishnasamy
Mr.I.Muthu
Mrs.K.Kandasamy
Mrs.R.Ramachandran
Mr.M.Thenappan
Mr.R.Renganathan
Mr.S.Sundararaju
Mrs.S.Sekaran
Mr.M.Sivam
Mr.P.Uthayakumar
Mr.R.Sukumaran
Mr.V.Chettiar
Mr.Ravi Ramasamy

உ

ஸ்ரீ முருகன் துணை

10.06.2013

திரு கனகரத்தினம் பரமநாதன்
அறங்காவலர்
ஸ்ரீ சக்தி கணபதி கோவில்

திரு கனகரத்தினம் பரமநாதன அவர்களுக்கு,

இங்கிலாந்து நாட்டின் இலண்டன் மாநகரில் குறோய்டன் தோண்டன்கீத் என்ற இடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சக்தி கணபதி கோவில் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 21.06.2013 அன்று நடைபெறுவது அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்.

கணங்களின் அதிபதியாய், கர்ம வினைகளை போக்குபவராய், கலியுகத்தின் கண் கண்ட தெய்வமாய் பக்தர்களின் இன்னல் நீக்கி தடைகளை விலக்கி காரிய வெற்றி தருபவராய் அருள் புரியும் ஸ்ரீ விநாயகப்பெருமானின் பல்வேறு வடிவங்களில் சக்தி கணபதி சிறப்பான ஒரு அம்சமாகும். இலண்டனில் ஆன்மிகத்திற்கும், சமுகத்திற்கும் பெரும் தொண்டாற்றி வருவதில் சிறப்பாக செயல்பட்டு வரும் ஸ்ரீ சக்தி கணபதி கோவிலில் திருப்பணிகள் செய்யப்பட்டு ஸ்ரீ விநாயகப்பெருமானின் திருவருளாலும் வேத சிவாகமத்தில் கரைகண்ட சிவாச்சாரியர்களின் நித்ய நைமித்திக காம்ய வழிபாட்டு முறையினாலும் சமய மறிந்து அறம் செய்யும் ஆலய நிர்வாகத்தினரின் பெரு முயற்சியினாலும் பக்திமிக்க அடியார்களின் பேருதவியினாலும் ஸ்ரீ சக்தி கணபதி கோவில் ஆலய மஹா கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடந்தேறி பெருமை பெறவும் சிவத்தொண்டில் தங்களை ஈடுபடுத்தி அல்லும் பகலும் அயராது பாடுபட்டு ஆலயத்தை நடத்தி திருக்குட நன்னீராட்டு பெருவிழாகாலும் ஆலய அறங்காவலர்கள் நிர்வாக குழுவினர் சிவாச்சாரியர்கள் மற்றும் பக்தப்பெருமக்கள் அனைவரும் வாழ்வில் அனைத்து வளங்களையும் பெற்று பெருவாழ்வு வாழ வேண்டி எல்லாம் வல்ல இலண்டன் ஸ்ரீ முருகப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்

[signature]

ப. தட்சிணாமூர்த்தி
செயலாளர்
அறங்காவலர்கள் மற்றும் நிர்வாகசபை சார்பாக




**B Vasanth Kurukkal B.A (Hons)**

சைவப்புலவர், சைவசித்தாந்த பண்டிதர்

**சிவஸ்ரீ பா. வசந்தக் குருக்கள்**

ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்

Home: 18, Chingford road, Walthamstow, London, E1

Temple: 0208 523 3819 Home: 0208 523 3802 Mob: 0790 370 7878 Email: vasanthan@live.co.uk




## கும்பாபிஷேக சிறப்பு தரும் மலர் மணம் வீசட்டும்

இன்றைய ஆன்மீக உலகத்தில் அருள் வலிமையை அறிந்து கொள்ளும் வழிகளைத் தருவதில் ஞான மலர்கள் முதன்மை பெறுகின்றன. அந்த வகையில் குறோய்டன் சக்தி விநாயகர் கோவில் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு வெளிவரும் இம்மலர், பிள்ளையார் வழிபாட்டின் பெருமைகள், கும்பாபிஷேக கிரியைகளின் சிறப்பு போன்ற பலதத்துவங்களை உள்ளடக்கி வெளிவருகிறது கிரியைகள், ஞானச் செயல்கள், கிரியை என மருவும் யாவும் ஞானம் கிடைப்பதற்கே என்று சைவ சித்தாந்தம் கூறுகிறது.

சடங்கு சம்பிரதாயம் சாஸ்திரம் மரபு என்பன எமது உள்ளத்திற்கும் உடலுக்கும் நன்மை தர ஞானிகள், முனிவர்கள், இறைவன் கருணை ஆணையால் எமக்கு தந்தவை. அந்த விழுமியங்களை வெளிப்படுத்தி அடுத்த தலைமுறைக்கு தருவது இந்த வாடா மலர்களே ஆகும்.

இம்மலர் ஆக்கத்திற்கு துணை நின்ற ஆலய நிர்வாகிகள், சிவாச்சாரியார்கள், அறிஞர்கள், மலர் குழுவினர், அனைவரும் அடியார்களுக்கு ஞான மலர் கொடுத்த பெரும் புண்ணியத்திற்கு உரியவர்கள்.

பிள்ளையார் வழிபாடு என்பது கடவுள் வழிபாடு என்பதற்கு அப்பால் எமது உடலுடன் சேர்ந்த ஒரு பயிற்சி இன்று உலகம் போற்றும் யோகாசனம், பிராணாயமம் என்பவற்றிற்கு மூல ஆதாரம் விநாயகர் வழிபாடு. நீண்ட ஆயுள் ஆரோக்கியம் இரண்டும் வாழ்க்கைக்கு அவசியம். பிள்ளையார் அம்சத்தில் நீண்ட மூக்கு நீண்ட ஆயுளின் அடையாளம். பிராணாயம பயிற்சிக்கு நாம் மூக்கை பிடித்து செய்யும் பழக்கத்தை விநாயகர் எடுத்துக் காட்டுகிறார். மூலாதாரத்து மூண்டெழு கனலை காலால் எழுப்பும் கருத்து அறிவித்து என அவ்வையார் குறிப்பிடுகிறார். அத்துடன் யானை மிகப்பெரும் பாரமான வேலையை செய்தாலும் அது தாவர உணவு உண்ணும சைவப்பிராணி. சைவ வழிபாட்டில் சைவமாக இருக்க வேண்டும் என்பதை முதலில் குறிப்பிடுவது பிள்ளையார் வழிபாடு. காதைப் பிடித்து தோப்புக்கரணம் போடுவது supper brain yoga என்று விஞ்ஞானம் கூறுகிறது. இதனால் ஞாபக சக்தி அதிகரிக்கும். ஞான கொழுந்தினை புந்தியில் வைத்து அடி போற்றுவோம் என திருமந்திரம் கூறும் நற்குஞ்சரக்கன்று நண்ணில் கலைஞானம் கற்கும் சரக்கன்று காண் என்று திருவருட்பயன் சொல்கிறது. அறிவு, ஆரோக்கியம், ஆற்றல், ஆயுள் அனைத்திற்கும் மூலகாரணமான பிள்ளையார் வழிபாடு முதலில் நடைபெறுவது பொதுமையாக இருக்கிறது .ஆணைகள் கூட்டம் கூடமாக ஒற்றுமையாக செல்லும் அதனையும் நாம் பின்பற்ற வேண்டும் என்பதும் ஆனைமுகன் வழிபாட்டில் காட்டப்படுகிறது. இவ்வாறான பெருமைகள் பல உள்ள எமது சைவ சமயத்தின் உண்மைகளை வெளிப்படுத்தி மேலும் பல நல்ல மலர்கள் வர சக்தி கணபதி பாதம் பணிவோம்.


***சைவ சித்தாந்த பண்டிதர், சைவப் புலவர்***

***சிவஸ்ரீ. பா. வசந்தக்குருக்கள்*** B.A (HONS)




# KAILAI R NAGANATHASIVAM

Chief Priest

## LONDON SRI MURUGAN TEMPLE

78 Church Road, Manor Park London E12 6AF

Tel : 020 8478 8433 Fax : 020 8478 0407

www.londonsrimurugan.org


## பிரம்மஸ்ரீ நாகநாதசிவம் வாழ்த்து

உலகின் பழம்பெரும் சமயங்களில் முதன்மையான இந்துசமயம் அந்நாள், இந்நாள், மற்றும் எந்நாளும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் எல்லோராலும் கடைப்பிடிக்கத் தக்கதாகவும் விளங்கி வருகிறது. ஆன்ம லக்ஷணம், உலக இயக்கம், பதி, பசு, பாசா விளக்கம், பேரின்ப சாதனம் இப்படி மகோன்னதமான மனிதப் பிறவியால் நாம் அனுபவிக்கக் கூடிய அனைத்து விஷயங்களையும் அலசி ஆராய்ந்து ஈடேற்றம் இதுதானென அறுதியிட்டுச் சொல்வது எமது சமயமே. ஆண்டவனின் அடிக்கமலங்களில் அழுக்கில்லா சூஷ்ம சரீரத்தோடு ஆன்மாக்கள் இளைப்பாற வழிகாட்டும் ஆறு பிரிவுகளை உள்ளடக்கியது இந்து சமயம்.

காணா பத்யம், கௌமாரம், சைவம், சாத்தம், வைணவம், சௌரம் என இதன் எந்த வழியில் சென்றாலும் முடிவில் நாம் பெறுவது பேரின்பமாகிற முக்தியேயாகும். ஆறு பிரிவுகளின் பிரதான தெயவங்களான கணபதி, ஸ்கந்தன், சிவன், சக்தி, விஷ்ணு, சூரியன், முதலானோர் தத்துவங்களினாலும் உறவுமுறை நெறிகளினாலும் நெருங்கி இணைந்திருக்கின்றனர்.

சைவசமயத்தின் ஒப்பற்ற பெருங்கடவுளாகிய சிவபெருமானின் முதற்பிள்ளையாக, மூத்தவராக விளங்கும் விநாயகப்பெருமான் காணாபத்யம் என்ற பிரிவுக்குத் தலைவராக போற்றப்படுகிறார். கோடாரி தாங்கி கொடுவினை களைந்து வல்வினை போக்கி வாழ்வு சிறக்க வரமருளும் விநாயகர், பாலகணபதி முதலான பதினாறு வடிவங்களில் கட்சிதந்து அருள் புரிகின்றார்.

மேலை நாடுகளில் தொன்மையான நாகரீகம் கொண்ட இங்கிலாந்து நாட்டின் தலைநகராம் லண்டன் மாநகரில் குறைய்டன் என்னும் திருத்தலத்தில் கோயில் கொண்டு போற்றுவோரின் பிரார்த்தனைக்குச் செவிசாய்த்துஅவர் தம் துன்பம் நீங்கி வாழ்வில் வளம் பெற அருள்புரியும் ஸ்ரீசக்தி கணபதிப் பெருமானின் திருக்கோயில் திருப்பணிகள் பல நடைபெற்று மஹா கும்பாபிஷேகம் நடைபெற இருப்பதறிந்து மகிழ்ச்சி கொள்கிறோம்.

வேத சிவாகமம் கற்றுத் தெளிந்த சிவவேதியப் பெருமக்களும் திருமுறை பாடிப்பரவும் பண்ணிசை வேதாந்தங்களும் அறம் காத்து மெய்வழியில் பொருள் சேர்த்து சிவநெறியின் தடம் மாறா மணம்கொண்டு ஆனைமுகனின் ஆலயத் திருப்பணி செய்திடும் அறங்காவலர் சபையினரும் குடமுழுக்குப் பெருமையினை குவலயத்தில் உள்ளோர்கள் மலர் வடிவில் கண்டிடவே பாடுபட்டுப் பதிப்பிக்கும் விழா மலர்க் குழுவினரும் அளவில்லாப் பொருள் தந்து அயராது தொண்டு செய்து சக்தி கணபதியின் அருளுக்காக ஆவலோடு காத்து நிற்கும் அடியவர் அனைவரும் இணைந்து நடத்திடும் மஹா கும்பாபிஷேக திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா சீரும் சிறப்புமாக நன்முறையில் நடந்தேறி ஸ்ரீசக்தி விநாயகப் பெருமானின் பேரருள் அனைவருக்கும் கிடைத்து நோயற்ற வாழ்வும் துடங்கா உடலும் நீடு வாழ் நாளும் நிறைந்த செல்வமும் பெற்றுப் பேரானந்தம் அடைய வேண்டி எல்லாம் வல்ல லண்டன் ஸ்ரீமுருகப் பெருமானைப் போற்றிப் பிரார்த்தித்து மகிழ்கிறோம்.

சிவஸ்ரீ கயிலை ஆர் நாகநாத சிவம் குருக்கள்
சிவஸ்ரீ கே சங்கர குருக்கள்
சிவஸ்ரீ எஸ் செல்லப்பா குருக்கள்
சிவஸ்ரீ எம் சந்தான சிவம் குருக்கள்
சிவஸ்ரீ எஸ் கணபதி சுந்தர குருக்கள்
சிவஸ்ரீ கே கல்யாண சுந்தர குருக்கள்
சிவஸ்ரீ கே கணேஷ் குருக்கள்
சிவஸ்ரீ எஸ் கௌரீ சங்கர குருக்கள்
சிவஸ்ரீ ஜனார்த்தன சர்மா
திரு டி ஆனந்த டீசகர் மேலாளர்
லண்டன் ஸ்ரீ முருகன் கோயில்



# Shree Sakthy Ghanapathy Temple


**Board of Trustees**

Chairman
K Kanendran

Vice Chairman
T Pangayetselvan

Secretary
C Kailaya -- Vasan

Asst. Secretary
K Jeyakumar

Finance
K Paramanathan


**Temple Opening Hours**

Monday & Wednesday

8.30am – 2.00pm &
5.00pm – 9.00pm

Tuesday, Thursday,
Friday, Saturday
& Sunday

8.30am – 9.00pm


**Address**

21 Brigstock Road
Thornton Heath
Croydon
Surrey
CR7 7JJ

Tel: 020 8689 3466


**Chief Priest**

K Prakash Kurukkal


**Registered Charity**
No: 1141833


*ஸ்ரீ சக்தி கணபதி துணை*
*சிவாகம சாகரம், வேதாந்த சிகாமணி*
*வேதசிவாகம மணி, சிவஸ்ரீ சத்யோஜாத சிவம்*
ஸ்ரீ பரமேஸ்வர சிவாச்சாரியார் பிரகாஷ் M.A. SANSKRIT



## ஸ்ரீ சக்தி கணபதி ஆலய பிரதம குரு
## ஆசியுரை

''வேழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்'' என்ற ஆன்றோர்களின் வாக்கிற்கிணங்க சைவசமயத்தில் பற்றுடைய நாம் அனைவருமே எந்த ஒரு கருமத்தைத் தொடங்கும் முன் கணபதிப் பெருமானை வணங்குவதனாலேயே எவ்விதமான தங்கு தடைகள் இல்லாமல் இனிதே பூர்த்தி செய்ய முடிகின்றது.

இதையே தான் ஆகம நூல்களும்

*''கௌரீபுத்ர கணாத்யக்ஷ ஸர்வ விக்ன நிவாரக |*
*அஸ்மின் கர்மணி ஸர்வஸ்மின் நிர்விக்னம் குரு சித்தயே ||*

என்ற சுலோகத்தின் மூலம் விநாயகரை பிரார்த்திக்கின்றன.

இதற்கு தெய்வங்களும் விதிவிலக்கல்ல. விநாயகப் பெருமானின் துணையினாலேதான் சிவபெருமானால் திரிபுர சம்ஹாரம் புரிய முடிந்தது, அம்பிகையினால் பண்டாசுர வதம் நடத்த முடிந்தது, முருகப் பெருமானுக்கும் வள்ளியம்மைக்கும் திருமணம் நடைபெற்றது.

அப்பேற்பட்ட மகிமை பொருந்திய கணபதியானவர் ஐக்கிய ராச்சியத்தில் குறோய்டன் பகுதியில் அருளாட்சி புரியும் ஸ்ரீ சக்தி கணபதி ஆலயமானது அழகிய சிற்ப வேலைபாட்டுடன் புது பொலிவாக புணருத்தாரணம் செய்விக்கப்பட்டு ஸ்வஸ்தி ஸ்ரீ விஜய வருடம் ஆனி மாதம் 7ம் நாள் (21-06-13) வெள்ளிக் கிழமையன்று பற்பல சிவாச்சார்ய பெருமக்களால் மஹாகும்பாபிஷேக பெருஞ்சாந்தி பெருவிழாவானது நடத்தப்பெறும் இவ்வேளையில், பற்பல தெய்வீக விடயங்களை தாங்கி மலருகின்ற இக்கும்பாபிஷேக மலரில் ஆலய பிரதம குரு என்கிற வகையில் ஆசியுரை வழங்குவதில் அகமகிழ்வதோடு, இவ்வாலயத்தை வழிநடத்தும் அறங்காவலர் சபையினருக்கும், கோயிலின் வளர்ச்சிக்கு அனைத்து வகையிலும் உற்ற துணையாக நிற்கின்ற அடியார்களுக்கும், திருப்பணிகளிலும், கும்பாபிஷேகத்திலும் தன்மையற்ற தொண்டாற்றிய ஆலய தொண்டர்களுக்கும், இம்மலர் வெளிவர துணை நின்ற ஆன்மீக அன்பர்களுக்கும் மற்றும் ஆலய பக்தர்களுக்கும் ஸ்ரீ சக்தி கணபதி பெருமானின் திருவருள் சேரபெற்று சகலவிதமான சௌபாக்கியத்துடன் வாழ நல்லாசி வழங்குகின்றேன்.

*லோகா சமஸ்தா ஸுகினோபவந்து*





# குறோய்டன் அருள்மிகு சக்தி கணபதி ஆலயம்

## MAHA KUMABISHEKAM OF SHREE SAKTHY GHANAPATHY TEMPLE

21 Brigstock Road, Thornton Heath, Croydon CR7 7JJ, UK, Tel: 0208 689 3466

# புனராவர்த்தன அஷ்டபந்தன சமர்ப்பண மஹா கும்பாபிஷேக விழா விஞ்ஞாபனம்

## 21.06.2013 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி

விநாயக அடியார்களே! சகல வளங்களும் செல்வச் செழிப்பும் நிரம்பப்பெற்ற ஐக்கிய இராச்சியத்தில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர், சுந்தரர் ஆகிய சமய குரவர்கள் வழியில் செல்லும் சைவப் பெருமக்கள் நிரம்பிய குறோய்டன் பிரதேசத்தில் அருளாட்சி புரிபவரும் சதுர்த்தி திதியில் விரதமிருந்து பூஜிப்பதினால் அகமகிழ்ந்து பலவித வரங்களை அருளுகின்ற காரணத்தினாலேயே "சதுர்த்தி பூஜன ப்ரியா" என்று வேத சிவாகமங்களினால் போற்றப்படுபவரும், தமது பக்தர்களின் குறைகளை களைந்து அவரவரது விருப்பங்களை நிறைவேற்றி அருள் புரிவதில் முதன்மையாக திகழ்பவருமாகிய ஸ்ரீசக்தி கணபதிப்பெருமானின் திருக்கோயிலானது புனருத்தாரணம் செய்விக்கப்பட்டு மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி பெருவிழாவானது நிகழும் மங்களகரமான விஜய வருடம் ஆனி மாதம் 7ம் நாள் (21.06.2013) வெள்ளிக்கிழமை அனுஷ நட்ஷத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 10.00 மணி சிம்மலக்ன ஜெய வேளையில் மஹா கும்பாபிஷேகம் வேத சிவாகம முறைப்படி நிகழ்ச்சி நிரலில் காணும்வண்ணம் நடைபெற உள்ளதால் பக்தப்பெருமக்கள் திரளாக வருகை தந்து இக்கும்பாபிஷேக விழாவிலும் அதற்கு முன்பின் நடைபெறவிருக்கும் சகல கிரியா நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு எல்லாம் வல்ல ஸ்ரீசக்தி கணபதிப்பெருமானின் திருவருள் பெற்றிடுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

## நிகழ்ச்சி நிரல்

### பூர்வாங்கக் கிரியைகள்

**16.06.2013 ஞாயிறு தொடக்கம் 19.06.2013 புதன் காலை வரை**

காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை - மாலை 6.00 மணி முதல் 9.00 மணி வரை

### யாகசாலை பூஜைகள்

**19.06.2013 புதன் மாலை தொடக்கம் 21.06.2013 வெள்ளி வரை**

காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை - மாலை 6.00 மணி முதல் 9.00 மணி வரை

### எண்ணெய் காப்பு

**20.06.2013 வியாழக்கிழமை**

காலை 6.00 மணிமுதல் இரவு 8.00 மணி வரை

பக்தர்களினால் தெய்வத்திருமேனிகளுக்கு எண்ணெய் காப்பு சாற்றும் வைபவம் தொடர்ந்து நடைபெறும்.

### கும்பாபிஷேகம்

**21.06.2013 வெள்ளிக்கிழமை**

காலை 6.00 மணி ஆராதனைகள் தொடங்கப்பெற்று 10.00 மணிக்கு சிம்ம லக்கின ஜெயவேளையில் விமானங்கள் கும்பாபிஷேகம் தொடர்ந்து ஸ்ரீசக்தி கணபதி பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் கும்பாபிஷேகம், தீபாராதனை, திருவருட் பிரசாதம்.

மாலை 6.00 மணி முதல் மஹாபிஷேகம், விசேட சந்தனக்காப்பு அலங்காரம் வசந்தமண்டப பூஜை, பிள்ளையார், முருகன், அம்பாள் திருவீதி உலாக்காட்சி, திருவருட் பிரசாதம் வழங்குதல்.

**கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து 48 நாட்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும்.**
**உபயம் நடாத்த விரும்பும் அடியார்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.**

**இங்ஙனம், அறங்காவலர் சபை, ஆலய குருமார்கள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள்.**

– சுபமங்களம் –

JR Print, Tel : 0208 503 6643

# கும்பாபிஷேக சிவாச்சாரியார்கள்

**ஆலய குருமார்கள்**

சிவாகம ரத்னம் சிவஸ்ரீ பிரகாஷ் குருக்கள்
சிவாகம பூஷணம் ப்ரும்மஸ்ரீ உமாபிரசாத் சர்மா

**கும்பாபிஷேகத்தில் பங்காற்றி அருளாசியுரை வழங்கும் சிவாச்சார்ய பெருமக்கள்**

விகாச்ரத்ன Dr. சிவஸ்ரீ பிச்சை குருக்கள்
வேதசிவாகம பாடசாலை முதல்வர்

சிவாகம ப்ரவீண சிவஸ்ரீ நாகநாத சிவம் குருக்கள்
பிரதம குருக்கள்
லண்டன் முருகன் கோயில் - ஈஸ்ற்ஹாம், இலண்டன்.

சைவ சித்தாந்த பண்டிதர்
சிவஸ்ரீ பா. வசந்தன் குருக்கள் B.A(Hons)
ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயம் வோல்தம்ஸ்ரோ, இலண்டன்.

சிவாகமரத்னம் சைவ சித்தாந்த சேகரம்
சிவஸ்ரீ இ. கமலநாத குருக்கள் B.A(Hons)
பிரதம குருக்கள்,
ஸ்ரீநாக பூஷணி அம்மன் கோயில் என்பீல்ட், இலண்டன்.

**பிரதிஷ்டா பிரதம சிவாச்சார்யார்**

சிவாகம சாகரம், வேதாந்த சிரோமணி ஆச்சார்யதிலகம் வேதசிவாகம மணி

**சிவஸ்ரீ சத்யோஜாத சிவம்**

**ஸ்ரீ பரமேஸ்வர சிவாச்சாரியார் பிரகாஷ்** M.A. Sanskrit
ஸ்ரீ சக்திகணபதி ஆலய பிரதம குரு.

**கும்பாபிஷேகத்தில் பங்காற்றி சிறப்பிக்கும் குருமார்கள்**

சிவாச்சார்யகுலதிலகம் சிவஸ்ரீ குஹேந்திரக் குருக்கள், வெம்பிளி, இலண்டன்.
சிவாகம ரத்னம் சிவஸ்ரீ கணேச குருக்கள், ஈஸ்ற்ஹாம், இலண்டன்.
சிவாகம ரத்னம் சிவஸ்ரீ சங்கர குருக்கள், சிவஸ்கந்தகிரி, தோன்ரன் ஹீத்.
சிவாகம பூஷணம் சிவஸ்ரீ பாஸ்கரன் குருக்கள், கொழும்பு, இலங்கை.

**யாகசாம் ரக்ஷகர்கள்**

பிரம்மஸ்ரீ சோம. ப்ரணவன்சர்மா தோன்ரன் ஹீத்
பிரம்மஸ்ரீ பா. கோபாலகிருஷ்ணசர்மா, வோல்த்தம்ஸ்ரோ

**சர்வ சாதகாச்சார்யார்**

சிவாகம ப்ரவீண, சிவாகம கலாநிதி,
சிவாகம விசக்ஷண, சிவாகம ஞானக்கிரிய சாகரம்.
சிவஸ்ரீ T.M. நடராஜ குருக்கள்
திருமருகள் தமிழ்நாடு (இந்தியா)

**சர்வபோதகாச்சார்யார்கள்**

சிவாகம பூஷணம் சிவஸ்ரீ D. கல்யாணசுந்தர குருக்கள்
ஆனதாண்டவபுரம் தமிழ் நாடு (இந்தியா)

கிர்யா பூஷணம், வாத்திய விசாரதா சிவாகம குலத்திலகம்
சத்யோஜாதசிவம் சிவஸ்ரீ சோமாஸ்கந்த குருக்கள் M.Phil
இலண்டன்.

சிவாகம பூஷணம் சிவஸ்ரீ சுவாமிநாத குருக்கள் முதல் பட்டம்
திருவண்ணாமலை தேவஸ்தானம்

**ஆலய நிர்மாணம்** : சிற்ப கலாநிதி விஸ்வபிரும்மஸ்ரீ சரவணமுத்து ஜெயகாந்தன்,
ஜெனா சிற்பக் கலைக்கூடம், லண்டன்

**மங்கள இசை** : நாதஸ்வர வித்துவான கலைமாமணி திரு சம்மந்குமரன்
தவில் வித்துவான் வண்ணிப்புகழ் திரு கேததீஸ்வரன்

கும்பாபிஷேகத்தினை தொடர்ந்து 48 நாட்களுக்கு மண்டலாபிஷேகம் நடைபெறும். உபயம் நடாத்த விரும்பும் அடியார்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**இங்ஙனம், அறங்காவலர் சபை. ஆலய குருமார்கள். செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் தொண்டர்கள்.**

– சுபமங்களம் –

# அருள்மிகு சக்தி கணபதி ஆலய குருமார்கள்



சிவஸ்ரீ பிரகாஷ் குருக்கள்



ப்ரும்மஸ்ரீ உமாபிரசாத் சர்மா



சிவஸ்ரீ சிவபிரகாசம் குருக்கள்

# அருள்மிகு சக்தி கணபதி ஆலய அறங்காவல் குழுவினர்



திரு. க. கணேந்திரன்



திரு. கு. கைலாய வாசன்



திரு. க. பரமநாதன்

திரு. தி. பங்கயற்செல்வன்



திரு. க. ஜெயக்குமார்

# அருள்மிகு சக்தி கணபதி ஆலய நிர்வாக சபையினர்



திரு. க. பரமநாதன்



திரு. ம. நாகரூபன்



திரு. வே. அசோகன்



செல்வி. ச. யதுஷானி



திரு. த. தர்மகுலசிங்கம்



திருமதி. ரஜனி தயாபரன்



ப்ரம்மஸ்ரீ. உமா பிரசாத் சர்மா

# அருள்மிகு சக்தி கணபதி ஆலய கும்பாபிஷேக குழுவினர்



திரு. க. பரமநாதன்



திரு. வே. திருவிளங்கம்



திரு. வே. அசோகன்



திரு. பா. தயாபரன்

திரு. வே. நவரட்ணம்



# தலைவர் செய்தி

*அன்பார்ந்த சக்தி கணபதி அடியார்களே*

நேற்று மாதிரி இருக்கிறது. ஆனால் ஒரு மாமாங்கம் ஓடிவிட்டது. கணபதிக்கு ஒரு கோவில் அமைக்கவேண்டும் என்ற எண்ணம் குறோய்டன் மக்களுக்கு ஏற்பட்டபோது எங்களில் பலரை இணைத்து இந்தக் கோவில் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பகாலம் தொட்டு பல இடர்கள் ஏற்பட்டுக் கொண்டு இருந்தன. இவைகள் இங்குள்ள பக்தர்களுக்கு நன்கு புரிந்திருக்கும். ஆனால் கும்பாபிஷேகம் செய்து அவற்றை நிவர்த்திக்கலாம் என்ற எண்ணத்தின் விளைவு இன்று பக்தர்களாகிய நீங்கள் எல்லோரும் கலந்து சிறப்பிக்கும் கும்பாபிஷேகமாக மலர்ந்துள்ளது. இனிவரும் வருடங்களில் கோவிலும் அதில் நடக்கும் விஷேசங்களும் சிறப்புற அமைய பிள்ளையார் அருள்பாலிப்பார்.

திருஞானசம்பந்தர் பூம்பாவையை உயிர்ப்பித்த பதிகத்தில்

*பெரும் சாந்தி களையாதோ*
*போதியோ பூம்பாவாய்*

என்று பாடியுள்ளார். பெருஞ்சாந்தி என்பது கும்பாபிஷேகத்தைக் குறிக்கும். ஆக இந்தக் கும்பாபிஷேகம் அனைவருக்கும் சாந்தி கொடுப்பதாக அமையட்டும்.

**க. கணேந்திரன்**
தலைவர்
***(சக்தி கணபதி கோவில்***
***அறங்காவலர் குழு சார்பாக)***
21 ஜுன் 2013



எம் ஆலய தொண்டர்களே, பக்த கோடிகளே மற்றும் நலன் விரும்பிகளே!

''கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்பதற்கு இணங்க குறோய்டனில் ஒரு ஆலயம் வேண்டும் என்பதால் தை மாதம் 2002ம் ஆண்டு ஸ்ரீசக்தி கணபதி ஆலயம் தோண்டன்கீத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதை அமைக்க குறோய்டன் வாழ்மக்கள், வர்த்தக ஸ்தாபனங்கள், தொழில்முறை வல்லுநர்கள், நலன் விரும்பிகள் உதவிகள் வழங்கினார்கள்.

எமது ஆலயம் 11 வருடங்கள் தாண்டி 12ம் வருடத்தில் எத்தனையோ சவால்களைச் சந்தித்து முன்னோக்கிப் போய் கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் தொண்டர்களினதும் அடியார்களினதும் கடின உழைப்பும் விடாமுயற்சியும்தான்.

ஒரு சில தீய சக்திகள் தமது சொந்த நன்மைக்காக ஆலயத்தை தம் சொந்தமாக்க முயன்றதையும் முறியடித்து குறோய்டன் வாழ்மக்களின் நன்மைக்காக ஆலயத்தை நடத்தி வருகிறோம்.

அறங்காவலர் சபையோடு கடந்த வருடம் (2012) ஏழு பேர் கொண்ட ஒரு செயற்பாட்டு குழுவை (Management Committee) தெரிவு செய்து ஆலயத்தை நடத்தி வருகிறோம். அத்துடன் ஆலயம் (Shree Sakthy Ghanapathy Temple) என்னும் Charity Organisation ஆக பதிவு பண்ணப்பட்டுள்ளது. (Charity No.1141833)

எமது நோக்கம் தெய்வ வழிபாட்டுடன் சிறுவர்களுக்கு எமது கலை, கலாச்சாரம், மொழி, மற்றும் சமயக் கல்வியைக் கற்பிப்பதும், முதியோர்களுக்கு வேண்டிய உதவியையும் செய்வதே. இதைவிட எமது தாய்நாட்டில் துன்புறும் எம் மக்களுக்கும், உறவுகளுக்கும் உதவி செய்வதும் கூட.

எமது ஆலயத்தின் சில சிறப்பம்சங்கள்:

ஆங்கில வருடப்பிறப்பு, தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு வருடாந்தர திருவிழா, சிவராத்திரி, நவராத்திரி, கந்தசஷ்டி, பிள்ளையார் கதை போன்றவை. முக்கியமாக ஐரோப்பாவிலேயே மிக உயரமான சப்பறம் எமது ஆலயத்தில் தான் அமைக்கப்பட்டு வருகிறது. இத்துடன் ஆவணி சதுர்த்தி திதி அன்று எம்பெருமான் அலங்காரத்தேரில் வீதி உலாவருவதும் கண் கொள்ளாக் காட்சி.

கடந்த மூன்று மாதங்களாக கிட்டத்தட்ட £100,000 செலவில் ஆலயம் முற்றாக எல்லா வசதிகளுடனும் புனர் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு பணம், பொருள், சரீர உதவிகள் தந்துதவியவர்களுக்கும், வேண்டியபோது அறிவுரைகள் வழங்கியவர்களுக்கும் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன். அத்துடன் சிற்ப, மற்றும் கட்டிட வேலைகளுக்கு உதவியவர்களுக்கும் நன்றி. மொத்தத்தில் இக்கும்பாபிஷேகத் தினம் சிறப்பாக நடக்க உதவியாக இருந்த அனைவருக்கும் ஸ்ரீசக்தி கணபதியின் அருளும் ஆசிர்வாதமும் கிடைக்க வேண்டுகிறேன்.

ஆலயம் தொடர்ந்தும் வளர உங்கள் ஆதரவு என்றும் வேண்டும். இது உங்கள் ஆலயம், உங்களுக்காக அமைக்கப்பட்ட ஆலயம். அதை சிறப்பாக நடத்த வேண்டியது எங்கள் எல்லோரதும் கடமை.

***''மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்''***

அன்புடன்

**கனகரத்தினம் பரமநாதன்** B.Sc., ABAC (Dip), ACMA
***அறங்காவலர் / செயற்பாட்டு குழு***
***ஸ்ரீ சக்தி கணபதி ஆலயம்***



# பிள்ளை - யார்?

உங்கள் வீட்டுப் பிள்ளை, ஊரார் ஊட்டி வளர்த்த பிள்ளை. உங்கள் திருமண விழாக்களிலும் பிறந்தநாள் கொண்டாட்டங்களிலும் பூப்புனித நீராட்ட விழாக்களிலும் புதுமனைப் புகுவிழாக்களிலும் பிள்ளைகள் பரீட்சைகளில் தேர்ச்சி பெறவும், வியாபாரங்கள் ஆரம்பிக்கவும் வேதனைகள் சோதனைகளில் இருந்து விடுபடவும், ஏன் துயர நிகழ்விலும் சாந்தி. இன்று அவருக்கு ஓர் அழகிய ஆலயம் (வீடு) இப் பிள்ளை-யார் உங்கள் வீட்டு மூத்த பிள்ளை. அவருக்கு நீங்கள் வீடு கட்ட நினைத்தால் அது முடியாத காரியம் இல்லை. ஒரு தனி நபரிடம் கேட்கவில்லை. குறோய்டன் மற்றும் உலகெங்கும் வாழும் சைவ அடியார்களிடமும் கேட்டோம். அதுதான் 'பாரதிதாசன்' சொன்ன வசனத்தையும் எழுதியிருந்தோம். பணம் மிகுந்தவர் பொற்குவை தாரீர்! நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்! என்று. ஆனால் நிதி குறைந்தவர் மட்டும்தான் காசுகள் தந்தார்கள். அதுவும் அற்றோர் தொண்டுகள் செய்வீர் என்றோம். ஆறு பேர் மட்டும் தான் தொண்டுகள் செய்தார்கள். மற்றையோர் நல் வாய்ச்சொல் அருளீர் என்றோம். வசை பாடச் சொல்லவில்லை. ஊக்கமும் அளிக்கும் உற்சாகமான வார்த்தைகளையே எதிர்பார்த்தோம். ஆறு பேர் 12 வருடங்களுக்கு முன்பு கட்டிய ஆலயத்தால்தான் இன்று நாம் பல பயன்களை அடைகின்றோம். அதே பாணியில் இனிவரும் எதிர்கால இளம் சந்ததியினரை நினைத்தே இவ்வாலயத்தைப் புனரமைப்பது எங்கள் பிள்ளைகள் சைவத்தை மறக்காமல் இருப்பதற்கே.

இந்தப் புலம்பெயர் நாட்டில் மீண்டும் எதிர்காலப் பன்னிரண்டு வருடங்களுக்கு இப்பணியைத் தொடர்ந்து செய்து வைத்துள்ளோம். அப்போது நான் இருப்பேனா? நான் அடிக்கடி கூறுவேன் முள்ளி வாய்க்காலில் கொண்டுபோய் எங்கள் பிள்ளையை வைத்துள்ளீர்கள் என்று. ஆனால் முடிவு அதுவல்ல. நிச்சயம் புதுப்பொலிவுடன் புதிய ஆலயத்தில் அவர் குடி புகுவார். பணமிருக்கும் மனிதரிடம் தர மனம் இருப்பதில்லை. தருவதற்கு மனம் இருக்கும் மனிதரிடம் பணம் இருப்பதில்லை. ஆலயத்திற்குத் தொண்டு செய்பவர்கள் மனச்சுத்தியுடன் செய்தால் நிச்சயம் தான் நினைத்தது நடந்தேறியே தீரும். பதவிக்கும், பெயருக்கும், புகழிற்கும், பாராட்டிற்கும் ஆசைப்படும் இடம் ஆலயமல்ல. நம்பிக்கை வைத்துத் தும்பிக்கையானைத் தொழுங்கள். தொண்டு செய்யுங்கள். நிச்சயம் வெற்றி கிடைக்கும்.

எம்மையும் பிள்ளையாரையும் நம்பித் தொண்டுகள் செய்த நல் உள்ளங்களுக்கும் பொருள் உதவி செய்தவர்களுக்கும் இனிமேல் செய்யப் போகின்றவர்களுக்கும் நன்றி.

'எல்லாப் புகழும் இறைவனுக்கே'

ஆண்டவன் சொல்கின்றான் அசோகன் செய்கின்றான்.

# ஆலயத்தின் விசேட தினங்கள்

பிரதி மாதம் வெள்ளிதோறும் மாலை பிள்ளையாருக்கு சிறப்பு பூஜையும் அம்மனுக்கு லலிதா ஸஹஸ்ரநாமர்ச்சனையும் நடைபெறும். மேலும் சுக்ல சதுர்த்தி, சங்கடஹர சதுர்த்தி, ஷஷ்டி, பிரதோஷம், பௌர்ணமி மற்றும் கார்த்திகை போன்ற தினங்களில் அந்தந்த தெய்வங்களுக்கு உரிய ''சிறப்பு பூஜை'' ஆராதனைகளும் நடைபெறுகிறது.

குறிப்பாக சதுர்த்தி தினங்களில் இரவு விநாயகரின் ஆலய வீதி பவனி நடைபெறும். சங்கடஹர சதுர்த்தியில் 108 சங்காபிஷேகம் நடைபெறும். பௌர்ணமியில் சத்திய நாராயண பூஜையானது நடைபெறும்.

## மஹோற்ச்சவம்

ஆலயத்தின் வருடாந்தர மஹோற்ச்சவமானது, ஆவணி மாதத்தில் பிள்ளையார் சதுர்த்தி என்று போற்றப்படுகின்ற ஆவணி சதுர்த்திக்கு ஒன்பது நாட்கள் முன்பாக கொடியேற்றத்துடன் துவங்கி ஆகம விதிப்படி யாக தரிசனம், தம்ப பூஜை, வசந்த மண்டப பூஜை மற்றும் வீதி உலா காட்சியுடன் நடைபெற்று ஆவணி சதுர்த்தி அன்று தேர்த்திருவிழாவானது நடைபெறும். மறுநாள் தீர்த்தம், கொடியிறக்கமும் நடைபெற்று தொடர்ந்து ஒவ்வொரு நாளும் பூங்காவனம், ஊஞ்சல், பைரவ மடையுடன் பூர்த்தியடைகிறது.

சப்பரத் திருவிழாவானது ஆலயத்தின் வெளி வீதியில் நல்லூர் சப்பரத்திற்கு நிகரான தோற்றப் பொலிவுடனும் இன்னிசை கச்சேரிகளுடனும் வெகு விமரிசையாக கொண்டாடப்படுவது ஐக்கியராச்சியத்தில் எங்கும் காணக் கிடைக்காதது ஆகும்.

அதே போன்று ஆவணி சதுர்த்தி என்று வருகிறதோ அன்றய தினத்திலே நடைபெறுகின்றதான ஸ்ரீ ஆதிகணபதிப் பெருமானின் திருத்தேர் பவனியை காண கண்கோடி வேண்டும்.

மேலும் தமிழ் வருடப் பிறப்பு, வைகாசி விசாகம், ஆடிப்பூரம், நவராத்திரி, கௌரிகாப்பு விரதம், தீபாவளி பண்டிகை, கந்தஷஷ்டிப் பெருவிழா, கார்த்திகை தீபத்திருவிழா, பிள்ளையார் பெருங்கதை, திருவெம்பாவை, வைகுண்ட ஏகாதசி, தைப்பொங்கல், மஹாசிவராத்திரி, வசந்த நவராத்திரி போன்ற விசேட விரத நாட்களிலும், பண்டிகைகளிலும், சிறப்பு பூஜைகள், யாகங்கள், ஆலய வீதி உலா காட்சிகளும் நடைபெறும்.

# மானிப்பாய்
# மருதடி விநாயகர் ஆலயம்



மருதடி விநாயகரின் பஞ்சமுகத் தோற்றம்

ஈழத்திருநாட்டில் விநாயகர் திருக்கோவில்களில் முதன்மைத் தலமாக விளங்குவது மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம். தமிழ் வேந்தர் காலத்துத் திருத்தலங்களிலொன்றாகப் போற்றப்படும் இத்தலம் பற்றிய பல்வேறு ஐதீகவரலாறுகள் கூறப்படுகின்றது. அருட்சிறப்பும் அற்புதமும் நிறைந்த மருதடி வினாயகர் ஆலயம் தனியாரின் பராமரிப்பில் பராமரிக்கப்பட்டு சென்ற நூற்றாண்டில் பொதுக்கோவிலாகப் பிரகடனம் செய்யப்பட்டு பொதுமக்களால் தற்போது நிர்வகிக்கப்பட்டு வருகிறது. காலம் தவறாத பூசை, வழிபாட்டு ஒழுங்கு, திருப்பணி வேலைகள், அறநெறிப்பாடசாலை என ஆலயநிர்வாகம் மிகவும் சிறப்பாக ஆலயத்தை நிர்வகித்து வருகின்றது. ஆண்டு தோறும் சித்திரை மாதம் புதுவருடப் பிறப்பன்று பல லட்சம் பத்தர்கள் புடைசூழ விநாயகப் பெருமானின் திருத்தேர்விழா நடைபெறும். மகிமை மிக்க மருதடியான் திருவருளைப் பெறுவதற்காக பல ஊர்மக்களும் நேர்த்திகளை நிறைவேற்ற இத்தலத்தை நோக்கி தினமும் வருவர்.

இப்புனித தலத்தின் கட்டட அமைப்பு நூற்றாண்டு கடந்த சுண்ணாம்பு கற்களாலான நிர்மாணமாக அமைந்திருந்தது. ஆலய வசந்த மண்டபம் மற்றும் பரிவார ஆலயங்கள் சீரான அமைப்பில் அமைக்கப்படாது உட்பிரகாரம் மிகவும் நெருக்கமாகவும் பத்தர்களுக்கு முழுமையாக பூசை வழிபாடுகளை தரிசிப்பதற்கு முடியாத நிலையும் காணப்பட்டது. இந்நிலையில் பழம்பெரும் இத்தலத்தை சிறப்பாக நெறிமுறைக்கு அமைய விசாலமாக அமைக்க வேண்டும் என்ற ஆவல் அடியார்கள் உள்ளத்தில் வியாபித்தது. ஆலய தர்மகத்தாசபை நாடறிந்த சிவாச்சாரியார் சமயப் பெரியோர்களை நாடி ஆலோசனை பெற்றனர். இந்திய சிற்பக் கலைஞர்களை அழைத்து சிவாகம நெறிமுறைக்கு அமைய கருங்கற்களாலான கருவறை அமைப்பபைக் கொண்ட அசையா நிலைக் கோவிலை உருவாக்க திட்டமிட்டனர்.

# மருதடிஆலயத்தின் முன்னைய தோற்றம்



அனுபவ ஞானமுடைய அகவை எண்பது நிறைந்த கீரிமலை சிவசிறீ நகுலேஸ்வலக் குருக்கள், கோப்பாய் சிவசிறீ வ. பரமசாமிக் குருக்கள் முன்னிலையில் ஆலய புனர் நிர்மாணப் திருப்பணி அங்குரார்பணம் நடைபெற்றது. ஆலய பிரதமகுரு சிவசிறீ ஜெயக்குமாரக்குருக்கள் பாலஸ்தாபனக் கிரியைகளை சிறப்பாக நடாத்தி பாலாலயத்தில் விநாயகப் பெருமானையும் பரிவாரத் தெய்வங்களையும் இருத்தி திருப்பணிக் கடமைக்காக ஆலயத்தை ஒப்படைத்தார். மாமல்லபுரச் சிற்பக் கலைஞன் செ. ஞானமூர்த்தி அவர்களின் தலமையில் இரவு பகலாக பிரமாண்டமான திருப்பணி வேலைகள் நடைபெற்ற வண்ணமாகவுள்ளது. இதுவரை நடைபெற்ற திருப்பணிகள் இந்தியாவிலுள்ள சோழர்காலத்திருக்கோவில்களின் வடிவம் போல் அடியார்களின் உள்ளத்தை ஆட்கொள்வதை உணரலாம். புதிய ஆலய புனரமைப்பு மிகவும் விசாலமான அமைப்பாக காணப்படுகிறது. யாழ் குடாநாட்டில் சிற்பம் நிறைந்த பெருங்கோவில் என்ற தனித்துவத்தை மருதடியான் திருக்கோவில் பறைசாற்றும் என அனைவரும் கருதுமளவுக்கு நிர்மாண அமைப்பு எழுச்சி தருகின்றது.

**செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன**



# கும்பாபிஷேக க்ரியா விளக்கம்

ப்ரதிஷ்டா பூஷணம் சிவஸ்ரீ ஐ. கைலாஸநாத குருக்கள்
***நயினாதீவு***

அனாதி மல முத்த சித்துருவாகிய சிவபெருமான் கற்பனை கடந்த சோதியாகினும், அனாதி மல பெத்தர்களாகிய ஆன்மாக்கள் மீது கொண்ட, கருணையினால் அவர்களுக்கு அனுக்ரஹம் செய்வதற்காக ஸர்வ தேவதா ஸ்வரூபமாகிய கும்பத்தில் எழுந்தருளச் செய்து, அந்த கும்பத்திற்குரிய பூஜைகளை செய்து, இறைவனுடைய திருவுருவிற்கு அபிஷேகம் செய்தலே கும்பாபிஷேகமாகும். இதனை குடமுழுக்கு என்றும், திருக்குட நன்னீராட்டு விழா என்றும் கூறுவார்கள்.

கும்பாபிஷேகமானது ஆகமங்களில் 4 வகையாகக் கூறப்படுகிறது.

அவையாவன:-
1. ஆவர்தனம்
2. அனாவர்தனம்
3. புனராவர்தனம்
4. அந்தரிதம்

1. ஆவர்தனம்

முதலில் சுவாமியை பாலாலயத்தில் வைத்து பூஜித்து, புதிய இடத்தில், புதியதாக ஆலயம் அமைத்து கும்பாபிஷேகஞ் செய்வதே ஆவர்தனம் ஆகும்.

2. அனாவர்தனம்

வெகு காலத்திற்கு முன் கோவில் கட்டி, விமானம் கோபுரம் முதலியன பாழடைந்து, பூஜை இல்லாமல் சில காலம் இருந்த கோயிலை, சீர்திருத்தம் செய்து கும்பாபிஷேகஞ் செய்வது அனாவர்தனம் ஆகும்.

3. புனராவர்தனம்

கோபுரத்தில் உள்ள பாவைகளும், விமானத்து வர்ணங்களும் விக்ரஹங்களும் பழுதடைந்தால் சீர்திருத்தம் செய்து கும்பாபிஷேகம் செய்தலே புனராவர்த்தனமாகும்.

4. அந்தரிதம்

ஆலயத்தில் திருடன், சண்டாளன், நாய் ஆகியவை உள்ளே வந்தால் செய்யக் கூடியது அந்தரிதம் ஆகும். இதற்கு நாள், நக்ஷத்ரம் பார்க்கத் தேவையில்லை.

அனுஜ்ஞை

ஆலயத்தில் உள்ள மூல விநாயகருக்குப் பூசனை செய்து, திருக்குடமுழுக்குச் செய்யத் திருவருள் பாலிக்கும்படி வேண்டுதல் செய்தலாகும். இதை உத்தரவு பெறல் என்று கூறுவார்கள்.



### ப்ராம்ஹண அனுஜ்ஞை

தனது குருவினிடத்தும், சர்வ சாதகர், சர்வ போதகர் இடத்திலும், ப்ராம்ஹணர்களிடத்தும் திருக் குடமுழுக்கு எனும் கும்பாபிஷேகம் செய்ய அனுமதி பெறுதலே ஆகும்.

### கணபதி ஹோமம்

திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழாவில் நடக்கக் கூடிய பூஜைகளும், வேள்விகளும் இடையூறு இன்றி நடப்பதற்காக முழுமுதற் கடவுளான விநாயகரை பிரார்த்தித்து செய்யக் கூடிய முதல் வேள்வியே கணபதி ஹோமம் என்பதாகும்.

### தன பூஜை

கும்பாபிஷேகத்திற்கு என சேகரிக்கப்பட்ட திரவியங்களில், பலவகை சேர்க்கையினால் ஏற்படும் குற்றம் நீங்குதற்கு, அதை சுத்தப்படுத்தி, சிவரூபமாக்கி திருமகளை வழிபட்டு, மேன்மேலும் திரவியம் பெருகும் படி ப்ரார்த்தித்து, இன்னபகுதிகளுக்கு இன்னபாகம் என்று பிரித்து அதை பதினொருபாகம் பண்ணி அதில் 11 ருத்திரர்களைப் பூஜித்து, தர்ம கர்த்தாவின் கையில் ஒப்படைத்து, செலவு செய்ய அறிவித்தலே ஆகும்.

### கிராம சாந்தி

***ஸர்வலோக ஹிதம் புண்யம் வ-க்ஷ்யேகந்து ஷடானன!***
***க்ராம நூதன காலேன்து க்ஷேத்ரே வா மந்திரேபி வா!***
***ப்ரதிஷ்டோத்ஸவ காலே வா பூஜாம்க்ருத்வா விசேஷத: !!***

என்று காரணாகமத்தில் கூறப்படுகிறது.

### விளக்கம்

சகல லோக சுகத்திற்காகவும், கிராம, நகரங்களில் எட்டு திக்குகளில் உள்ள அசுர, ராக்ஷஸ, பிரமராக்ஷஸர்களைத் திருப்தி செய்து அவர்களை வெளியேறச் செய்து எட்டு திக்குகளிலும் அஷ்ட பைரவர்களை பூஜித்தலே ஆகும்.

### பிரவேச பலி

ஆலயத்தின் எட்டு திக்குகளிலும் உள்ள, யக்ஷ ராக்ஷஸ, பூத, பிசாச ப்ரம்ஹராக்ஷஸர் முதலான எட்டு துர்தேவதைகளையும், மலை, சமுத்ரம், நதி, முச்சந்தி முதலான எட்டு இடங்களுக்கு சென்று வசிக்கும்படி கட்டளை இட்டு ஆலய முற்றில் மஹாலக்ஷ்மியை வீற்று இருக்கச் செய்து பூஜித்தலே பிரவேச பலி என்பதாகும்.

### ரக்ஷோக்ன ஹோமம்

அஸுர, ராக்ஷஸர்களின் இடர்கள் நீங்குவதற்காக, மூன்று மேடைகள் அமைத்து நடு மேடையில் கும்பம் வைத்து, ரக்ஷோக்ன தேவதையை வடவாகுகாக்னிக்கு சமமாகப் பாலித்துப் பூஜை செய்து, தென்புற மேடையில் வெள்ளை வஸ்திரம் இட்டு தேங்காய் ஒன்று வைத்து, வடபுற மேடையில் சிவப்பு வஸ்த்ரம் வைத்து, அதன் மேல் அரிவாள் வைத்து, தேங்காயில் சிவனையும், அரிவாளில் கட்கேச்வரரையும் அரிவாளைச் சுற்றி (அஷ்ட) எட்டு பைரவர்களையும் பூஜித்து அவர்களுக்கு உரிய திரவியங்களாலும், சமித்தாலும் ஹோமம் செய்து பிறகு ஸம்யோஜித்துக் கும்ப ஜலத்தை ஆலயத்தை சுற்றித் தெளித்தலே ரக்ஷோக்ன ஹோமம் ஆகும்.

### திசா ஹோமம்

நான்கு திசைகளிலும் முறையே பாசுபதாஸ்த்ரம், அகோராஸ்த்ரம், ப்ரத்யங்கிராஸ்த்ரம், சிவாஸ்த்ரம் முதலிய அஸ்த்ரங்கயைப் பூஜித்துக் காவல் புரியும்படிக் கட்டளை இடுதலே திசா ஹோமம் ஆகும்.

### வாஸ்து சாந்தி

கும்பாபிஷேகத்திற்கு உரிய யாகசாலையையும், ஆலயத்தையும் சுத்தி செய்யும் பொருட்டு அதில் உள்ள அழுக்குகள், பைசாசத்தன்மை முதலியவை நீங்குவதற் காகவும், தேவகார்யத்துக்கு உதவுவதற்காகவும், அயன் முதலிய 53 தேவர்களைப் பூஜித்து, அதற்குரிய பலி கொடுத்து பூமியில் உள்ள தோஷங்களை ஒரே உருவமாக்கி பூசணியை அதே போன்று நினைத்து, ஹோமம் செய்து பின் பூமிக்கு அதிபதியான ப்ரம்ஹாவின் கட்டளையால் பரிசுத்தமானதாக பாலித்தலே வாஸ்து சாந்தியாம். இதை கும்பாபிஷேகம், பாலஸ்தாபனம், யாக மண்டப கல்பனம், கோபுரம், தடாகம், வீடு, உற்சவ காலங்கள் போன்றவைகளில் அவசியம் செய்ய வேண்டும்.

### கோ பூஜை

வேள்வியின் அங்கமான பஞ்சகவ்யம் என்று கூறும் பூஜைக்கு தேவையான ஐந்து திரவியங்களைத்தரவல்லதும், பதினான்கு லோகங்களிலும் உள்ள தேவதைகள் மற்றும் நதிகள் முதலானவற்றின் வசிப்பிடமும் ஆன பசுவைப் பூஜித்தலே கோ பூஜை ஆகும்.

### ம்ருத்ஸங்கிரஹணம்

கும்பாபிஷேகத்தால் உலகத்தில் நிகழும் சுபாசுப பலன்களை பரீக்ஷித்து அறியவும், அதற்கு ஏற்றதாக நாம் செய்யும் காரியம் நலமே வளர்ச்சி உறவும், முளையிடு வதற்காக பூமா தேவியை விதிப்படிப் பூஜித்து மண்ணை சேகரித்து வருதலே ம்ருத்ஸங்கிரஹணம் ஆகும்.

### அங்குரார்ப்பணம்

நாம் தொடங்கும் காரியம் நலமே வளர்ச்சிபெறும் பொருட்டு நெல் முதலிய தானியங்களை பாலில் ஊற வைத்து ஒஷதி சூக்தம் ஜபித்து, அம்ருதேச்வரரான சந்திரனை பூஜித்து தானியங்களை முன் சேகரித்த மண்ணால் நிரப்பப்பட்ட பாலிகையில் முளையிடுதலே அங்குரார்ப்பணம் என்பதாகும்.

### ரக்ஷா பந்தனம்

இந்த கும்பாபிஷேகமானது மிகவும் சிறப்புறவே நடைபெறுவதற்காக ஆசார்யர் எடுத்த குறிக்கோளிலும், நடைபெறும் பூஜா கார்யங்களில் இடையூறு நேராமல் இருக்கவும், வெள்ளை முப்புரிநூலில் மஞ்சள் தடவி அதில் எட்டு நாகங்களையும் பூஜித்து பின்னர் பூஜை

செய்யக்கூடிய ஆசார்யர்களுக்கும், இறைவிக்ரகங்களுக் கும் காப்புக்கட்டுதலே ரக்ஷாபந்தனம் என்பதாகும்.

### யாகசாலை தானிய ஸ்தாபனம்

சப்த தாதுக்களின் மயமான தானியங்களை யாகசாலையில் வேதிகையின் மேல் பரப்புதல் தானிய ஸ்தாபனம் ஆகும்.

### பிரசன்ன அபிஷேக பூஜை

ஆலய மூர்த்தியில் எழுந்தருளியிருக்கும் ஒளி மயமான இறைவனை நடைபெற இருக்கும் கும்பாபிஷேகத்தின் பொருட்டு முன்னிற்க வேண்டிப் ப்ரார்த்தித்தல் ப்ரஸன்னாபிஷேகம் ஆகும்.

### கட ஸ்தாபனம்

ஸர்வதேவதா ஸ்வரூபமான இடத்தில், நூல் சுற்றி, நீரால் நிரப்பி, வாசனை திரவியங்கள் இட்டு, மாவிலை, தேங்காய் வைத்து வஸ்த்ரம் சாற்றி கூர்ச்சம், யஜ்ஞோபவீதம், சந்தனம் முதலியன சாற்றி அலங்கரிக்கப் பட்ட கும்பத்தை மாம்சமாகவும், நீரை ரத்தமாகவும், ரத்னங்கள் தாதுக்களாகவும், நூலை நாடியாகவும், வஸ்திரத்தை தோலாகவும், மந்திரங்களை மூச்சுக்காற்று போன்றும், கூர்ச்சத்தை தலையாகவும் பாவித்து கும்பத்தை ஸ்தாபனம் செய்தலே கட ஸ்தாபனம் ஆகும்.

### கலாகர்ஷணம்: கலை இறக்குதல்

முன்னர் கூறியபடியே அலங்கரிக்கப்பட்ட கும்பத்தில் கருவறையில் அமைந்துள்ள பிம்பத்தில் உள்ள இறைவனது ஒளி வடிவான இறைச் சக்தியை ஆகமத்தில் கூறியபடியே ந்யாஸங்கள் மற்றும் பூஜைகள் செய்து கும்பத்திற்கு வருமாறு ஆகர்ஷித்தலே கலாகர்ஷணம் ஆகும். இதை கலை இறக்குதல் என்பர்.


### யாத்ரா ஹோமம்

கும்பத்தில் எழுந்தருளியுள்ள இறைவனை, யாகசாலைக்கு எழுந்தருளச் செய்யும்போது, வழியில் எந்த வித இடையூறும் ஏற்படாமல் இருப்பதற்காகச் செய்யப்படுவதே யாத்ரா ஹோமம் ஆகும்.

## யாகசாலைப் பிரவேசம்

### யாகசாலை வேதிகார்சனம்

கலா மயமான இறைவன் எழுந்தருளியுள்ள கலாமயமான யாகசாலையின் நான்கு துவாரங்களையும் பூஜித்து, பின்னர் உள்ளே நான்கு கலைகள், த்ருதீயாவரண தேவர்கள், சதுர்தா வரண தேவர்கள், வாஸ்துப்ரம்ஹா, மண்டபரூப மஹாலக்ஷ்மீ, யஜ்ஞரக்ஷ மஹாகணபதி, ஸதாசிவர் முதலான ஸப்தகுரு போன்றோர்களையும் சேர்த்து 27 கும்பங்களாக விளங்கும் ஸப்தவிம்சதி கும்பங்களைப் பூஜித்து, ஞானவாள் ஏந்திய யாகேச்வரர் யாகேச்வரியையும், எட்டு திக்குகளிலும் எட்டு பைரவரையும் பின்னர் இதர தேவர்களையும் பூஜித்து, பிறகு வேதிகையின் மேல் உள்ள இறைவனுக்கு அனந்தாஸனம் ஸிம்ஹாஸனம், யோகாஸனம், பத்மாஸனம், விமலாஸனம் என்னும் ஐந்து ஆசனங்களை பூஜித்து அதன் மேல் இறைவனை பீடசக்தி மற்றும் லயாங்க, போகாங்க தேவதைகளுடன் பூஜித்தலே யாகசாலா பூஜா மற்றும் வேதிகார்சனம் ஆகும்.



### ஹோமம்

எண் குணத்தராகிய பெருமானை அக்னியில் தனித் தனியே பிரித்து நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா என்ற எண்வகையாக உரிய பூஜைகளைச் செய்து அக்னிக்கு உண்டான ஆஹுதிகளை அளித்துப் பூஜித்து கும்பத்தில் எழுந்தருளிய இறைவனை அக்னியிலும் எழுந்தருளச் செய்து அதற்கு உண்டான ஆஹுதிகளை அளித்து விசேஷ திரவியங்களை அளித்தலே ஹோமம் ஆகும்.

### யந்திர ஸ்தாபனம்

யந்திரம் என்பது ஒரு வித அடையாளம் அல்லது முத்திரை. அதாவது மந்திர சாஸ்திரங்களில் கூறியபடி கோடுகள் அமைத்து அக்ஷரங்களை எழுதி அந்த மந்திரங்களை லக்ஷ-க்கணக்கில் உருவேற்றி வழிபாடுகள் செய்து ப்ரதிஷ்டை செய்யப்படுகின்ற மூர்த்தியின் அடியில் வைத்தலே யந்த்ர ஸ்தாபனம் ஆகும். (யந்திரம் என்ற சொல்லுக்கு இயக்குவிக்கின்றது என்பதே பொருளாகும்.)

### இரத்தின ஸ்தாபனம்

மாணிக்கம், புஷ்பராகம், கோமேதகம், வைரம், வைடூரியம், நீலம், முத்து, பவளம், மரகதம் என்னும் நவரத்தினங்களை இறைவன் அமரும் பீடத்தின் உள்ளே இட்டு லோக பாலகர்களைப் பூஜித்து பத்மாஸனம் வரை பூஜித்தலே ரத்னஸ்தாபனம் ஆகும்.

### தேவதா ஸ்தாபனம்

கருவறையை பதவிந்யாஸம் எனும் முறையில் பதமாக பங்கீடு செய்து அதனுள் பிம்பங்களை குறிப்பிட்ட இடங்களில் வைப்பது தேவதா ஸ்தாபனம் ஆகும். இதனை அம்சுமதாகமம் விரிவாகவும் விளக்கமாகவும் கூறுகிறது.

### அஷ்டபந்தனம்

எட்டு வகையான மருந்துகள் சேர்த்த இடித்து சுவாமியையும் பீடத்தையும் சேர்த்து பலப்படுத்தி வைக்கும் ஒரு க்ரியை அஷ்டபந்தனம் ஆகும்.

### சாந்தி ஹோமம்

பெருமானை பலரும் தொடும் குற்றம் நீங்க பஞ்சப்ரம்ஹ ஷடங்க மந்திர ஜபம் செய்து, ஹோமம் செய்து அபிஷேகித்தலே சாந்தி ஹோமம் ஆகும்.

### பிம்ப சுத்தி

தீக்ஷாஹீனர்கள் முதலானோரால் ஸ்பர்சிக்கப்பட்ட தோஷ நீக்கத்திற்காகவும், உஷ்ண சாந்திக்காகவும்,

பிம்பத்திற்கு சுத்தம் உண்டாவதற்காகவும் உதகம் (நீர்), கந்தம் (சந்தனம்), புஷ்பம் (பூ), காஷாயம், ம்ருத் (மண்), பீஜம் (விதை) பல்லவம், ரத்தினம், லோகம், தாது, அஸ்திரம், ஓஷதி, கவ்வியம், குசம், ச்ருங்கம், முதலிய 16 வகையான திரவியங்கள் நிரம்பிய கலசங்களைப் பூஜித்து ஹோமம் செய்து முறைப்படி இறைவனுக்கு அபிஷேகித்தலே ஆகும்.

### பிம்ப ரக்ஷாபந்தனம்

கும்பாபிஷேக நிமித்தம் மூர்த்திகளுக்கு காப்புக் கட்டுதல் பிம்பரக்ஷாபந்தனம் ஆகும்.

### பூர்வ ஸந்தானம்

மூர்த்திக்கு பக்கத்தில் ஆசாரியர், சாதகர் அமர்ந்து ஆதார சக்தி முதல் பஞ்சமாவரணம் வரைப் பூஜித்து கலை முதல் மந்திரம் இறுதியாகச் சாங்கோபாங்கமாக அவயவபேதங்களாய் பிம்பத்திற்கு தர்ப்பை நுனியில் நியாசம் செய்தல் பூர்வஸந்தானம் ஆகும்.

### ஸ்பர்சாஹுதி

யாகத்தில் உள்ள மூர்த்தி, மூர்த்தீச்வரன் மூர்த்தீச்வரி மந்திரம் ஆகியவைகளைப் பூஜித்து ஹோமம் செய்த முறைப்படி, மூல மூர்த்தியிடம் சென்று அந்தந்த ஸ்தானங்களில் முறையே தொடர்பு படுத்தலாம்.

### ஸ்தோத்திர வந்தனம்

ஆசார்யர், மூர்த்திபர்கள் செய்த தொடர்புகளினால் கூடுதல், குறைவு ஏதாவது ஏற்பட்டால் அவைகளை கருணையினால் பூர்த்தியாக்கி அருள் செய்ய வேண்டும் என்று ஸ்தோத்திரங்களால் வணங்குதல் ஸ்தோத்திர வந்தனம் ஆகும்.

### ஆசார்ய பூஜை

குருமாருக்கும், சர்வசாதகர்களுக்கும் உடை, உத்தரீயம், உருத்திராக்ஷம், மோதிரம், விபூதிப்பை முதலிய உபசாரங்கள் கொடுத்து மகிழ்வித்தலாம்.

### மஹா பூர்ணாஹுதி

முன் கூறியபடி குண்டங்களில் பூஜித்து ஹோமம் செய்த மூர்த்தீச்வராதிகளை ஒன்று சேர்த்து ஹோமத்தை பூர்த்தி செய்வதற்காக செய்யப்படும் க்ரியையே பூர்ணாஹுதி ஆகும்.

### ஸம்யோஜனம்

இறையருள் நிரம்பிய யாகசாலையில் உள்ள குண்டங்களில் பூஜிக்கப்பட்ட இறைச்சக்தியை முறையாக கும்பத்தில் சேர்ப்பித்தல் ஸம்யோஜனம் என்பதாம்.

### க்ரஹப் பிரீதி

குடமுழுக்கு வேளையில் நமது அறிவிற்கு அப்பாற்பட்ட குற்றங்களை நீக்குதற்பொருட்டு நவக்ரஹங்களுக்கான தானங்களைச் செய்தலே க்ரஹப் பிரீதி ஆகும்.

### மூர்த்தி ஸம்யோஜனம்

இறையருள் நிரம்பிய கலசத்தை திருக்கோவிலுக்குள் கொண்டு சென்று குடத்தில் நிறைந்த திருவருளை ஆன்ம ஒளியுடன் கலந்து விக்கிரகத்தில் சேர்த்தல் மூர்த்தி ஸம்யோஜனம் ஆகும்.

### மஹா கும்பாபிஷேகம்

அர்ச்சகரின் தலையில் ப்ரதான கடத்தை வைத்து, சர்வசாதகர், பிரதானகுரு, மூர்த்திபர்கள் மற்றும் பக்தஜனங்கள் சூழ புஷ்பாஞ்சலி, வேதம், தோத்திரம், தேவாரம், சங்கு, மணி, மங்களவாத்தியம், பேரி போன்ற கோஷங்களுடன் சிவநாம பஜனை செய்து கொண்டே, ஆலயத்தை மெதுவாக வலம் வந்து, மூலாலயம் சென்று, ஆசனத்தின் மீது கும்பங்களை வைத்து, கும்பத்திற்கும் மூர்த்திக்கும் நாடீ சந்தானம் செய்து, தொடர்பேற்படுத்தி, உரிய முகூர்த்தத்தில் இறைவனை ஆவாஹனம் செய்து மூலமந்திரம் உச்சரித்துப் பதமந்திரத்துடன் பக்தர்கள் ''ஹர ஹர'' என்ற சத்தம் முழங்க வேத, ஆகம, புராண கோஷங்களும் ஒலிக்க, மகா கும்பாபிஷேகத்தை செய்து, எஜமானர்களும், சகல ஜீவ ராசிகளும் உயர்கதி அடைய வேண்டும் என்று ப்ரார்த்தித்துக் கொண்டு வர்த்தனீ கும்பத்தை ஆவுடையாருக்கும், வித்யேச்வரக் கும்பங்களை ஆவுடையாரைச் சுற்றிலும் அபிஷேகித்து மகா நைவேத்ய உபசாரம் செய்து அகண்டதீபம் வைத்துப் பிரார்த்திக்க வேண்டும். பின்னர் தேவர்களின் பூஜைக்காக மூன்றே முக்கால் நாழிகைக்கு கதவை அடைத்து வைக்க வேண்டும்.

### தச தர்சனம்

கதவைத் திறந்து பசு, ஆசார்யர், வேதபாரகர் கண்ணாடி, பூர்ணகும்பம், தீபம், கன்னிகை, சன்னியாசி, சுமங்கலி, எஜமானர், பக்தஜனம் ஆகியோரைச் சகல வாத்திய உபசாரங்களுடன் தனித்தனியே தரிசிக்கச் செய்வது தசதர்சனம் ஆகும்.

### மஹாபிஷேகம்

சகலவிதமான திரவியங்களினால் அபிஷேகித்தல் மஹாபிஷேகம் ஆகும்.

### யஜமானர் உத்ஸவம்

எஜமானராகப்பட்ட ஆலய நிர்வாகிகட்கு பூஜை செய்து திருவருட்பிரசாதம் வழங்கல் யஜமான உத்ஸவம் ஆகும்.

### யாக விஸர்ஜனம்

யாகதேவதைகளை திருப்திப்படுத்தி உத்வாஸனம் செய்தல் யாகவிஸர்ஜனம் ஆகும்.

### ஆசார்ய உத்ஸவம்

இக்கும்பாபிஷேகத்தை வெகு சிறப்பாகச் செவ்வனே மந்த்ர க்ரியா முறைப்படி செய்த சிவாச்சாரியர்களுக்கு மரியாதை செய்வித்தல் ஆசார்ய உத்ஸவம் ஆகும்.

### மண்டலாபிஷேகம்

40, 44, 45, அல்லது 48 நாட்கள் வரை இறைவனை தினமும் மூலமந்திர ஜபத்துடன் விசேஷ பூஜை ஜபம் ஹோமம் அபிஷேக ஆராதனை செய்து நிறைவில் சங்காபிஷேகம் செய்தல். மண்டலாபிஷேகம் ஆகும்.

*லோகா: ஸமஸ்தா: ஸுகினோ பவந்து*



# விநாயகர் தத்துவங்கள்

முனைவர் க. கிருத்திகா, தமிழ்த்துறை விரிவுரையாளர்
தருமபுர ஆதீனம் கலைக்கல்லூரி

''கணபதி பூசை கைமேற்பலன்'' என்பது பழமொழி. கணபதி எனப் போற்றப்பெறும் விநாயகப்பெருமானை வழிபட்ட பின்பே அனைத்துச் செயல்களையும், பூசைகளையும், விழாக்களையும் தொடங்குதல் மரபாகும். மேலும், விநாயகர் வணக்கத்துடன்தான் எல்லா நூல்களும் இயற்றப்பெறும். இத்தகு இறைவனுக்குரிய திருப் பெயர்கள் பல. தனக்கு மேல் நாயகர் இல்லாதவராதலால் விநாயகர், அனைத்து கணங்களுக்கும் தலைவராதலால் கணபதி, விக்னமாகிய இடையூறுகளை நீக்க வல்லவராத லால் விக்னேசுவரர், சிவபெருமானது பிள்ளையாதலால் பிள்ளையார். இவ்வாறு பற்பல திருப்பெயர்களால் விநாயகப் பெருமானை அழைத்தல் சிறப்புக்குரியது.

## விநாயகர் திருஅவதாரம்

முன்பொருநாள் சிவபெருமானும், உமையம்மையும் ஓவிய மண்டபத்துள் சென்றனர். அங்கு ஒரு பிரணவ எழுத்து இரு யானைகளின் வடிவமெடுத்துக் கலவி புரிய முயன்றது. இதனைப் பற்றி இறைவனிடம் உமையம்மை வினவினாள். அதற்கு இறைவன் ''உன் பார்வை பட்டதால் ஏற்பட்ட விளைவு என்றார்'' கலவி முடிந்ததும் அவை மீண்டும் பிரணவ வடிவமாயின. அப்போது ஐந்து கைகளையும் முக்கண்களையும் யானை முகத்தையும் உடைய விநாயகர் தோன்றினார். இதனைக் கந்தபுராணம் குறிப்பிடுகின்றது. இந்நிகழ்வைப் ''பறாளை விநாயகர் பள்ளு'' எனும் நூலும்,

*'சக்தியும்சிவ மும்பிடியும் மத*
*தந்தியாகப் புணர்ந்தவந் நாளினில்*
*மத்தமா வதனத்துடன் ஓங்கார*
*வண்ணமாய் வந்தஞானக்குழவி'*

என்று விவரித்துப் பேசுகின்றது.

திருஞானசம்பந்தரும் தனது தேவாரத்தில்

*'பிடியதன் உருஉமை கொளமிகு கரியது*
*வடிகாடு தனதடி வழிபடு மவரிடர்*
*கடிகண கதிவர அருளினன்'*

என்று அதனைச் சிறப்பித்துள்ளமை குறிப்பிடத் தக்கதாகும்

## ஓங்கார வடிவினன்

விநாயகர் ''ஓம்'' எனும் பிரணவத்தை உருவமாகக் கொண்டவர். இப்பெருமானின் காது, தலை, தும்பிக்கை ஆகிய மூன்றும் இணைந்து ''ஓம்'' என அமைகின்றது. இம்மூல மந்திரத்தின் பொருளுக்குரிய வரி வடிவமாக விநாயகர் திகழ்கின்றார். அதனால்தான் ஓங்கார வடிவினன், ஓம் பொருளான், ஓங்காரன், ஓங்காரக்கயமுனி, பிரணவச்சோதி, பிரணவச்சொரூபன் முதலிய பெயர்கள் விநாயகரைக் குறித்து வழங்குகின்றன. மூலப்பரஞ் சுடராகிய விநாயகரைத் ''தாரகப் பிரம்மம்'' என்று கந்தபுராணம் குறிப்பிடுகின்றது. பல்வேறு மந்திரங்களைக் கொண்டிருக்கும் நான்கு வேதங்களின் உச்சியில் உள்ள மந்திரமாயிருப்பது தாரக மந்திரமாகிய பிரணவ மந்திரமே. அதனால்தான் இராமலிங்க அடிகளாரும் ''பெரும் பொருட்கு இடனாம் பிரணவ வடிவில் பிறங்கிய ஒரு தனிப்பேறே'' என விநாயகரை அழைக்கின்றார். மேலும் ஞான உருவமாயிருப்பதால் திருமந்திரம் இவரை ''ஞானக்கொழுந்து'' என்று குறிப்பிடுகின்றது.

## பிள்ளையார் சுழி

பிள்ளையார் சுழி என்பது அகரம், உகரம், மகரம் ஆகிய மூன்றையும் அடக்கியுள்ள நாதப்பிரமமாகிய ஓம் என்னும் பிரணவத்தின் தொடக்க வடிவமாகும். இதிலுள்ள வட்டவடிவம் சிவசக்திபீடம் என்னும் ஆவிடை என்றும், நீண்டு நிற்கும் கோடு மூலத்தம்பம் எனும் சிவலிங்கம் என்றும் சொல்லப்படுகின்றது. இவற்றை முறையே விந்து, நாதம் என்று வழங்குவர். எனினும் எழுதுகோலின் செம்மையைச் சரிபார்ப்பதற்காக ஒரு வட்டமும், கோடும் இட்டனர். அதுவே நாளடைவில் பிள்ளையார் சுழியாயிற்று என எண்ணத் தோன்றுகிறது.

### குட்டிக்கொள்ளுதல்

கை விரல்களை மூடி, கைகளைக் குறுக்காக வைத்து நெற்றிப்பொட்டில் குட்டிக்கொள்ளுதல் வழிபாட்டின் தொடக்கமாகும். கணபதி கயமுகாசுரனை வென்றதும்,. இந்திரன் முதலிய தேவர்கள் ''ஐயனே இதுவரை அசுரனுக்குப் பயந்து தலையில் குட்டிக்கொண்டும் தோப்புக்கரணம் புரிந்தும் வழிபட்டோம். இனிவரும் நாட்களில் அவ்வாறே உம்மையும் வழிபடுவோம்'' என்றனர். இதனை விநாயகர் புராணம் எடுத்துக் காட்டுகின்றது. இது தவறுகளைத் திருத்திக் கொள்ளும் வழியாகும். தமக்குத்தாமே அளித்துக்கொள்ளும் தண்டனையால் மேன்மேலும் தவறு இழைக்காமல் வாழ வகுப்பது இம்முறை. நெற்றிப்பொட்டில் குட்டிக் கொள்வதால் சுறுசுறுப்புடன் பணிபுரியும் நிலை ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கவொன்றாகும்.

### தொப்பணம்-தோப்புக்கரணம்

தொப்பணம் என்பது விநாயகர் வணக்கத்தில் வலக்கையால் இடக்காதையும் இடக்கையால் வலக்காதையும் பிடித்துக்கொண்டே அமர்ந்தும் நின்றும் செய்வதைக் குறிக்கும் சொல்லாகும். இச்சொல்லை அருணகிரிநாதர் தமது திருப்புகழில் விநாயகர் துதியில்,

***'வளர்கை குழைபிடி தொப்பண குட்டொடுவகை***
***புரி பொற்பத வர்ச்சனை'***

என்று பயன்படுத்தியுள்ளார். விநாயகரை வழிபட நெற்றிப்பொட்டில் ஐந்து குட்டுக்கள் குட்டியபின் ஐந்து தொப்பணமிடவேண்டும் என்பர். ஐந்து குட்டுக்கள் மூலம் விநாயகரின் ஐவகைப் பண்புகள் வெளிப்படுத்தப் பெறுகின்றன. 1. சுக்லாம்பரதம் (வெண்மையை ஆடையாகக் கொள்ளுதல்) 2. விஷ்ணும் (எங்கும் நிறைந்தவன்) 3. சசிவர்ணம் (சந்திரன் போன்ற நிறம்) 4. சதுர்புஜம் (நான்கு தோள்களையுடையமை) 5. பிரசன்னவதனம் (விளங்கும் யானை முகம்) எல்லா இடையூறுகளும் நீங்க இவற்றை தியானிக்கிறேன் என வணங்குதல் வேண்டும்.

தொப்பணம் என்பது தோர்ப்பிக்கரணம் என மாறியிருக்கின்றது: இக்கால மக்களால் இதுவும் ''தோப்புக்கரணம்'' என உருத்திரிந்துவிட்டது. தோர்பி - கைகளால், கரணம் - காது, இதனால் கைகளால் காதை பிடிப்பது என இச்சொல்லை விளக்க முடிகின்றது. திருமால், தோப்புக்கரணம் செய்வதைக் கண்ட விநாயகர் வேகமாகச் சிரித்தார். அப்போது திருமாலிடமிருந்து பெற்று தன் வாயில் வைத்திருந்த சக்கரம் வெளியில் விழுந்தது. இப்புராணக் கதைக்குரிய விநாயகர் காஞ்சிபுரம் ஏகாம்பரர் திருக்கோயில் மண்டபத்திலுள்ளார் என்பது எண்ணி மகிழத்தக்கது.

### திருவுருத் தத்துவம்

யானை உருவம் படைத்த விநாயகரின் முகத்தில் ஒழுகும் மதம் ''மெய்ஞ்ஞானம்'' என்ன மதமேயாகும். ''கருணையென்னும் வெள்ளமதம்'' பொழிவதாகத் திருவிளையாடற் புராணம் கூறுகின்றது.

### நம்பிக்கைத் தரும் தும்பிக்கை

செவ்வந்திப்புராணம் என்ற நூல் விநாயகர் தம் துதிக்கையில் ''அருள் என்னும் கடல் முகந்து அடியார்களின் மனமாகிய நிலத்தில் சிவபோகப்பயிர் விளைய வரமழை பொழிகிறார்'' என்று குறிப்பிடுகின்றது. மூவுலகும் துதிக்கையினால் (தொழுகையினால்) விநாயகரின் தும்பிக்கைக்குத் ''துதிக்கை'' என்ற பெயர் பொருத்தமாகின்றது என பறாளை விநாயகர் பள்ளு குறிப்பிடுகின்றது.

### தந்தமும், பாசமும்

பகைவரை அழிப்பதற்காக ஒரு தந்தத்தை ஏந்தியிருக்கிறார் என்று காஞ்சிப்புராணம் கூறுகின்றது. தம்மைக் கட்டு(ப்படுத்து)பவரில்லை என்பதை எடுத்துக் காட்ட ஒரு கையில் பாசம் (கயிறு) ஏந்தியிருப்பதாக செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் கூறுகின்றது, விநாயகர் தமது யானை முகத்திலுள்ள இரு தந்தங்களுள் ஒன்றினைப் பாரதக் கதையை மேருவில் எழுதுவதற்காக ஒடித்துவிட்டதால் ''ஒற்றைக்கொம்பன்'' என்று அழைக்கப் படுகின்றனர். அவ்வொடிந்த கொம்பை ஒரு கரத்தில் ஏந்தியுள்ளார்.

### தொந்தி வயிறு

விநாயகர் அண்டபிண்டசராசரம் அனைத்தையும் தம் வயிற்றில் அடக்கியிருப்பதால் அவ்வயிறு தொந்தி வயிறாகக் காட்சியளிப்பதைக் காணமுடிகின்றது.

### ஐந்து கரங்கள்

விநாயகர் திருவைந்தெழுத்துக்கு உரியவர் என்பதைத்தான் அவரது ஐந்து திருக்கரங்களும் வெளிப் படுத்துகின்றன.

#### கண்கள்

சிவபெருமானைப் போன்று விநாயகரின் நெற்றியிலும் கண் உள்ளது. அதனால் ''முக்கணன்'' என்ற பெயரினைப் பெற்றார்.

#### தோள்

விநாயகர் எட்டு தோள்களை உடையவரென ''பட்டினத்துப் பிள்ளையார்'' திருவிடைமருதூர் மும்மணிக்கோவையில் குறிப்பிட்டுள்ளார்.

***'பவள மாலவரைப் பணைக்கைபோந் தனைய***
***தழை செவி எண்தோள் தலைவன் தந்தை'***

#### கைகள்

விநாயகருக்கு நான்கு கைகள் உள்ளன. யானை முகத்துடன் காணப்பெறும் துதிக்கையுடன் ஐந்து கைகள் உள்ளன. அவ்வைந்து கைகளிலும் எழுத்தாணி, கலசம், பாசம், அங்குசம், கனி என்பன உள்ளன.

### அனைத்துமானவர்

விநாயகரின் திருவுருவில் ஒருபுறம் கொம்பு இருப்பதால் ஆண் வடிவானவர் மறுபுறம் கொம்பு இன்மையால் பெண் வடிவானவர். யானை முகம் பெற்றிருப்பதால் அஃறிணையானவர்: மனிதர்களைப் போன்று வயிறு, கால்கள் முதலியன பெற்றிருப்பதால் உயர்திணையானவர். அதனால் விநாயகர் ஆணுமல்லர், பெண்ணுமல்லர், உயர்திணையுமல்லர், அஃறிணையு மல்லர். அனைத்துமானவர் என்பது புலப்படுகின்றது.

### கொழுக்கட்டை

இது அண்டங்களைக் குறிக்கின்றது.

### முப்பழங்கள்

மா, பலா, வாழை என்பன முக்கனிகள். அன்பினால் பழுத்து எல்லாவற்றையும் உள்ளே அடக்கி வைத்துள்ளதைக் குறிப்பிடுகின்றது.

### பெருச்சாளி வாகனம்

கயமுகாசுரன் என்ற ஓர் அரக்கன் சிவபெருமானிட மிருந்து பெற்ற வரத்தினால் கொடுமைகள் பல செய்தான். அனைவரும் விநாயகரிடம் முறையிட்டனர். விநாயகருக்கும் அரக்கனுக்கும் போர் நிகழ்ந்தது. ஆயுதங்களால் அரக்கனைக் கொல்ல முடியாது எனும் வரம் பெற்றிருப்பது விநாயகருக்கு நினைவில் தோன்றியது. அதனால் கொம்பொன்றை அரக்கன் மீது எறிந்தார். அரக்கன் பெருச்சாளியாக மாறினான்: தப்பிக்க முயன்றான். ஆனால் விநாயகர் அதனைத் தன் வாகனமாக்கினார்.

### முப்புரம் எரித்தல்

தரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி எனும் மூன்று அரக்கர்களும் தங்கம், வெள்ளி, இரும்பு கோட்டைகளை ஆண்டு வந்தனர். மூவரும் கொடுமைகள் பல புரிந்தனர். சிவபெருமான் அம்மூவரையும் அழிக்க எண்ணினார்; தேரில் புறப்பட்டார். விநாயகர் பூசையின்றிப் புறப்பட்டதால் தேரின் அச்சு முறிந்தது. பின் இறைவனும் விநாயகரை வழிபட்டார். தேரின் அச்சு முறிந்த இடம் 'அச்சிறுபக்கம்' என அழைக்கப்படுகின்றது. இதனை அதிரா அடிகள் தமது ''மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவையில்'',

*'அன்பு தவச்சுற்று காரழல் கொண்டெயில் மூன்றெரிய*
*வன்புத வந்துந்தை மாட்டுகின்ற நாம்மதஞ் சூழ்மருப்பில்*
*கன்பு தவக்கரத் தாளமிட் டோடிக் கடுநடையிட்*
*டின்பு தவச்சென்று நீயன்று காத்த தியம்புகவே'*

என்றும்,

கபிலாதேவனார் தம் *'மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலையில்:*

*'நல்லார் பழிப்பில் எழில்செம் பவளத்தை நாணநின்ற*
*பொல்லா முகத்தெங்கள் போதக மேபுர மூன்றெரித்த*
*வல்லான் அளித்த விநாயகனே.......'*

என்று சிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு விநாயகப் பெருமான் அனைத்து நிகழ்வுகளுக்கும் தொடக்கமாகத் திகழ்வது சிறப்புக்குரிய தாகும். அதனால்தான் திருவிளையாடற்புராணம்,

*'உள்ளமெனும் கூடத்தில் ஊக்கமெனும்*
*தறிநிறுவி உறுதியாகத்*
*தள்ளரிய அன்பென்னும் தொடர்பூட்டி*
*இடைப்படுத்தித் தறுகட் பாசக்*
*கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்*
*களித்துண்டு கருணை யென்னும்*
*வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை*
*நினைந்துவரு வினைகள் தீர்ப்பாம்'*

என்று போற்றியுரைக்கின்றது,

இத்தகைய இறைவனை வணங்கிச் செயல்பட்டால் இடையூறுகள் நீங்கும்! வெற்றிகள் தங்கும்!

## சிறப்பு அம்சம்

***லண்டனில் உள்ள எந்தக் கோயிலிலும் இல்லாத தனி சிறப்பு குறோய்டன் அருள்மிகு சக்தி கணபதி கோயிலுக்கு கடந்த 12 வருடங்களாக கிடைத்துள்ளது.***

***தேர்த் திருவிழா எப்பொழுதும் ஒரு திதிக்குத்தான் நடைபெற வேண்டும். அந்த வகையில் ஆவணி சதுர்த்தித் திதியில் மட்டும் தான் இங்கு தேர்த் திருவிழா நடைபெறுகிறது. இந்த தேர்த் திருவிழாவை தரிசித்தவர்களுக்குத்தான் தேர்த் திருவிழா பலன் கிடைக்கும்.***



# திருமுறையில் விநாயகர்

வி. முருகன், தருமபுரம் ஆதீன திருமுறை விரிவுரையாளர்

## முன்னுரை

விநாயகர் வழிபாடு மிகப் பழங்காலந்தொட்டே இந்திய நாடு முழுவதும் பரவி இருந்தது. கணபதியை முதன்மைத் தெய்வமாகக் கொண்டு வழிபடும் சமய நெறியை ''காணபத்தியம்'' என்பர். இதனை தோற்றுவித்தவர் ''ஆதிசங்கர பகவத் பாதான்'' ஆவார். கணபதி என்பதற்கு (கண + பதி) சிவகணத்தின் தலைவன் என்பது பொருள். விநாயகர் என்பதன் (வி + நாயகர்) சிறந்த தலைவன் என்பதாகும். கணபதிக்கு வழங்கும் பெயர்களுள் விநாயகர், பிள்ளையார், விக்னேஸ்வரர், கஜானனன், ஐங்கரன், ஒற்றைக் கொம்பன், லம்போதரன், வக்ரதுண்டன், ஏரம்பர் என்பன சிலவாகும்.

## விநாயகரின் திருவுருவம்

விநாயகரின் திருவுருவில் மனிதவுடலும், யானைத் தலையும் இணைந்துள்ளன. தொந்தி வயிறும், நான்கு கைகளும் குட்டையான பருத்த இரு கால்களும் அவருக்கு உண்டு. முகத்திலுள்ள கண்கள் சிறியன. காதுகள் அகன்றவை. கைகளுடன் துதிக்கையைச் சேர்த்து கரம் ஐந்து என்று குறிப்பிடுவர். வலது தந்தம் ஒடிந்தது. ஒடிந்த பகுதியை அவர் தம் வலக்கரம் ஒன்றில் பற்றியிருக்கிறார். சாதாரணமாகக் காணப்படுகின்ற விநாயகர் சிலைகளின் அமைப்பு இதுவாகும். இதனின்று வேறுபட்ட முறையிலும் விநாயகர் உருவங்கள் காணப்படுகின்றன.

## திருமுறைகளில் விநாயகர் குறித்த செய்திகள்

திருமுறைகளைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி. இவர் திருநாரையூரில் கோயில் கொண்டிருக்கும் விநாயகரின் பேரளுக்குப் பாத்திரமானவர். தம் காலத்தில் கிடைக்கப் பெறாமலிருந்த மூவர் தேவாரங்களையும் தேடிக்கண்டு, அவற்றுடன் திருவாசகம், திருக்கோவை யார், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம் ஆகிய நூல்களையும் தொகுத்தார். மேலும் இறையனார், காரைக்காலம்மையார், சேரமான் பெருமாள்நாயனார், நக்கீரதேவர், கபிலதேவர், பரணதேவர், பட்டிணத்தடிகள் முதலியோர் பாடிய நூல்களையும், தாம் பாடிய பத்து நூல்களையும் சேர்த்து பதினோராந் திருமுறையாகத் தொகுத்தளித்தார். திருமுறைத் தொகுப்புகளில் விநாயகரைப் பற்றிய நூல்களும், பாடல்களும் மிகுதியாக இடம்பெற்றுள்ளன.

## சம்பந்தர் தேவாரத்தில்

(அ) ''இராமன தீச்சாரம்'' எனும் பதிகத்தில் இரண்டாவது பாடலில் சம்பந்தர் சிவபெருமானை ''தந்த மதத்தவன் தானே'' என்று கூறுகிறார்.

(ஆ) ''காடதணிகலம்'' என்று தொடங்கும் ''திருப்பிரமபுரம்'' பதிகத்தில் எட்டாவது பாடலில், விநாயகரைப் பற்றிய குறிப்பு வந்துள்ளது. இப்பதிகம் விகற்பற் செய்யுளால் ஆனது. இதில் சிவபெருமானை ''மருப்புருவன் தாதை'' என்று குறிப்பிடுகின்றார். கொம்பைத் தன் உருவில் கொண்ட விநாயகரின் தந்தை என்பது அத்தொடரின் பொருளாகும்.

(இ) ''பூவியல் புரிகுழல்'' என்று தொடங்கும் ''திருவலிவல''ப் பதிகத்துள் ஐந்தாவது பாடலில் விநாயகரின் பிறப்புச் செய்தி கூறப்படுகிறது. அப்பாடல் பின்வருமாறு,

*'பிடியதன் உருஉமை கொளமிகு கரியது*
*வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்*
*கடிகண பதிவர அருளினன் மிகுகொடை*
*வடிவினர் பயில்வலி வலமுறை இறையே'*

***(1:23:5)***

இறைவன் களிற்றுருவம், இறைவி பிடியுருவம் கொண்டு கூடியதன் விளைவாக விநாயகர் அவதரித்தார் என்ற செய்தியுடன், அவ்விறைவன் தமது பாதங்களை வழிபடும் அடியவர்களின் இடர்களைப் போக்கி அருள்புரிகிறார் என்னும் கருத்தும் இப்பாடலில் உள்ளது.

(ஈ) மேற்குறித்த விநாயகரின் பிறப்புச் செய்தயைத் ''திருக்கழுமலப்பதிகம்'' ஆறாவது பாடலிலும் சம்பந்தர் பாடுகிறார். அப்பாடலின் ஒரு பகுதி வருமாறு:

*''செற்றிட்டே வெற்றிசேர் திகழ்ந்ததும்பி*
*மொய்ம்புறும்*
*சேரேவாரா நீள்கோதைத் தெரியிழை பிடியதுவாய்*

*ஒற்றைச்சேர் முற்றற்கொம் புடைத்தடைக்க
முக்கண் மிக்கு
ஓவாதேபாய் மாதானத் துறுபுகர் முகவிறையைப்
பெற்றிட்டே ......................................''*

இப்பாடலில் சம்பந்தர் விநாயகரை ஒற்றைக் கொம்புடையவராகக் கூறுகின்றார். வியாசர் பாரதக் கதையைக் கூற, விநாயகர் அதனை மேரு மலையில் தம் வலக்கொம்பை ஒடித்து எழுதிய கதை இப்பாடலில் இடம்பெற்றுள்ளது.

(உ) சீர்காழிப் பதிகம் 3-ம் பாடலில் சம்பந்தர் சிவபெருமானை ''கரியின் மாமுகமுடைய கணபதிதாதை'' என்று குறிப்பிடுகின்றார்.

## அப்பர் தேவாரத்தில்

விநாயகர் பற்றற்ற ஞானிகளுக்கு மன அமைதியை அளித்துக் கடைத்தேற்றுபவர் என அப்பர் கூறுகிறார். இறைவனின் புதல்வராகிய யானைமுகக் கடவுள் தமக்குத் துணை நிற்கும்போது ஏவும் விலங்காகிய யானையால் தாம் அஞ்சுவதற்கு யாதுமில்லை என்று எக்களிப்புடன் பாடுகின்றார்.

*'பலபல காமத்தராகிப் பதைத்தெழுவார்
மனத்துள்ளே
கலமலக் கிட்டுத் திரியும் கணபதி என்னும் களிறும்
நலமேந் (து) இரண்டு சுடரும் வான்கயிலாய
மலையும்
நமலார் கெடிலப் புனலு முடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்று மில்லை அஞ்ச
வருவது மில்லை'*

(அ) திருப்புறம்பயம் என்னும் தலத்தைக் குறித்த திருத்தாண்டகத்தின் ஈற்றுச் செய்யுளில் அங்குள்ள சிவபெருமானைத் தேவர்கள் பரவிப் போற்றுவதைக் கூறுமிடத்தில் ''குமரனும் விக்கின விநாயகனும் போற்றிசைப்ப'' என்று கூறுகிறார். விநாயகர் தம் தம்பி முருகனுடன் தந்தையாரை வணங்கும் செய்தி இங்கு கூறப்படுகின்றது.

(ஆ) திருவீழிமிழலைத் திருத்தாண்டகத்தில் சிவபெருமானின் செயல்களைக் குறிப்பிடும்போது,

*'கைவேழ முகத்தவனைப் படைத்தவர் போலும்
காயாசுரனை அவனாற்பொல் வித்தார் போலும்'*

என்று சிவபெருமான் விநாயகரைப் பெற்றெடுத்து அவரைக் கொண்டு காயாசுரனை வதைத்த செய்தியைப் பாடுகின்றார்.

(இ) திருஏகம்பத் திருத்தாண்டகத்தில் சிவபெருமானை,

*'முருக வேட்குத் தந்தைகாண் தண்கடமர்
முகத்தி னாற்குத் தாதைகாண்'*

*(ஈ) திருநாரையூர்த் திருத்தாண்டகத்தில்
'ஆறுமுகனோடு ஆனைமுகற்கு அப்பன்'*

*(உ) திருவாய்மூர்த் திருத்தாண்டகத்தில்
'மெய்யியலும் விநாயகனும் தோன்றக் கண்டேன்'*

என்றும் பாடுகின்றார். மெய்யியல் என்பது இங்கு உமாதேவியைக் குறிக்கின்றது. இம்மூன்று பாடல்களும் விநாயகர் சிவபெருமானுக்கும், உமாதேவியார்க்கும் மைந்தர், முருகனுக்குத் தமையன் என்ற உறவுமுறை சுட்டிக்காட்டப்படுகின்றது.

## திருவிசைப்பாவில்

(அ) ஒன்பதாம் திருமுறையில் சிவபெருமான் துதியாக அமைந்த பாடல்களில் விநாயகரைப் பற்றிய குறிப்புகள் சில இடங்களில் இடம்பெறுகின்றன. திருமாளிகைத்தேவர் பாடிய திருவிசைப்பாவில் முதற்கதிகம் 7-வது பாடலில்

*'அனகனே! குமர விநாயக சனக!
அம்பலத் தமரசே கரனே!'*

என்று சிவபெருமானின் மகன் விநாயகன் என்ற செய்தியைக் குறிப்பிடுகின்றார்.

(ஆ) திருவிசைப்பா பாடிய ஆசிரியர்களுள் சேந்தனார் இரண்டாமவர் ஆவார். அவர் அருளிய திருவிசைப்பாவில் மூன்றாம் பதிகமான ''திருவிடைக்கழி'' என்பது முருகக் கடவுளின் துதியாக அமைந்துள்ளது. அதில் வரும் ஐந்தாவது பாடலில் சேந்தனார் முருகப்பெருமான,

*''கண்மணி பொருநீர்க் கங்கைதன் சிறுவன்
கணபதி பின்னிளங் கிளையே''*

என்று பாடுகிறார். முருகன் கணபதியின் தமையன் என்னும் உறவுமுறை இங்கு குறிப்பிடப்படுகின்றது.

(இ) வேணாட்டடிகள் பாடிய ஆறாவது திருவிசைப்பாவின் 6-வது பாடலில்,

*'படுமதமும் மிடவயிறும்
உடைய களிறுடைய பிரான்'*

பாயும் மதநீரையும், பானை வயிற்றையும் உடைய யானைமுகக் கடவுளைத் தம் மைந்தராகவுடைய சிவபெருமான் என்று குறிப்பிடுகின்றார்.

## திருமந்திரத்தில்

பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்தில் தொடக்கத்தில் திருமூலர் விநாயக வணக்கம் பாடுகிறார். அப்பாடல்

*'ஐந்து கரத்தானை யானை முகத்தானை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேன்'*

என்பதாகும். விநாயகப் பெருமானின் பெயரைக் கூறினாலே வினைகள் தீரும், அவன் பெயரைக் கூறினாலே காலானும் கைத்தொழுவான் என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். இதனை,

*'கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை*
*கணபதி என்றிடக் காலனும் கைதொழும்*
*கணபதி என்றிடக் கருமமாதலால்*
*கணபதி என்றிடக் கரும மில்லையே'*

என்ற பாடல் விளக்குகிறது.

### பதினோராம் திருமுறையில்

பதினோராம் திருமுறையில் விநாயகரைக் குறித்தனவாக மூன்று நூல்கள் இடம்பெற்றுள்ளன. அவையாவன,

1. கபிலதேவநாயனார் இயற்றிய மூத்த நாயனார் திருவிரட்டைமணிமாலை

2. அதிராவடிகள் இயற்றிய மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவை

3. நம்பியாண்டார் நம்பி பாடிய திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை என்பனவாகும்.

### மூத்த நாயனார் திருவிரட்டைமணிமாலை

விநாயகரைக் குறித்துப் பாடப்பெற்ற முதல் தனிநூல் இதுவேயாகும். இந்நூலை இயற்றியவர் கபிலதேவ நாயனார். வெண்பா. கட்டளைக் கலித்துறை ஆகிய இருபாக்கள் மாறி மாறி வரும் வகையில் பாடப்பெற்ற இருபது பாடல்களைக் கொண்ட நூலாகும். ''மூத்த நாயனார்'' என்பது விநாயகரைக் குறிக்கின்றது. நாயனார் என்ற சொல்லிற்கு நாயகன், இறைவன் என்று பொருளாகும்.

விநாயகரைப் பரம்பொருளாகக் கொண்டு அவரை வழிபட எல்லாக் கருமங்களும் கைவிடும் என்பதை,

*'திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்*
*பெருவாக்கும் பீடும் பெருக்கும்'*

என்ற பாடல் விளக்குகிறது. கபிலதேவர் பிள்ளையாரை, கபிலர், சிவனார் மைந்தன், உமையாள் காதலன், மணிவண்ணன் மருகன், காமனின் மைத்துனன் என்ற பெயர்களால் சுட்டுகின்றார். அவருடைய திருவுருவ வர்ணணையில் ஒரு கோடு, இருசெவி, முக்கண், செம்மேனி, யானைமுகம், கார் மதம், பேழை வயிறு ஆகியவை குறிக்கப்படுகின்றன.

அவர் உண்ணும் உணவு வகைகளாக அப்பளம், இடி அவல், எள்ளுருண்டை, கரும்பு, முக்கனிகள் ஆகியவை சுட்டப்படுகின்றன. இதனை,

*'அப்பம் இடி அவலோடு எள்ளுருண்டை*
*கன்னல் வடி சுவையில் தாழ்வான்'*
*வாழைக்கனி பலவின்கனி மாங்கனி தாம்சிறந்த*
*உழைச்சுருள் குறை அப்பம் எள்ளுருண்டை எல்லாம்*
*அறுத்தும் பேழை பெருவயிறு'*

என்ற பாடல்களில் அடிகள் விளக்குகின்றது. மேலும் இந்நூலில் விநாயகர் ''கதப்போர்'' புரியும் போர்க்கடவுளாக குறிக்கப்படுகின்றார். விநாயகர் அடியார்களுக்குக் கோள்களாலும், காலனாலும் வரும் துன்பங்களைப் போக்குவார். இலக்குமி அவரை வழிபடுபவர்கள் இடத்தன்றி வேறிடங்களில் உறையமாட்டாள் என்ற செய்திகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

### விநாயகர் திருவிரட்டை மணிமாலை

நம்பியாண்டார் நம்பி தமக்கருள் செய்த திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் மீது பாடிய சிறுபிரபந்தம் விநாயகர் திருவிரட்டை மணிமாலையாகும். இந்நூல் வெண்பாவும், கட்டளைக் கலித்துறையுமாகிய பாடல்கள் தம்முள் மாறி வரும்படி அந்தாதித் தொடையால் அமைந்திருக்கும். விநாயகரைப் போற்றுவோரைத் துன்புறுத்த எண்ணுகின்ற பாசங்கள் நெருப்பை உண்ண எண்ணும் எறும்பின் நிலை அடையும் என்பதை,

*'மருப்பை ஒரு கைக்கொண்டு நாரையூர் மன்னும்*
*பொருப்பை அடி போற்றத் துணிந்தால் - நெருப்பை*
*அருந்த எண்ணுகின்ற எறும்பன்றே அவரை*
*வருந்த எண்ணுகின்ற மலம்'*

என்ற பாடல் உணர்த்துகிறது. கயமுகாசுரனை வதைத்தது, தந்தையிடமிருந்து மாங்கனியைப் பெற்றது ஆகிய செய்திகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. விநாயகரின் திருவடிகளைப் போற்றுபவர்களை மும்மலங்கள் வருத்துவதில்லை என்றும் கூறுகின்றார்.

### மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவை

அதிராவடிகள் இயற்றிய மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவையில் சிவபெருமானிடமுள்ள மாங்கனியைப் பெறுவதற்காக முருகன் மயில் மீதேறி மூவுலகையும் சுற்றி வருவதற்குள் விநாயகர் தந்தையை வலம் வந்து வணங்கி அக்கனியைப் பெற்ற செய்தியும், பரிமளகத்தியின் மகனான வியாசர் கூறிக்கொண்டே வர விநாயகப் பெருமான் பாரதக் கதையை எழுதினார் என்ற செய்தியும் இடம்பெற்றுள்ளன. இதனை,

*'சடைக்கிடந்த................*
*ஓங்கிருந்த தாதையை வாளா அய் மாங்கனி..........'*
*'இவ்வலகின் பெருமூதாதை*
*உரந்தரு சிரம் அரிந்தவற்கே வரைந்தது'*



## சங்கடஹர சதுர்த்தியின் மகிமை தெரியுமா?

**ச**ங்கடஹர சதுர்த்தி: நமக்கு வரும் சங்கடம் அனைத்தையும் நீக்கிச் சௌபாக்கியம் தரவல்லது சங்கடஹர சதுர்த்தி விரதம்: ஆவணி மாதம் தேய்பிறைச் சதுர்த்தி தினத்தில் இவ்விரதத்தைத் தொடங்க வேண்டும். இரவு சந்திரன் உதயமாகும் பொழுது விநாயகரை வழிபட்டுச் சந்திரனுக்கு அர்க்கியம் தர வேண்டும் என்கிறது சாத்திரம். அன்று சந்திரன் தெரியாமல் இருந்தால் அடுத்த நாள் பூஜை செய்ய வேண்டும். மாசி மாதம் தேய்பிறைச் சதுர்த்தி மிகமிக உயர்வானது. அதுவும் செவ்வாய்க்கிழமை அந்நாள் அமைவது மிகவும் விசேஷம். அது மஹா சங்கடஹர சதுர்த்தி என்றழைக்கப்படுகிறது. அந்த நாளில் காலையிலிருந்து உபவாசம் இருந்து கணபதியைத் தியானிக்க வேண்டும். இரவு பூஜை முடித்த பின் கணேச நிவேதனத்தை மட்டும் உண்டு தனிமையில் உறங்க வேண்டும்.

**சதுர்த்தியின் மகிமை** : சங்கடஹர சதுர்த்தியின் மகிமையை முருகப் பெருமான் முனிவர்க்கு எடுத்துரைக்கிறார் ஸ்காந்தத்தில். எல்லா விரதங்களிலும் இவ்விரதம் மிகச் சிறந்தது சங்கடஹரணம் என்றும் இது அழைக்கப் பெறும். காட்டில் தருமபுத்திரர் இவ்விரதத்தை மேற்கொண்டார். பாண்டவர்க்கு இவ்விரதத்தை உபதேசித்தவர் கண்ணபிரான். முதல் முதலில் தன் தாய் பார்வதி தேவிக்குக் கணபதியே இவ்விரதத்தைச் சொல்லி அருளினார். பார்வதி 1 ஆண்டுக்காலம் இவ்விரதத்தை மேற்கொண்டு தன் பதியை அடைந்தாள். இந்திரன், சிவன், இராவணன் போன்றோர் இவ்விரதத்தினால் நற்பயன் அடைந்திருக்கின்றனர். அனுமன் சீதையைக் கண்டது, தமயந்தி நளனை அடைந்தது, அகலிகை கௌதமரை அடைந்தது போன்றவை நிகழ்ந்ததும் இவ்விரதத்தின் மகிமையால் தான்.

### பெரியபுராணத்தில்

பெரியபுராணத்தில் கடவுள் வாழ்த்துப் பாடலாக பின்வரும் விநாயகர் வணக்கம் அமைந்துள்ளது.

*'வானுலகு மண்ணுலகு வாழமறைவாழி*
*பான்மை தரு செய்ய தமிழ்ப்பார்மிசை விளங்க*
*ஞானதே ஐந்துரை மூன்று விழி நால்வாய்*
*ஆனைமுகனைப் பாடி அஞ்செலிச்சய் நிற்பாம்'*

பரஞ்சோதி படைக்கலப் பயிற்சி பெற்றுப் போர் வீரராக விளங்கிய காலத்தில், கயமுகாசுரனை அப்பதியில் வைத்துக் கொன்று, அவ்வூரிலேயே அவன் உதிரத்தைச் செங்காடாகப் பரவும்படி செய்த அவ் ஆதி விநாயகரை ஒரு போர்க் கடவுளாகவே கண்டு அவர்மீது பெரும் பக்தி செலுத்தி வந்தார். தமக்கு ஆற்றல், வீரம், வெற்றி இவற்றைத் தந்து தாம் ஒரு சிறந்த போர்வீரனாக விளக்கும்படி செய்ய வேண்டுமென்று அவர் விநாயகரை நாள் தோறும் வழிபட்டு வந்தார் என்று சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

*'பொடிநுகரும் சிறுத்தொண்டர்கருள் செய்யும்*
*பொருட்டாகக் கடிநகராய் வீற்றிருந்தான்*
*கணபதீச்சுரத்தானே'*

என்று பாடுகின்றார்.

### முடிவுரை

எல்லா ஓசைகளுக்கும் முதலோசையாய் நிற்பது ''ஓ'' என்று இரையும் ஒலியேயாகும். ஓங்காரவடிவின் மேன்மையையும், பயனையும் உணர்ந்த சான்றோர்கள் அவ்வடிவின்கண் இறைவனை வைத்து எளிதாக வழிபட்டு உய்தற் பொருட்டாகவே யானை முகமுடைய விநாயகர் வழிபாட்டை உண்டாக்கினார்கள் என்று மறைமலையடிகள் குறிப்பிடுவார். எவ்வேலையை எடுத்துக் கொண்டாலும் அது இடையூறு இல்லாமல் நடைபெற விநாயகப் பெருமானின் அருளைப் பெற வேண்டும். அதனால்தான் விநாயகர் விக்கினங்களைப் போக்கும் கடவுளாகப் போற்றப்படுகின்றார். அவ்விநாயகர் பற்றிய செய்திகள் திருமுறைகளில் பல இடங்களிலும் விரவிக் காணப்படுகின்றது. ✳

# கற்பக விநாயகர்



| | | |
|---|---|---|
| மூலவர் | : | கற்பக விநாயகர் |
| தல விருட்சம் | : | மருதமரம் |
| பழமை | : | 1000-2000 வருடங்களுக்கு முன் |
| ஊர் | : | பிள்ளையார்பட்டி |
| மாவட்டம் | : | சிவகங்கை |
| மாநிலம் | : | தமிழ்நாடு |

## திருவிழா

ஒவ்வொரு சதுர்த்தியன்றும் இரவு விநாயகப் பெருமான் வெள்ளி மூஷிக வாகனத்தில் எழுந்தருளி கோயில் உட்பிரகாரத்தில் வலம் வருவார். திருக்கார்த்திகை அன்று விநாயகப் பெருமானும், உமாதேவி சமேத சந்திரசேகரப் பெருமானும் திருவீதி பவனி வருவார். பிள்ளையார், மருதங்குடி நாயனார் சன்னதிகளில் சொக்கப்பனை கொளுத்தப்படும். மார்கழி திருவாதிரை நாளன்று சிவகாம சுந்தரி சமேத நடராஜப் பெருமான் திருவீதி பவனி வருவார். ஆவணி மாதம் வரும் விநாயகர் சதுர்த்தியே இங்கு பெரிய திருவிழாவாகும். இது 10 நாள் திருவிழாவாக நடக்கும். பிள்ளையார் சதுர்த்திக்கு 9 நாட்களுக்கு முன்பு காப்புகட்டி, கொடியேற்றம் நடக்கும். 10ம் நாள் காலையில் தீர்த்தவாரி உற்சவமும், உச்சிகால பூஜையின் போது ராட்சத கொழுக்கட்டை நைவேத்தியமும், இரவு ஐம்பெருங்கடவுளரும், தங்க, வெள்ளி வாகனங்களில் திருவீதி உலா வருவர்

## தல சிறப்பு

விநாயகருக்குரிய மிகப்பெரிய குடைவறைக் கோயில். இங்கு விநாயகர் சதுர்த்தியன்று 18படி அளவில் செய்யப்பட்ட ராட்சத கொழுக்கட்டை நைவேத்தியம் செய்யப்படுகிறது. முருகப்பெருமானுக்கு 6 படை வீடு இருப்பது அனைவருக்கும் தெரியும். இதே போல் விநாயகருக்கும் 6 படை வீடு இருக்கிறது. இத்தலத்தில் உள்ள கற்பக விநாயகர் சன்னதி விநாயகரின் ஐந்தாவது படை வீடாகும்.நகரத்தார் திருப்பணி செய்த கோயில்களில் இதுவும் ஒன்று.

## திறக்கும் நேரம்

காலை 6 மணி முதல் 12 மணி வரை, மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்திருக்கும்.

## முகவரி

அருள்மிகு கற்பக விநாயகர் திருக்கோயில், திருப்புத்தூர் தாலுகா, பிள்ளையார்பட்டி - 630207, சிவகங்கை மாவட்டம்.

## பொது தகவல்

காலத்தால் பழமையான இது ஒரு குடைவரை கோயிலாகும். 1600 ஆண்டுகள் பழமையான இக்கோயில் மகேந்திர பல்லவர் காலத்தில் உருவாக்கப்பட்டது. தற்போது நகரத்தார்களால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. தென்னிந்தியாவில் அர்ஜுன வன திருத்தலங்கள் நான்கு உள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில திருப்புடை மருதூர், தஞ்சை மாவட்டத்தில், திருவுடைமருதூர், ஆந்திர மாநிலத்தில ஸ்ரீசைலம், சிவகங்கை மாவட்டத்தில் பிள்ளையார்பட்டி ஆகியவையாகும்.

## பிரார்த்தனை


திருமணத்தடை, குழந்தை பாக்கியம், கல்வியில் சிறந்து விளங்க இறைவனை பிரார்த்திக்கலாம்.

## நேர்த்திக்கடன்

சுவாமி அபிஷேகம் செய்தும், வஸ்திரம் அணிவித்தும் நேர்த்திக்கடன் நிறைவேற்றலாம்.

## தலபெருமை

தேர்த்திருவிழா : விநாயகருக்கு தேர்த்திருவிழா நடைபெறும் ஒருசில இடங்களில் பிள்ளையார்பட்டியும் ஒன்று. விநாயகருக்கும், சண்டிகேசுவரருக்குமாக இரண்டு தேர்கள் இழுக்கப்படும். பிள்ளையார் தேரில் இரண்டு வடங்களில் ஒன்றை பெண்களும் மற்றொரு வடத்தை ஆண்களும் இழுத்துச் செல்வர். சண்டிகேசுவரருக்கான தேரை பெண்களும் குழந்தைகளும் மட்டுமே இழுத்துச் செல்வர். தேரோடும் வீதியில் வேண்டுதல் நிமித்தமாக



பக்தர்கள் அங்கப்பிரதட்சணம் செய்வர். இத்திருவிழா 9ம் நாள் நிகழ்ச்சியாக நடக்கும்.

9ம் நாள் விழாவான தேர்வலம் வரும் அதே நேரத்தில் மூலவருக்கு சுமார் 80 கிலோ சந்தனத்தால் காப்பு சாத்தப்படும். ஆண்டிற்கு ஒருமுறை மட்டுமே இந்த சந்தனக்காப்பு அலங்காரம் செய்யப்படுவதால் அக் காட்சியை காண பக்தர்கள் கூட்டம் அதிகமிருக்கும். மகா அபிஷேகமும் நடத்தப்படும்.

ராட்சத கொழுக்கட்டை: ஆண்டு தோறும் விநாயகர் சதுர்த்தியன்று உச்சிகால பூஜையின் போது விநாயகருக்கு முக்குறுணி அரிசியால் செய்யப்பட்ட பெரிய அளவிலான ஒரே கொழுக்கட்டை தயாரித்து நைவேத்யம் செய்வர். இது மிகவும் சிறப்பு பெற்றதாகும்.

18 படி அரிசியை மாவாக்கி, எள் 2 படி, கடலைப்பருப்பு 6 படி, தேங்காய் 50, பசுநெய் 1 படி, ஏலம் 100 கிராம், வெல்லம் 40 கிலோ ஆகியவற்றை சேர்த்து ஒரே கலவையாக்கி, உருண்டை சேர்த்து அதனை துணியால் கட்டி, மடப்பள்ளியில் அன்னக் கூடையில் வைத்து கட்டுவார்கள். தண்ணீர் நிரப்பப்பட்ட அண்டாவினுள் இறக்கி அதன் அடிப்பகுதியில் படாதவாறு தொங்கவிட்டு மடப்பள்ளி முகட்டில் கயிற்றால் கட்டி விடுவர். பின்னர் அது, அந்த பெரிய அளவிலான பாத்திரத்தில் 2 நாள் தொடர்ச்சியாக வேக வைக்கப்படும். பின்னர் இது உலக்கை போன்ற கம்பில் கட்டி பலர் சேர்ந்து காவடி போல தூக்கி வந்து மூலவருக்கு உச்சிகால பூஜையில் நிவேதனம் செய்வர். மறுநாள் கொழுக்கட்டை சூடு ஆறிய பின்னர் நகரத்தார், ஊரார்கள் மற்றும் பணியாளர்களுக்கு பிரித்து உண்ணக்கொடுப்பர்.

### சிறப்பம்சம்

அதிசயத்தின் அடிப்படையில் முருகப்பெருமானுக்கு 6 படை வீடு இருப்பது அனைவருக்கும் தெரியும். இதே போல் விநாயகருக்கும் 6 படை வீடு இருக்கிறது. இத்தலத்தில் உள்ள கற்பக விநாயகர் சன்னதி விநாயகரின் ஐந்தாவது படை வீடாகும்.

### கற்பக விநாயகர் துணையிருந்தால் காரிய சித்தி சுபமே

எந்த ஒரு காரியமும் வெற்றி பெற, தொழில் நல்ல முறையில் லாபகரமாய் நடக்க, தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று முதல் இடம் பெற, மணமகனை தேர்வு செய்ய, மணமகளை உறுதி செய்ய, புதியதாய் வீடு கட்ட புதிய வீட்டில் குடி புக, புதிய வாகனம் வாங்க, முதன் முதல் பணியில் சேர, குழந்தைக்கு பெயர் வைக்க, இப்படி எல்லா சுபகாரியங்களுக்கும் விநாயகப் பெருமானை வேண்டிக் கொண்டால் நிச்சயம் வெற்றி கிட்டும். அதனாலே தான் விநாயகப் பெருமானை முழுமுதற் கடவுள் என்று போற்றுகிறோம்.

எந்த திக்கிலிருந்தாலும் ஏக தந்தனை வேண்டினால் நம்மைக் காத்திடுவார். எருக்கம் பூவை வைத்து வணங்கினால், எல்லா சுகமும் தந்திடுவார். அருகம் புல்லை வைத்து ஆராதனை செய்தால், அனைத்து வேண்டுதலையும் அப்பொழுதே நிறைவேற்றிடுவார்.

2 ஆயிரத்து 500 ஆண்டுகளுக்கு முன்பு பிள்ளையார் பட்டி என்ற ஊரில் உள்ள சிறு குன்றில் உள்ள பாறைக் குகையில் செதுக்கப்பட்ட அழகிய கற்பக விநாயகர் அந்த ஊருக்கு அருள் பாலித்து வருகிறார். மேலும் இங்கு உள்ள விநாயகப் பெருமானுக்கு வலது புறமாக துதிக்கை சுற்றி வைத்திருப்பதால், இவரை வலம்புரி பிள்ளையார் என்றும் அழைக்கிறார்கள். இந்த வெற்றிக் கடவுள் தான் இங்குள்ள கோவிலுக்கு முக்கிய கடவுளாக இருக்கிறார்.


இத்திருத்தலத்தில் திருமண வேண்டுதலை நிறைவேற்றித் தரும் கார்த்தியாயினி, புத்திர சந்தானம் நல்கும் நாகலிங்கம், செல்வத்துக்கு அருள் பாலிக்கும் பசுபதீஸ்வரர் ஆகிய தெய்வங்களும் உள்ளன. 6 அடி உயரத்தில் விநாயகர் வீற்றிருந்து காட்சி தருகிறார். இது குகையில் செதுக்கியுள்ள காரணத்தால் எம்பிரானை பிரதட்ஷிணமாக சுற்றி வர இயலாது. உட்பிரகாரம் எண்ணை விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

### தங்கக் கவசம்

விநாயகப் பெருமானை தங்கக் கவசத்தால் அலங்கரித்துள்ளனர். அபிஷேகம், நீராட்டு நடைபெறும் நேரங்களில் மட்டும் இந்த புராதன சிலையை காண முடியும்.

இத்திருத்தலம் முந்தைய பாண்டிய மன்னர்களால் கட்டப்பட்டதாகும். இங்கு 14 சிற்பங்களை செதுக்கியுள்ள னர். இங்குள்ள கல்வெட்டுக்களில் உள்ள எழுத்துக்கள் மூலம் இது தெரிகிறது. ஆகம விளக்கங்கள் மூலம் இந்தத் தலம் 1091லிருந்து 1238க்குள் நிர்மாணிக்கப்பட்டதாக அறியப்படுகிறது. *

# உச்சி பிள்ளையார்



| | | |
|---|---|---|
| மூலவர் | : | உச்சி பிள்ளையார் |
| தீர்த்தம் | : | காவிரி |
| ஆகமம், பூஜை | : | சிவாகமம் |
| பழமை | : | 1000-2000 வருடங்களுக்கு முன் |
| புராண பெயர் | : | திரிசிராப்பள்ளி |
| ஊர் | : | திருச்சி |
| மாவட்டம் | : | திருச்சி |
| மாநிலம் | : | தமிழ்நாடு |

### திருவிழா

விநாயகர் சதுர்த்தி, ஆங்கிலப்புத்தாண்டு, தமிழ்புத்தாண்டு, பொங்கல்.

### தல சிறப்பு

மலை உச்சி மேல் அமைந்துள்ள விநாயகர் கோயில் இது.

### திறக்கும் நேரம்

காலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்திருக்கும்

### முகவரி

அருள்மிகு மலைக்கோட்டை உச்சிப்பிள்ளையார் திருக்கோயில், திருச்சிராப்பள்ளி - 620 002.

### பொது தகவல்

மலைக்கோட்டையின் மீது இருந்து பார்க்கையில், திருச்சி மாநகரின் எல்லா பக்கமும் ரம்மியமாக தெரியும். மலைக் கோட்டையின் உயரம் 275 அடி. மலைக்கோயிலுக்கு செல்ல 417 படிக்கட்டுகள் உள்ளன. இப்படி வடிவமைக்கப்பட்ட கோயிலின் ஆயிரங்கால் புனித மண்டபம் சிறப்பு வாய்ந்தது. இங்கு இன்றும் திருமண வைபவங்கள் நடந்து வருவது மிகச்சிறப்பு.

திருச்சி உச்சி பிள்ளையார் கோயில் மிகவும் பிரபலமானது. விநாயகப் பெருமான் மிகவும் பழமை வாய்ந்த பாறையின் உச்சியில் அமர்ந்து தரிசனம் தருவதால் உச்சிபிள்ளையார் என்று அழைக்கப்படுகிறார். இவரை தரிசிக்க 400க்கும் மேற்பட்ட படிகள் ஏறிதான் தரிசிக்க முடியும். இத்தனை உயரத்தில் விநாயகர் அமர்ந்த காரணத்தை பார்ப்போம்.

### உச்சிபிள்ளையார் கோயில் உருவான கதை

மகேந்திரவர்மன் பல்லவன் மலை பகுதியை நோக்கி சென்று கொண்டு இருந்தார். அப்போது அந்த மலைபகுதியை கிழக்கு பக்கமாக பார்த்த போது யானை முகமாகவும் வடக்கிலிருந்து பார்க்கும் போது மயில் நிற்பது போலவும் தெற்கில் இருந்து பார்க்கும் போது யானை போலவும் காட்சி கொடுத்தது மலை. இதை கண்ட அரசர் இந்த மலையில் ஏதோ தெய்வீக சக்தி படைத்தது என்று கருதி மலை மீது ஏறிபார்த்தார். அங்கு ஒரு விநாயகர் சிலையை கண்டார். அதை தன் அரண்மனைக்கு எடுத்து செல்ல முயற்சித்தபோது சிலையை அசைக்க முடியவில்லை. அதனால் மலையிலேயே கோயில் கட்டினார். உச்சி பிள்ளையாரை வணங்கினால் உயரிய வாழ்க்கை அமையும்.

இக்கோயிலின் கீழ் உள்ள தாயுமானவர் கோயில் தேவாரப்பாடல் பெற்ற சிவத்தலங்களில் ஒன்று.

### பிரார்த்தனை

எந்த காரியங்கள் தொடங்கினாலும் இவரை வணங்கி விட்டு தொடங்கினால் காரியங்களில் வெற்றி உறுதி.

### நேர்த்திக்கடன்

விநாயகருக்கு பால் அபிஷேகம் செய்து அருகம்புல் மாலை சாற்றி வழிபடுகிறார்கள்.

### தலபெருமை

திருச்சி என்றாலே மலைக்கோட்டை அதன் அருகில் அகண்டகாவிரி, அடுத்து ஸ்ரீரங்கம். இப்புனித தலத்தை



உலகம் முழுவதும் இருந்து வரும் மக்கள் அனைவரும் தினமும் கண்டு களித்து வருகின்றனர் என்பது அனைவரும் கண்ணால் காணக்கூடிய உண்மை. அப்பர், ஞான சம்பந்தர், மாணிக்கவாசகர், தாயுமான அடிகள் ஆகியோரால் பாடல் பெற்ற இக்கோயிலின் கட்டுமானப் பணி மிகவும் வியப்பிற்குரியது.

இக்கோயிலில் குடைந்தெடுக்கப்பட்ட இரண்டு குகைகள் உள்ளன. மேல் குகையில் கிரந்தத்திலும், தமிழிலும் கல்வெட்டு செய்திகள் உள்ளன. கீழ் குகையில் 104 செய்யுள்கள் அந்தாதியாக உள்ளன.

## தல வரலாறு

ஸ்ரீராமர் இராவணனிடம் போர் செய்து சீதையை மீட்டு வந்தார். சீதையை மீட்க விபீஷணனும் துணையிருந்ததால் அசுரகுலத்தில் பிறந்தவனாக இருந்தும் இராவணனுடைய தம்பியாக இருந்தும் நியாயத்தின் பக்கம் இருந்து நல்ல எண்ணத்துடன் உதவி செய்ததால் ஸ்ரீராமர் விபீஷணன் மேல் நல்ல மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார். அதனால் ஸ்ரீராமர் வணங்கி வந்த ஸ்ரீரங்கநாதர் சிலையை விபீஷணனிடம் தந்து இந்த விக்கிரகத்தை நல்லமுறையில் நீ பூஜை செய்து வந்தால் பல நன்மைகள் ஏற்படும் என்று கூறி ஆசி வழங்கி விபீஷணனிடம் ஸ்ரீரங்கநாதரின் சிலையை கொடுத்து இந்த விக்கிரகத்தை நீ இலங்கைக்கு சென்று சேரும் வரை எந்த இடத்திலும் வைக்க வேண்டாம். அப்படி வைத்தால் வைத்த இடத்திலேயே ஸ்ரீரங்கநாதர் தங்கிவிடுவார். மீண்டும் விக்கிரகமாக உள்ள அவரை தூக்க உன்னால் இயலாது. என்றார் ஸ்ரீ இராமர்.

அசுரகுலத்தில் பிறந்தவனிடம் ஸ்ரீரங்கநாதர் சிலையை தந்து அவன் முறையாக வழிபட்டால் நிச்சயம் விபீஷணன் யாரும் வெல்ல முடியாத அசுரகுல தலைவனாக திகழ்வான். அவன் நல்லவனாக இருக்கும் வரை அது நல்லதுதான். மாறுவது மனம் என்பார்களே அப்படி ஒருவேளை விபீஷணனின் நல்ல குணம் மாறி தன்னுடைய பிறவி குணமான அசுரத் தன்மையை வெளிப்படுத்தினால் அது நமக்கு ஆபத்து என எண்ணிய தேவர்கள், ஸ்ரீ இராமர் விபீஷணனிடம் தந்த சிலையை எப்படியாவது வாங்கியே தீர வேண்டும் என்ற முடிவு செய்தார்கள்.

அதனால் தங்கள் பயத்தை விநாயகரிடம் சொல்லி முறையிட்டார்கள். அமைதியாக இருங்கள். எல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன். ஆத்மலிங்கத்தை இராவணனால் இலங்கைக்கு எடுத்து செல்ல முடிந்ததா? அதுபோல் விபீஷ்ணனும் ஸ்ரீரங்கநாதர் சிலையை இலங்கைக்கு எடுத்து செல்ல முடியாது. என்று தேவர்களுக்கு நம்பிக்கை தந்து அனுப்பினார்.

எதுவும் அறியாத விபீஷணன் ஸ்ரீரங்கநாதர் சிலையை இலங்கைக்கு எடுத்து சென்று கொண்டு இருக்கும் போது மாலை நேரம் வந்ததால் இறைவனை பூஜிக்க வேண்டும் என்று கருதி காவேரி கரை பக்கம் வந்தார். இறைவனை பூஜிக்கும் முன் குளிக்க வேண்டுமே எப்படி குளிப்பது? இந்த ஸ்ரீரங்கநாதர் சிலையை கீழே வைத்து விட்டால் அந்த இடத்திலேயே ஸ்ரீரங்கநாதர் அமர்ந்து விடுவார் என்றாரே நம் ஸ்ரீராமர். என்ன செய்வது? என்று குழப்பத்தில் இருந்தார்.

அந்த நேரத்தில் மாடு மேய்த்துகொண்டு ஒரு சிறுவன் எதிரில் வந்து கொண்டு இருந்தான். அந்த சிறுவனை அழைத்து இந்த சிலையை பத்திரமாக கையில் பிடித்து கொள். நான் காவேரில் குளித்துவிட்டு வருகிறேன். என்றார் விபீஷ்ணர்.

விபீஷ்ணர் குளித்து கொண்டு இருக்கும் போது அந்த சிறுவன் ஸ்ரீரங்கநாதர் சிலையை தரையில் வைத்து விட்டு ஓடினான். இதை கண்ட விபீஷ்ணர் கோபம் கொண்டு அந்த சிறுவனை துரத்திக் கொண்டு ஓடினார். அந்த சிறுவன் நிற்காமல் மிக வேகமாக ஓடி ஒரு மலை உச்சியில் ஏறி அமர்ந்தான். அதிக வேகமாக ஓடியதாலும் வேகு தூரத்திற்கு அந்த சிறுவனை துரத்தி வந்ததாலும் களைப்பும் கோபமும் அடைந்த விபீஷ்ணர் அந்த சிறுவன் தலையில் ஓங்கி குட்டினார். குட்டுப்பட்ட அச்சிறுவன் என்னை கண்டால் எல்லோரும் தன்னை தானே குட்டிக்கொள்வார்கள். ஆனால் நீயோ என்னையே குட்டிவிட்டாயே. என்று சிரித்து கொண்டே சிறுவன் விநாயகராக விபீஷணனுக்கு காட்சி தந்து அந்த இடத்திலேயே சிலையாக அமர்ந்தார். இதனால் உச்சிபிள்ளையாருக்கு இன்றும் விபீஷணனிடம் தலையில் குட்டுப்பட்ட சிறுபள்ளம் இருக்கும். இப்படி சிறப்பு வாய்ந்த விநாயகர் தான் தமிழகத்தின் நலன் காக்க அருகில் அமைந்துள்ள ரங்கநாதருடன் ஆண்டாண்டு காலமாய் ஆட்சி செய்து வருகிறார்.

## சிறப்பம்சம்

அதிசயத்தின் அடிப்படையில் மலை உச்சி மேல் அமைந்துள்ள விநாயகர் கோயில் இது. ✳

# மணக்குள விநாயகர்



| | | |
|---|---|---|
| மூலவர் | : | மணக்குள விநாயகர் |
| தீர்த்தம் | : | மூலவருக்கு மிக அருகில் தீர்த்தம் உள்ளது. |
| பழமை | : | 500 வருடங்களுக்குள் |
| புராண பெயர் | : | மணக்குளத்து விநாயகர் |
| ஊர் | : | புதுச்சேரி |
| மாவட்டம் | : | புதுச்சேரி |
| மாநிலம் | : | புதுச்சேரி |

## திருவிழா

விநாயகர் சதுர்த்தி - இத்தலத்தில் மிகவும் விமரிசையாக கொண்டாடப்படும். அது தவிர ஜனவரி முதல் தேதி அன்றுதான் இத்தலத்தின் பிரமாண்டமான அளவில் பக்தர்கள் கூடுவர்கள். பிரம்மோற்ஸவம் - ஆவணி - 25 நாட்கள் திருவிழா பவித்திர உற்சவம் - 10 நாட்கள் திருவிழா இது தவிர மாதந்தோறும் சங்கடஹர சதுர்த்தி தினத்தின் போது மூலவருக்கு அபிஷேக ஆராதனைகள் மிக விமரிசையாக நடக்கும். அப்போது ஆயிரக்கணக்கில் பக்தர்கள் கலந்து கொள்வர்

## தல சிறப்பு

விநாயகர் தலங்களில் வேறு எங்குமே இல்லாத சிறப்பாக பள்ளியறை இங்கு உள்ளது. இங்கு பள்ளியறையில் விநாயகரோடு உடன் இருப்பது அவரது தாயார் சக்தி தேவியார் ஆவார். தினமும் நைவேத்தியம் முடிந்தவுடன் விநாயகர் பள்ளியறைக்கு செல்வார். இதன் அடையாளமாக பாதம் மட்டுமே இருக்கும் உற்சவ விக்ரகம் கொண்டு செல்லப்படுகிறது. கிணற்றின் மீதுதான் மூலவர் : தற்போது மூலவரான மணக்குளத்து விநாயகர் இருக்கும் பீடம் இருப்பதே நீர் நிலை அமைந்துள்ள ஒரு கிணறு அல்லது குளத்தின் மீதுதான் என்பது இத்தலத்தை நன்கு அறிந்த பலருக்கும் தெரியாத செய்தி. பீடத்தின் இடப்பக்கம் மூலவருக்கு மிக அருகில் அரை அடி விட்டத்தில் ஒரு ஆழமான குழி செல்லுகிறது. அதில் தீர்த்தம் உள்ளது. இதன் ஆழம் கண்டுபிடிக்க முடியவிலலை. சென்றுகொண்டே இருக்கிறது. இதில் வற்றாத நீர் எப்போது உள்ளது. இது முன்காலத்தில் இருந்த குளமாவும் இருக்க வாய்ப்பிருக்கிறது என்று கூறுகிறார்கள்.

## திறக்கும் நேரம்

காலை மணி 6 முதல் 1 மணி வரை மாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரை திறந்திருக்கும்.

## முகவரி

அருள்மிகு மணக்குள விநாயகர் திருக்கோயில், புதுச்சேரி - 605 001.

## பொது தகவல்

தொல்லைக் காசு சித்தர் இந்த மணக்குளத்து விநாயகரை வணங்கியுள்ளார்.

பாரதி, அரவிந்தர் அன்னை ஆகியோர் இத்தலத்தின் தீவிர பக்தர்களாக இருந்துள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

இங்கு தினந்தோறும் அன்னதானம் நடைபெறுகிறது. மூன்று வேளையும் பிரசாதம் செய்து பக்தர்களுக்கு தருகிறார்கள்.

## பிரார்த்தனை

எல்லா விதமான பிரார்த்தனைகளும் இங்கு நிறைவேறுகின்றன. கல்யாணவரம், குழந்தை வரம் உள்ளிட்ட எந்த காரியமானாலும் இவரை வணங்கினால் நன்மை கிடைக்கிறது. தொழில் தொடங்குவோர், புதுக்கணக்கு எழுதுவோர், கல்யாண பத்திரிக்கை வைத்து வழிபட விரும்புவோர், புது வாகனங்கள் வாங்குவோர் இத்தலத்துக்கு பெருமளவில் வருகின்றனர்.

இதில் குறிப்பிடத்தக்க அம்சம் எதுவெனில் இந்து மதம் என்றில்லாமல் முஸ்லிம், கிறிஸ்துவ மதத்தை சார்ந்தவர்களும் வெளிநாட்டினரும் பெருமளவில் இங்கு வந்து வழிபடுகிறார்கள். பாண்டிச்சேரியை விட்டு வெளியூர் கிளம்புவர்கள் இத்தலம் வந்து மணக்குள விநாயகரை வணங்கிவிட்டுத்தான் தாங்கள் போக வேண்டிய ஊருக்கு போகிறார்கள் என்பது ஆச்சர்யமான உண்மை. அத்தனை விசேஷம் படைத்தவர் இந்த மணக்குளத்து விநாயகர்.




### நேர்த்திக்கடன்

உண்டியல் காணிக்கை, வெளிநாட்டு பக்தர்களின் உபயம் ஆகியவற்றால் கோயில் மிகுந்த சிறப்புடன் திகழ்கிறது. அமெரிக்க வைரத்தாலேயே கவசம் செய்து கொடுத்திருக்கிறார்கள் என்பது அதற்கு உதாரணம். இத்தலத்தில் முக்கியமாக பக்தர்கள் தங்கள் நேர்த்திகடனாக சித்தி புத்தி விநாயகருக்கு கல்யாண உற்சவம் நடத்தி வைக்கிறார்கள் வெள்ளித்தேர் இழுத்தும் நேர்த்திகடன் செலுத்துகிறார்கள். தவிர கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு அன்னதானமும் செய்கிறார்கள்.

### தலபெருமை

பிரெஞ்சுக்காரர்கள் ஆட்சிகாலத்தில் கி.பி.1688ல் பிரெஞ்சுகாரர்கள் தங்களுக்காக கோட்டை ஒன்று கட்டினர். இக்கோட்டைக்கு பின்புறம் அமைந்திருந்த கோயிலே மணக்குள விநாயகர் திருக்கோயில். இத்திருத்தலத்தின் மேலண்டைப்பகுதியில் ஒரு குளம் இருந்ததாகவும் அது கடற்கரைக்கு அருகில் இருந்ததால் அவ்விடத்தில் மணல் அதிகமாக வந்ததாகவும் ஆகவே அக்குளத்திற்கு மணற்குளம் என்று பெயர் வந்ததாகவும் உறுதியாகச் சான்றுகளுடன் கூறுவர். புதுச்சேரியைப் பற்றி அறியக் கிடக்கின்ற பல தரப்பட்ட வரலாற்றுச் செய்திகள் இந்த உண்மையை வலியுறுத்துகின்றன. இந்த மணற்குளத்தின் கீழ்க் கரையில் தான் விநாயகர் ஆலயம் எழுப்பப் பட்டிருக்கின்றது. இதன் காரணமாக இந்த ஆலயத்திற்கு மணற்குள விநாயகர் ஆலயம் என்ற பெயர் பிரபலமாயிற்று.

### சிறப்பம்சம்

அதிசயத்தின் அடிப்படையில்: விநாயகர் தலங்களில் வேறு எங்குமே இல்லாத சிறப்பாக பள்ளியறை இங்கு உள்ளது. இங்கு பள்ளியறையில் விநாயகரோடு உடன் இருப்பது அவரது தாயார் சக்தி தேவியார் ஆவார். தினமும் நைவேத்தியம் முடிந்தவுடன் விநாயகர் பள்ளியறைக்கு செல்வார். இதன் அடையாளமாக பாதம் மட்டுமே இருக்கும் உற்சவ விக்ரகம் கொண்டு செல்லப்படுகிறது. ✳



## பிள்ளையார் சுழி போட்டு எழுதுவதற்கு காரணம் தெரியுமா?

ஓம் என்ற மந்திரத்திற்கு பிறகே கணேசாய நம, நாராயணாய நம, சிவாயநம என்று மந்திரங்களைச் சொல்கிறோம். இதில் ஓம் என்பதை அ, உ, ம், என்று பிரிக்க வேண்டும். அதாவது அ, உ, ம் என்ற எழுத்துகளை இணைத்தால் ஓம் என்று வரும். அ என்பது படைப்பதையும, உ என்பது காப்பதையும், ம் என்பது அழிப்பதையும் குறிக்கும். அ என்பது முதலெழுத்து. இது வாழ்வின் ஆரம்பத்தை குறிக்கிறது. உ என்பது உயிரெழுத்துக்களின் வரிசையில் ஐந்தாவதாக வருகிறது. மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து உறுப்புகளை மனிதர்கள் அடக்கி வைத்துக் கொண்டால், ஆயுள் அதிகரிக்கும் என்பதும், ஆயுள் கூடக்கூட, மனிதர்கள் துவங்கியது தடையின்றி நடக்கும் என்பதும் தெரிந்த விஷயம். மேலும், உ என்பது காத்தல் எழுத்து என்பதால், இறைவன் நம்மை பாதுகாப்பதைக் குறிக்கிறது. நம் செயல்கள் தடையின்றி நடக்க வேண்டுமானால் நமக்கொரு பாதுகாப்பு வேண்டும். இதற்காகவே உ என எழுதுகிறோம்.

# மனிதமுக விநாயகர்

முழுமுதற் கடவுளான விநாயகரை ஆலயங்களில் யானை முகத்தோனாகவே தரிசிக்கிறோம். சற்று வித்தியாசமான வடிவில் நரமுக விநாயகராக திலதர்ப்பணப்புரியிலும், முகமில்லா விநாயகராக சித்தமல்லியிலும் தரிசிக்கலாம்.

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் வட்டத்தில்- திருவாரூரிலிருந்து 18 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது திலதர்ப்பணபுரி. இங்குள்ள சிவாலயத்தில் தனிச்சந்நிதியில் மேற்கு நோக்கி தும்பிக்கையின்றி மனித முகத்துடன் விநாயகர் அருள்பாலிக்கிறார்.

யானை முகமாகத் தோன்றுவதற்கு முன் பார்வதி தேவியால் உருவாக்கப்பட்ட உருவம் இது.

முதன்முதலில் உருவானவர் என்பதால் இவ் விநாயகர் ஆதிவிநாயகர் என்று அழைக்கப்படுகிறார்.

இத்தலம் பிதுர்தோஷ நிவர்த்தி தலமாகவும் விளங்குகிறது. திலம்- எள்; தர்ப்பணம்- இறந்தவர்களுக்குச் செய்யப்படும் பித்ருக் கடன்; புரி - தலம். பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்யச் சிறந்த இடம் என்பதால் இத்தலம் திலதர்ப்பணப்புரி என்று அழைக்கப்படுகிறது.

ஆதிவிநாயகர் என்று அழைக்கப்படும் நரமுக விநாயகர் மனித உருவத்தோடு பாசம், அங்குசம், அபயஹஸ்தமாக ஆனந்த முத்திரையுடன் கூடிய கைகளோடு, இடதுகையை இடது காலின்மீது வைத்தபடி காட்சி அளிக்கிறார்.

இவ்வாலயத்து ஈசன் முக்தீஸ்வரர், இறைவி சொர்ணவல்லித் தாயார்.

ஸ்ரீராமர் தன் தந்தை தசரதருக்கும், தந்தைக்கு நிகராகத் தான் கருதிய ஜடாயுவுக்கும் இத்தலத்தில்தான் பிண்டம் இட்டார். தசரதர் அதை நேரில் பெற்றுக்கொண்டார் என்பதும், ஸ்ரீராமர் வைத்த பிண்டங்கள் சிவலிங்கங்களாக மாறி ஸ்ரீராமருக்கு அனுக்கிரகம் செய்தன என்பதும் வரலாறு. ஆலயத்தில் பிதுர் லிங்கங்களுக்கு நேராக, ஸ்ரீராமர் வலது காலை மண்டியிட்டு தர்ப்பணம் செய்யும் நிலையில் உள்ள சிலை ஒன்று உள்ளது.

இவ்வாலயத்தைப் பற்றி சிறப்பான வரலாறு ஒன்றும் கூறப்படுகிறது.

கோதாவரி நதிக்கரையில் உள்ள போகவதி நாட்டை நற்சோதி என்ற மன்னன் ஆண்டு வந்தான். ஒருசமயம் நாரத முனிவர் அவனது அரசவைக்கு வந்திருந்தார். மன்னன் நாரதரிடம், இப்பூவுலகில் எந்தத் தலம் மிகவும் சிறந்த புண்ணியம் வாய்ந்த தலம்? என்று கேட்டான்.

மன்னனே கண்டறிந்து கொள்ளட்டும் என்பதற்காக தலத்தின் பெயரைச் சொல்லாமல் நாரதர், எந்தத் தலத்தில் பித்ருக்கள் பிண்ட தானத்தை நேரில் தோன்றி பெற்றுக் கொள்கிறார்களோ அதுவே உத்தம புண்ணியத்தலம் என்று கூறினார். பின்னர் நாரதர் மன்னனிடம் விடை பெற்றுச் சென்றார்.

நாரதர் கூறியபடி நற் சோதி மன்னன் இந்திய நாட்டிலுள்ள பல தலங்களுக்கும் சென்று திலதர்ப்பணமும், பிண்ட தானமும் செய்துகொண்டு வந்தான். எந்த இடத்திலும் பித்ருக்கள் நேரில் வராததால் மனம் வருந்திய மன்னன் தன் நாட்டுக்கே திரும்பிச் சென்றுவிடலாம் என முடிவு செய்தான். அப்போது மன்னன் எதிரில் நாரதர் தோன்றி, நான் கூறிய புண்ணிய தலத்திற்கு அருகில் வந்துவிட்டாய்.

சில காத தூரத்திற்கு அப்பால் திலதைப்பதி என்ற தலம் இருக்கிறது. அங்கு சென்று அரிசிலாற்றில் நீராடி, உன் பித்ருக்களுக்கு தில தர்ப்பணமும் பிண்ட தானமும் செய்.

அவர்கள் உன் எதிரில் தோன்றி அவற்றை வாங்கி உண்பார்கள் என்று கூறினார்.

மன்னன் திலதைப்பதி சென்றான். அங்கு தவம் செய்துகொண்டிருந்த காலவ முனிவரை வணங்கி ஆசிபெற்றான். ஆலயத்திற்குச் சென்று இறைவன்- இறைவியை வணங்கினான்.

அமாவாசையன்று அங்குள்ள பிரம்ம தீர்த்தத்தில் நீராடி நடுப்பகலில் சங்கல்பத்துடன் திலதர்ப்பணம் செய்து பிண்டம் சமர்ப்பித்தான். பித்ருக்கள் அவன்முன் தோன்றி, படைக்கப்பட்ட பிண்டத்தை ஏற்று உண்டு மகிழ்ந்து மன்னனுக்கு நல்லாசி வழங்கி மறைந்தனர். மன்னன் மனம் மகிழ்ந்தான்.

திலதர்ப்பணப்புரி தலத்திற்கு வந்து பித்ருசாபம், பித்ருதோஷம் போன்றவை நீங்க தர்ப்பணம் செய்து பரிகாரம் காணலாம். மூதாதையர் இறந்த நாள் தெரியவில்லை என்றாலும், இத்தலத்தில் எப்போது வேண்டுமானாலும் பித்ருக்கடன் ஆற்றலாம்.

பார்வதிதேவி உருவாக்கிய திருமேனியின் தலையை சிவபெருமான் வெட்டியபிறகு உள்ள வடிவில் சித்தமல்லி என்ற தலத்தில் தலையில்லாத விநாயகராக அருள்பாலிக்கிறார்.

யானை முகத்தோனாகிய விநாயகரை மனித முகத்துடன் கூடிய வடிவில் திலதர்ப்பணப்புரியிலும், தலை வெட்டப்பட்ட நிலையில் உள்ள வடிவில் சித்தமல்லியிலும் வழிபடலாம். ✳

## ஔவையார் அருளிச் செய்த

# விநாயகர் அகவல்

தேனினும் இனிய தமிழ் மொழியில் அருள்ஞான நூல்கள் மிகவும் அளவாக உள்ளன. மக்கள் வாழ்நாளில் அமைதியுடைய நாள் மிகச்சில, அச் சில நாளில் நன்கு அறிந்து தெரிந்து கொள்ளத்தக்க வகையில், அளவாய் ஞானநூல்கள் தமிழில் இனிது அமைந்திருக்கின்றன. ஆனால், பொருள் நிறைவுக்கோ, கருத்து ஆழத்துக்கோ, பழக்கப் பயனுக்கோ அவற்றிற் குறைவு ஒன்றுமில்லை. மேலும், தெளிவு மிகுந்து, சுவை உயர்ந்து, மெய் பொலிந்து, அருள் ஒளி விடுவன தமிழ் நூல்கள்.

அத்தகைய அழகிய ஞானநூல்களில் ஒன்று, ஔவையார் அருளிய விநாயகர் அகவல். எளிய நடையில் சிறு பிள்ளைகளும் ஓதி நலம்பெறும் வகையில் அமைந்தது அது. அவ்வாறே, விநாயகர் வழிபாடும், பிள்ளைகட்கும் ஏற்ற இனிய எளிய வழிபாடு. மண்ணைப் பிடித்து, அறுகம் புல்லை எடுத்து இட்டு, உண்டை படைத்து வணங்கும் மிக எளிய வழிபாடு இது.

ஔவையார் சிறுபிள்ளைகட்கு நூல்கள் எழுதுவதில் வல்லவர். சிறுபருவத்திலேயே நெட்டுருச் செய்து கொண்டு நாளுக்கு நாள் மெய்ப்பொருள் உணரும் வகையில், அப்பிராட்டியார் நூல்கள் அருளிச் செய்துள்ளார். பெரிய மூதறிவினரே சிறுவர்க்கும் யாவர்க்கும் நூல்கள் அருளுதற்குரியவர்.

இந்நூல் வாழ்க! இதன் செய்கையர் வெல்க! திரு அருள் தழைக!

### விநாயகர் அகவல் - மூலம்

*சீதக் களபச் செந்தா மரைப்பூம்*
*பாதச் சிலம்பு பலவிசை பாடப்*
*பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்*
*வன்னமருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்*
*பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்*

*வேழ முகமும் விளங்குசிந் தூரமும்*
*அஞ்சு கரமும் அங்குச பாசமும்*
*நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்*
*நான்ற வாயும் நாலிரு புயமும்*
*மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்*

*இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்*
*திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்*
*சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான*
*அற்புதம் நின்ற கற்பகக் களிறே!*
*முப்பழ நுகரும் மூஷிக வாகன!*

*இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்*
*தாயா யெனக்குத் தானெழுந் தருளி*
*மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்*
*திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்*
*பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து*

*குருவடி வாகிக் குவலயந் தன்னில்*
*திருவடி வைத்துத் திறமிது பொருளென*
*வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்*
*கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே*
*உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்*

*தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி*
*ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்*
*இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்*
*கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்(து)*
*இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து*

*தலமொரு நான்கும் தந்தெனக் கருளி*
*மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே*
*ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்*
*ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி*
*ஆறா தாரத்(து) அங்குச நிலையும்*
*பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே*

*இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்*
*கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி*
*மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்*
*நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்*

*குண்டலி யதனிற் கூடிய அசபை*
*விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து*
*மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்*
*காலால் எழுப்பும் கருத்தறி வித்தே*
*அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்*

*குமுத சகாயன் குணத்தையும் கூறி*
*இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்*
*உடல்சக் கரத்தின் உறுப்பையும் காட்டிச்*
*சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்*
*எண் முகமாக இனிதெனக் கருளிப்*

*புரியட்ட காயம் புலப்பட எனக்குத்*
*தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்*
*கருத்தினில் கபால வாயில் காட்டி*
*இருத்தி முத்தி யினிதெனக் கருளி*
*என்னை யறிவித்(து) எனக்கருள் செய்து*

*முன்னை வினையின் முதலைக் களைந்து*
*வாக்கும் மனமும் இல்லா மனோலயம்*
*தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்(து)*
*இருள்வெளி யிரண்டுக்(கு) ஒன்றிடம் என்ன*
*அருள்தரும் ஆனந்தத்(து) அழுத்தியென் செவியில்*

*எல்லை யில்லா ஆனந் தம்அளித்(து)*
*அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்*
*சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்*
*சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி*
*அணுவிற்(கு) அணுவாய் அப்பாலுக்(கு)*
*அப்பாலாய்க்*

*கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி*
*வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்*
*கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி*
*அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை*
*நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்*

*தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட*
*வித்தக விநாயக விரைகழல் சரணே!*

## விநாயகர் அகவல்: ஒரு தத்துவ அறிமுகம்

விநாயகர் அகவல் என்னும் நூல் ஔவைப் பிராட்டியாரால் அருளிச் செய்யப்பட்டது. இது தமிழ்ச் சைவர்களின் நித்திய பாராயண நூல்களில் ஒன்றாக விளங்குகின்றது. தமிழர்கள் கைக்கொண்டொழுகிய வழிபாட்டுநெறியோடு யோகநெறியையும் விளக்கி யருளும் சிறப்பு வாய்ந்தது. விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு இந்த நூல் தமிழருக்கு அறிவிக்கும் அரிய செய்திகளை இக்கட்டுரை திரட்டித் தருகின்றது. இக்கருத்துக்கள் சைவசித்தாந்தப் பேராசிரியர் திரு இரா.வையாபுரியார் அவர்கள் விநாயகர் அகவலுக்கு எழுதியுள்ள பேருரையினின்றும் திரட்டப்பட்டது.

'சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர், சிவபுரத்திலுள்ளார். விநாயகர் அகவலைப் பாராயணம் செய்யும்போது இப்பொருள்கள் நினைவுக்கு வந்து பாராயணத்தைப் பயனுடையதாக்கும்.

இந்நூல் 15ஆவது வரி 'அற்புதம் நின்ற கற்பகக் களிறே' என்று கூறுவதால் இந்நூலில் கூறப்படும் விநாயகப் பெருமானின் திரு நாமம் 'கற்பக விநாயகர்' என்பது.

அவர் தன் நிலையில்,

- சொல்லுக்கும் நினைவுக்கும் எட்டாதவர்.
- துரியநிலையில் இருப்பவர்.
- ஞானமே சொரூபமாக இருப்பவர்.

இது அவருடைய சொரூப நிலை அல்லது உண்மை நிலை எனப்படும். இது பரசிவமாக இருக்கும் நிலை.

ஞானமே சொரூபமாக உடைய பரசிவம் தன்னை அடியவர்கள் வழிபட்டு உய்வதற்காகவும் அடியவர்களுக்கு அருள் செய்வதற்காகவும் அற்புதமான வடிவம் கொண்டு காட்சிக்கும் நினைப்புக்கும் சொல்லுக்கும் எட்டுபவராக எளிவந்து அருளும். அத்தகைய அற்புதக் கோலங்களில் ஒன்று விநாயக வடிவம். (அற்புதம் – அற்புதம் என்பது உலகில் எங்கும் காணப்படாது இயற்கைக்கு மாறாக நிகழ்வது. இது திருவருளால் மட்டுமே நிகழ்வது.)

அவ்வற்புத வடிவமானது :

- தாமரை மலர்போன்ற மென்மையும் அழகும் மலர்ச்சியும் உடைய திருவடிகள்.
- அத்திருவடிகளில் இனிய ஒலியெழுப்பும் சிலம்பு.
- பொன்னரைஞாண்.
- அழகிய பட்டாடை அணிந்த இடுப்பு
- பேழை (பெட்டி) போன்ற வயிறு.
- பெரிய வலிமை மிக்க தந்தம்.
- யானைமுகம்.
- முகத்தில் அணிந்த சிந்தூரம்.
- ஐந்துகைகள்.
- அங்குசம், பாசம் என்னும் ஆயுதங்கள்.
- நீலமேனி (நீலம் – கருமை)
- தொங்குகின்ற வாய்.
- நான்கு தோள்.
- மூன்று கண்.
- கன்னத்தில் மதநீர் வடிந்த சுவடு.
- இருபெரிய செவிகள்.
- பொற்கிரீடம்
- பூணூல் புரள்கின்ற மார்பு.

இது குணங்குறி அற்ற பரசிவம் உயிர்களுக்கு அருளும் பொருட்டு மேற்கொள்ளும் வடிவங்களுள் ஒன்று. அதனால் தடத்த வடிவம் அல்லது தடத்த நிலை எனப்படும். இறைவடிவங்களைத் தரிசித்துத் தொழும் போது திருவடியிலிருந்து தொடங்கி உச்சிவரைக் கண்டு திருமேனியில் விழியைப் பதித்தல் முறை. திருவடி என்பது திருவருள். திருவருளால் இக்காட்சி நடை பெறுகின்றது என்பது பொருள்.

- அவருக்கு நிவேதனப் பொருள்கள் முப்பழம்.
- ஊர்தி மூஷிகம்
- அவர் தன்னை வழிபடும் அடியவர்களுக்குத் தாய்போன்ற அன்புடையவர்.
- எப்பொழுதும் அடியவர்களைப் பிரியாமல், அவர்களுடைய அறிவுக்கு அறிவாய், அறிவினுள்ளே இருந்து அவர்களுக்கு வாழ்வில் வழிகாட்டுவார்.
- அடியவர்களுக்குப் பக்குவம் வந்த காலத்தில் குருவடிவாக வெளிப்பட்டு வந்து, முன் நின்று தீக்கை செய்து உண்மை ஞானம் புகட்டுவார்.

- அடியவர்களை யோகநெறியிலும் ஞானநெறியிலும் நிற்கச் செய்வார்.
- ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலப் பிணிப்பிலிருந்து விடுபடச் செய்வார்
- நின்மல அவத்தை (அருளுடன் கூடிநிற்கும் நிலை)யில் நிற்கச் செய்வார்.
- அளவில்லாத ஆனந்த அனுபவம் விரியச் செய்வார்.
- இறுதியில் தன்னைப்போலத் தன் அடியவர் களையும் என்றும் மாறாத அழியாத நிலையில் (தத்துவநிலை) நிற்கச் செய்வார்.

## விநாயகப் பெருமான் உணர்த்தும் ஞானநெறி

- குருவாக வந்து தீக்கை அருளுகின்றார்
- இதுவரையிலும் அவ்வுயிர் செத்துப் பிறந்து உழல்வதற்குக் காரணமான மயக்க அறிவைப் போக்குகின்றார்.
- திருவைந்தெழுத்தை (பஞ்சாக்கரம்) நெஞ்சில் பதிவிக்கின்றார்.
- உள்ளத்தில் வெளிப்பட்டு விளங்கி நிற்கின்றார்.
- பதி, பசு, பாசம் எனும் அனாதியான முப்பொருள் களின் இயல்பினை விளக்கி உரைக்கின்றார். சஞ்சிதம் எனும் பழவினையைப் போக்குகின்றார். ஞானோபதேசம் செய்கின்றார்.
- உபதேசித்த ஞானப்பொருளில் ஐயம், திரிபு ஆகியன நேரிடாமல் தெளிந்த உணர்வு உண்டாமாறு அருளுகின்றார்.
- ஐம்புலன்கள் விடயங்களை நோக்கி ஓடி விருப்பு வெறுப்புக் கொண்டு துன்புறாதபடி புலனடக்கம் உண்டாவதற்குரிய வழியினைக் காட்டியருளு கின்றார்.
- உடம்பில் உள்ள தத்துவக் கருவிகள் எவ்வாறு ஒடுங்குகின்றன என்பதை அறிவிக்கின்றார்.
- பிராரத்த வினை தாக்காதவாறு காப்பாற்றுகின்றார்.
- ஆணவமலத்தால் வரும் துன்பத்தைப் போக்குகின்றார்.
- ஆன்மாவை நின்மல நிலைக்கு உயர்த்தி நின்மலதுரியம் நின்மலதுரியாதீதம் என்னும் நிலைகளில் திருவருளுடனும் சிவத்துடனும் கலந்து நிற்கச் செய்கின்றார்.

குருவாக வந்த விநாயகப் பெருமான் இவ்வாறு ஞானநெறியை அருளி, இந்த ஞானநெறியில் நெகிழ்ந்து விடாது உறுதியாய் நிற்பதற்குரிய யோகநெறியினையும் அறிவித்தருளுகின்றார்.

- ஒன்பது வாயில்களை உடைய உடம்பில் உள்ள ஐம்புலன்கள் ஆகிய கதவுகளை அடைத்து மனம் உள்ளே (அகமுகப்பட்டு) நிற்கச் செய்கிறார்.
- இதனால் ஆதாரயோகம் மேற்கொள்ளும் முறையினைத் தெளிவிக்கின்றார்.
- மவுனசமாதி நிலையினை அடையச் செய்கின்றார்.
- இடநாடி, வலநாடி, சுழுமுனா நாடி என்னும் நாடிகளின் வழியாய் மூச்சுக்காற்று இயங்கும் முறையினைத் தெரிவிக்கின்றார்.
- சுழுமுனா நாடி மூலாதாரத்திலிருந்து கபாலம் வரையிலும் (தலையுச்சி) சென்று நிற்கும் நிலையினைத் தெரிவிக்கின்றார்.
- அவ்வாறு செல்லும் வழியில் உள்ள அக்கினி மண்டலம், சூரிய மண்டலம், சந்திர மண்டலம் என்னும் பகுதிகளின் இயல்பைத் தெரிவிக்கின்றார்.
- மூலாதாரத்தில் உள்ள 'ம்ச மந்திரம், குண்டலினி சத்தி, பிரணவ மந்திரம் என்பனவற்றின் இயல்பினைத் தெரிவிக்கின்றார்.
- இடகலை, பிங்கலை என்னும் மூச்சுக்காற்றினால் குண்டலினி என்னும் சத்தியை எழுப்பிச் சுழுமுனைநாடி வழியாக மேலே கபாலம் வரையிலும் பிரணவமந்திரத்துடன் ஏற்றும் முறையினையும் தெரிவிக்கின்றார்.
- இவ்வகையில் பிரணவமந்திரம் பலகலைக்க ளாகப் பிரிக்கப்பட்டு, (மூன்று, ஐந்து, பன்னிரண்டு, பதினாறு) உடம்பில் அங்கங்கே நிறுத்தித் தியானிக்கப்படுவதாகிய பிராசாத யோகம் என்னும் நெறியினையும் கற்பிக்கின்றார்.
- இப்பிராசாத யோகத்தினால் ஆன்மா பிரமரந்திரம் (தலையுச்சி) என்னும் இடத்தையும் கடந்து மேலே துவாதசாந்தப் பெருவெளி என்னும் இடம்வரையிலும் சென்று சிவத்துடன் கலந்து நின்று சிவானந்தம் அனுபவிக்கச் செய்கின்றார்.
- இவ்வாறு ஆறாதார யோகம், அட்டாங்க யோகம், பிராசாத யோகம் என்னும் முறைகளில் நிற்கச் செய்து மனோலயம் அடையச் செய்கின்றார்.
- இதனால் உண்டாகும் அகக் காட்சியினால் ஆன்மாவின் இயல்பு, உடம்பின் இயல்பு, மாயாமலம் கன்மமலம் ஆணவமலம் என்பனவற்றின் உண்மையியல்பு ஆகியவற்றை அறிய வைக்கின்றார்.
- சப்தப்பிரபஞ்சம் (ஒலியுலகம்) அர்த்தப் பிரபஞ்சம் (பொருளுலகம்) என்பனவற்றினியல் பையும் அவற்றில் பரம்பொருள் சிவலிங்க ரூபமாகக் கலந்திருக்கும் முறையினையும் அறியச் செய்கிறார்.

- இத்தகைய பரம்பொருள் மிகச் சிறிய பொருள்களுக்கெல்லாம் மிகச் சிறியதாகவும், மிகப் பெரிய பொருள்களுக்கெல்லாம் மிகப் பெரிய பொருளாகவும் இருக்கும் நிலையை உணரச் செய்கின்றார்.
- இத்தகைய பரம்பொருளை உலகவாழ்வில் இருந்துகொண்டே அறிவதும் அப்பொருளுடன் கலந்து ஆனந்தம் அனுபவிப்பதும் கரும்பினைக் கணுக்கணுவாகச் சுவைத்துச் செல்லும் அனுபவம் போன்றது.
- இந்த அனுபவம் நீடித்திருக்கத் திருநீறு உருத்திராக்கம் முதலிய சிவசின்னங்களை அணிய வேண்டும்.
- அவற்றையும் அவற்றை அணிந்துள்ள அடியார்களையும் சிவமெனவே கண்டு வழிபடுதல் வேண்டும்.
- எப்பொழுதும் அடியார் கூட்டத்துடன் கலந்திருத்தல் வேண்டும்.
- திருவைந்தெழுத்து மந்திர செபத்தைக் கைவிடலாகாது.

இவ்வாறு விநாயகப் பெருமான் பக்குவமுடைய ஆன்மாவுக்கு ஞானோபதேசம் செய்து ஞானநெறியிலும் யோகநெறியிலும் நிற்கச் செய்து இவ்வுலகிலேயே சீவன்முத்தனாக இருந்து சிவானந்தம் அனுபவிக்கும் நிலையினையும் தந்து, அவ்வான்மா சிவத்தைப் போலென்றும் ஒரேதன்மையுடையதாய் இருக்கும் நிலையினை அடையச் செய்கிறார். அந்நிலையிலிருந்து அவ்வான்மா தன்னைவிட்டு நீங்காமல் தனக்கே அடிமையாய் இருக்கும் நிலைமையினையும் விநாயப் பெருமான் அருளுகின்றார் என்னும் அரிய செய்திகளை விநாயகர் அகவல் என்னும் இந்த நூலில் கூறுகின்றார்.

## கணபதி ஹோமத்தின் சிறப்பு



எந்தத் தொழில் தொடங்கினாலும் கணபதி ஹோமம் செய்தபிறகு துவக்குவது மிகச்சிறந்த பலனைத்தரும். வீடுகளில் கிரகப்பிரவேசம் நடத்தும்போது கணபதி ஹோமம் நடத்தி, புதுவீடு புகுவது எக்காலமும் நன்மை தரும். குடும்பத்தில் தொடர்ந்து சுகவீனம் ஏற்பட்டால் கணபதி ஹோமம் நடத்தி உடல்நிலை நன்றாகப் பெறலாம். ஒரு கடிதம் எழுதும்போதும் கூட பிள்ளையார்சுழியுடன் துவங்குவது மரபு. விநாயகரே முழு முதற்கடவுள். சிவபெருமான் முப்புரங்களையும் அழிக்க புறப்பட்ட போது கணபதி மந்திரத்தை சொல்ல தவறிவிட்டார். எனவே செல்லும் வழியில் அவரது தேர் பழுதானது. பெற்ற பிள்ளையாக இருந்தாலும் கூட கணபதியை வணங்கிய பிறகே எந்த செயலையும் துவங்கவேண்டும் என உத்தரவிட்டவரே சிவபெருமான்தான். அவரே அந்த விதியை கடைபிடிக்காததால் இந்த நிலைமை ஏற்பட்டது. சிவபெருமானின் தேர் அச்சு முறிந்த இடத்தை இப்போது அச்சிறுபாக்கம் என்று அழைக்கிறார்கள். செங்கல்பட்டு அருகே இந்த ஊர் அமைந்துள்ளது. இங்குள்ள விநாயகரையும் அச்சிறு விநாயகர் என்றே அழைக்கிறார்கள். கணபதி ஹோமத்தை விநாயகர் வேள்வி என்றும் சொல்வதுண்டு. விநாயகரை வணங்கி, விநாயகர் குறித்த மந்திரங்கள் ஓதி, அவரை புகழ்ந்து பக்திப்பாடல்களை மனமுருகிப் பாடி கணபதி ஹோமத்தை நிறைவேற்ற வேண்டும். நம் வீடுகளில் நடக்கும் காதணி விழா, பிறந்தநாள், திருமண நிகழ்ச்சி, தொழிற்சாலைகளில் நடக்கும் பவள விழா, முத்துவிழா ஆகிய நிகழ்ச்சிகளிலும் கணபதி ஹோமம் செய்ய வேண்டும். புதிய இயந்திரங்கள் வாங்கினால் அவை பழுதின்றி இயங்க விநாயகர் வேள்வி அவசியம். நல்ல காரியங்களில் மட்டுமின்றி மறைந்த நம் முன்னோரை நினைவுபடுத்தும் நாட்களான தை அமாவாசை, ஆடி அமாவாசை ஆகிய நாட்களிலும் கணபதி ஹோமம் செய்வது மிகச்சிறந்த பலனைத்தரும். நமது சக்திக்கு ஏற்றபடி செலவு செய்து இந்த பூஜையை நடத்தலாம்.



# ஐங்கரன் ஆனது ஏன்?

க. ஜெகதீசுவரம் பிள்ளை

*தகவல்: பண்டிதர் க உமாமகேசுவரம்பிள்ளை, திரு விமால்*

முருகன் ஆலயங்களிலே ஆறு ஆலயங்கள் முக்கியமாகிவிட்டன. பலரும் விரும்பி, தேடிப்போய் வழிபடும் தலங்கள் அவை. நக்கீரர் திருமுருகாற்றுப் படையிலே பாடியுள்ள தலங்கள். திருச்செந்தூர், பழனி, திருப்பரங்குன்றம், திருத்தணி, பழமுதிர்சோலை, சுவாமிமலை என்பவைதான் அவை. திருத்தணி அவற்றுள் குறிப்பிடத்தக்கது. இங்கு சரவணப் பொய்கை இருக்கிறது. மிக அழகான கோயில் இது. இங்கு ஓர் அழகிய விநாயகர் இருக்கின்றார். ஆபத்சகாய விநாயகர் என்பது அவர் பெயர். அவர்முன் ஒரு புலவர் வந்து நின்று வணங்குகிறார். விநாயகரின் திருவுருவத்தை மிகக் கவனமாகப் பார்க்கிறார். ஐந்து திருக்கரங்களுடன் அழகாகக் காட்சியளிக்கும் விநாயகர் புலவரின் உள்ளத்தில் ஒரு கேள்வியை எழுப்புகிறார். விநாயகருக்கு ஏன் ஐந்து திருக்கரங்கள்? இதுதான் அவர் மனத்தில் எழுந்த கேள்வி.

விநாயகரின் ஒரு கையிலே மோதகம் இருக்கிறது. விநாயகர் மோதகப்பிரியன் என்பது அனைவரும் அறிந்த ஒரு விடயம். இன்னொரு கையிலே தன் தந்தத்தில் ஒன்றை முறித்து வைத்திருக்கிறார். பாரதம் எழுத தந்தம் எடுத்தார் என்று சொல்வார்கள். தேவர்களைக் காக்க என்றும் சொல்வார்கள். நான்ற கையாகிய துதிக்கையிலே ஒரு நிறைகுடம் வைத்திருக்கிறார். ஒரு கையிலே பாசம், இன்னொரு கையிலே அங்குசம். இப்படி ஒவ்வொரு திருக்கரத்திலும் ஏதோ ஒரு பொருளை வைத்துக்கொண்டு விநாயகர் காட்சி தருகிறார். இந்தக் காட்சியை அந்தப் புலவர் தம் மனத்திருத்திக் கண்களை மூடிச் சிந்திக்கிறார்.

திடீரென்று அந்தப் புலவருக்கு ஒரு விடை கிடைக்கிறது. விடை கிடைத்த மகிழ்ச்சியில் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் சொரிகிறது. அதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று, விடை கிடைத்தமை. மற்றையது, இந்த விநாயகர் எவ்வளவு கருணையுள்ளம் கொண்டவர் என்ற உணர்வு. அந்த விடைதான் என்ன?

மோதகம் இருக்கின்ற திருக்கை அவருக்கே என்று ஆகிவிட்டது. ஏனெனில் அவர்தானே அந்த மோதகத்தை அருந்தப்போகிறார். இனி, அடுத்த திருக்கரத்தைப் பார்த்தால், அதிலே மருப்பு இருக்கிறது. அசுரர்களிட மிருந்து தேவர்களைக் காக்கவென ஒடித்த தந்தம் அது. இன்னொரு திருக்கரத்திலே, துதிக்கையிலே கலசம் இருக்கிறது. அதனுள்ளே நீர் இருக்கிறது. அது தன் பெற்றோராகிய சிவன், உமை இருவருக்கும் பாதபூசை செய்வதற்கெனத் தயாராக இருக்கிறது. ஏனைய இரு திருக்கரங்களிலும் பாசம், அங்குசம் என இரு பொருள்கள் உள்ளன. பாசமும் அங்குசமும் யானைப்பாகன் கையிலே அல்லவா இருக்கவேண்டும்? விநாயகர் திருக்கரங்களிலே ஏன்?

ஆன்மாக்களாகிய நாம் ஆணவமலத்தின் முனைப்பி னால் மதம் பிடித்து அலைகிறோம். யானைபோல, மதம் பிடித்த யானைபோல, என்ன செய்வது என்று அறியாது அலைகிறோம். மதம் பிடித்து, கண்ணிலே கோபம் நிறைந்து, எதிரிலே தென்படும் எவற்றையும் அழிக்கும் யானைபோல அலைகிறோம். அந்த ஆணவ மதம்பிடித்த யானையை அடக்கவே ஐங்கரன் தன் இரு திருக்கரங்களி லும் பாசம், அங்குசம் இரண்டையும் வைத்திருக்கின்றார். 'தனதடி வழிபடும் அவரிடர் கடி கணபதி' அல்லவா அவர்? இப்போ கணக்குப் பார்த்தோம் என்றால், தனக்கென்று ஒரு திருக்கரம், தேவருக்கு என்று ஒன்று, பெற்றோருக்கு என்று ஒன்று என ஒவ்வொருவருக்கும் ஒரு திருக்கரத்தை மட்டும் வைத்துக்கொண்டு எனக்கு மட்டும் இரண்டு திருக்கரங்களை வைத்திருக்கிறாரே! நல்வழியிலே போகாமல் நல்லதை நினையாமல், நல்லதைச் செய்யாமல் இருக்கும் தீயவனான என்னைக் காக்கவன்றோ தன் இரு திருக்கரங்களையும் வைத்திருக்கின்றார் இந்த விநாயகர்! அவர் கருணையை என்னவென்று சொல்ல? இந்தவிடை புலவரின் வாயிலே பாடலாக மலர்கிறது. அந்தப் பாடல் இதோ!"

**பண்ணியம் ஏந்துங் கரந்தனக் காக்கிப் பாநிலா**
**மருப்பமர் திருக்கை**

**விண்ணவர்க் காக்கி அரதனக் கலச வியன்கரந்**
**தந்தைதாய்க் காக்கிக்**

**கண்ணிலா ணவவெங் கரிபிணித் தடக்கிக்**
**கரிசினேற் கிருகையு மாக்கும்**

**அண்ணலைத் தணிகை வரைவளர் ஆபத் சகாயனை**
**அகந்தழீஇக் களிப்பாம்**

பண்ணியம் - மோதகம், ஆணவவெங்கரி - மதம் பிடித்த யானை

தணிகைப் புராணத்திலே காப்புச் செய்யுளாக இந்தச் செய்யுள் வருகிறது. அதைப் பாடிய புலவர் கச்சியப்ப முனிவர்.

*

# விநாயக வடிவங்களும் வணங்குவதால் வரும் வளங்களும்...

ஜி.ஆர். சுப்பிரமணியன்

விநாயகர் என்றால் அவருக்கு மேம்பட்ட தலைவர் இல்லை என்று பொருள். அவரை சிருஷ்டித்தவரே சிவபெருமான்தான். இன்னல்கள் அனைத்தையும் தீர்க்கும் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தவரும் சிவபெருமான்தான். ஆனால் திரிபுரம் எரிக்கச் சென்ற சிவன் விநாயகரை வழிபடாமல் சென்றதால் அவரது தேர்ச் சக்கரம் முறிந்தது. பின்னர் விநாயகரை வழிபட்டு அவர் திரிபுரம் எரித்தார். முருகப் பெருமான் வள்ளியை மணம் புரிய உதவியரும் விநாயகப் பெருமானே. சேரமான் பெருமாள் நாயனாரும் சுந்தர மூர்த்தி சுவாமிகளும் திருக்கயிலாயம் சென்றபோது ஔவைப் பாட்டியையும் உடன் வரும்படி வேண்டினர். அப்போது ஔவை விநாயகர் பூஜை செய்து கொண்டிருந்தார். 'அம்மையே! நீ பூஜையை முடி. நானே உன்னைத் திருக் கயிலாயம் கூட்டிச் செல்கிறேன்' என்றார் விநாயகர். அதன்படி ஔவை பூஜையை முடித்ததும் தன் தும்பிக்கையால் ஔவையை சுந்தரமூர்த்தி நாயனாரும் சேரமான் பெருமாள் நாயனாரும் கயிலாயம் போவதற்கு முன்னரே கூட்டிச் சென்றதாக விநாயக புராணம் கூறுகிறது. எனவே விநாயகர் அருளால் எடுத்த காரியம் யாவும் இனிதே நிறைவேறும். ஔவைப் பாட்டி அருளிய விநாயகர் அகவல் படிப்பதால் வாக்குவன்மை லட்சுமி கடாட்சம் உண்டாகும். செய்வினைகள் யாவும் நீங்கும். 51 விநாயகர் வடிவங்களும் அந்த வடிவங்களை வணங்குவதால் நாம் அடையும் பலன்களையும் இனி காண்போம்.

1. ஏகாக்ஷர கணபதி: கணபதி அருள் கிடைக்கும்.
2. மகா கணபதி: பரிபூரண சித்தி.
3. த்ரைலோக்ய மோஹன கர கணபதி: ஸர்வ ரக்ஷாப்ரதம்.
4. லக்ஷ்மி கணபதி: தன அபிவிருத்தி.
5. ருணஹரள கணபதி: கடன் நிவர்த்தி.
6. மகா வித்யா கணபதி: தேவ அனுக்ரகம்.
7. ஹரித்ரா கணபதி: உலக வசியம்.
8. வக்ரதுண்ட கணபதி: அதிர்ஷ்ட லாபம்.
9. நிதி கணபதி: நிதி ப்ராப்தி.
10. புஷ்ப கணபதி: தானிய விருத்தி.
11. பால கணபதி: மகிழ்ச்சி, மன நிறைவு.
12. சக்தி கணபதி: சர்வ காரியசித்தி.
13. சர்வ சக்தி கணபதி: சர்வ ரக்ஷாப்ரதம்.
14. க்ஷிப்ர ப்ரஸாத கணபதி: துரித பலன்.
15. குக்ஷி கணபதி: ரோக நிவர்த்தி.
16. ஸ்ரீ சந்தான லட்சுமி கணபதி: மக்கட்செல்வம்.
17. ஸ்ரீ ஸ்வர்ண கணபதி: ஸ்வர்ண பிராப்தி.
18. ஹேரம்ப கணபதி: மனச்சாந்தி.
19. விஜய கணபதி: வெற்றி.
20. அர்க கணபதி: தோஷ நிவர்த்தி.
21. ச்லேதார்க்க கணபதி: மாலா மந்திரம்.
22. உச்சிஷ்ட கணபதி: திரிகால தரிசனம்.
23. போக கணபதி: சகலலோக ப்ராப்தி.
24. விரிவிரி கணபதி: விசால புத்தி.
25. வீரகணபதி- தைரியம்.
26. சங்கடஹர கணபதி: சங்கட நிவர்த்தி.
27. கணேசாங்க நிவாரணி: லட்சுமி மந்திர சித்தி.
28. விக்னராஜ கணபதி: ராஜயோகம்.
29. குமார கணபதி: மாலா மந்திரம்.
30. ராஜ கணபதி: மாலா மந்திரம்.
31. ப்ரயோக கணபதி: மாலா மந்திரம்.
32. தருண கணபதி: தியானயோக ப்ராப்தி.
33. துர்கா கணபதி: துக்க நிவாரணம்.
34. யோக கணபதி: தியானம்.
35. நிருத்த கணபதி: கலா பிவிருத்தி.
36. ஆபத்சகாய கணபதி: ஆபத்துகள் நீங்குதல்.
37. புத்தி கணபதி: வித்யா ப்ராப்தி.
38. நவநீத கணபதி: மனோவசியம்.
39. மோதக கணபதி: சம்பூர்ண பலன்.
40. மேதா கணபதி: மேதா பிவிருத்தி.
41. மோஹன கணபதி: ரக்ஷாப்ரதம்.
42. குரு கணபதி: குருவருள்.
43. வாமன கணபதி: விஷ்ணு பக்தி.
44. சிவாவதார கணபதி: சிவ பக்தி.
45. துர்வாக கணபதி: தாப நிவர்த்தி.
46. ரக்த கணபதி: வசிய விருத்தி.
47. அபிஷ்டவாத கணபதி: நினைத்ததை அடைதல்.
48. ப்ரம்மண கணபதி: ப்ரம்ம ஞானம்.
50. மகா கணபதி: ப்ரணவமூலம்.
51. வித்யா கணபதி: ஸ்ரீ வித்தை.

*மகா கணபதியை வணங்கி*
*சகல சௌபாக்கியங்களையும் பெறுவோம்*



# விநாயகர் சதுர்த்தியின் சிறப்பு

### எப்படி வந்தது யானை முகம்?

விநாயகப் பெருமான் ஆவணி மாதம் சதுர்த்தி திதியன்று அவதரித்தார். இவர் யானை முகத்தை தனக்கு வைத்திருக்கிறார். அநேகமாக எல்லா தெய்வங்களுக்கும் மனித முகம் இருக்க, இவருக்கு மட்டும் ஏன் யானையின் முகம் வந்தது? எல்லாம், சிவபெருமான் நம் மீது கொண்ட கருணையால் தான். கஜமுகாசுரன் என்ற அசுரன், பிரம்மாவிடம் ஒரு வரம் பெற்றான். ஆண், பெண் சம்பந்தமில்லாமல் பிறந்த ஒருவனாலேயே தனக்கு அழிவு வரவேண்டும் என்பது அவன் கேட்ட வரம். கேட்ட வரம் கிடைத்தது. ஆண், பெண் சம்பந்தமின்றி, உலகில், குழந்தை பிறப்பு சாத்தியம் இல்லை என்பது அவன் போட்ட கணக்கு. அவன் நினைத்தபடியே அப்படி யாருமே உலகில் பிறக்கவில்லை. எனவே, அவன் சர்வலோகங்களையும் வளைத்து, தன் ஆளுகையின் கீழ் கொண்டு வந்தான்.

தேவர்களை வதைத்தான். அவர்கள், துன்பம் தாளாமல் தவித்தனர். அவர்களது துன்பம் தீர்க்க லோகமாதாவான பார்வதிதேவி முடிவு செய்தாள். தன் மேனியில் பூசியிருந்த மஞ்சளை வழித்தெடுத்து உருண்டையாக்கினாள். உறுப்புகளையும், உயிரையும் கொடுத்தாள். அந்தக் குழந்தைக்கு, பிள்ளையார் என பெயர் சூட்டினாள். அந்தப்பிள்ளை தன் அன்னையின் அந்தப்புர காவலனாக இருந்தான். சிவபெருமான் அங்கு வந்தார். அவர் மனதில் தேவர்கள் படும் துன்பத்தை நினைத்து கருணை உண்டாயிற்று. இதற்காக ஒரு திருவிளையாடல் செய்தார். என் அந்தப்புரத்தில் இருக்கும் நீ யாரடா? எனக் கேட்டு, பிள்ளையாரின் கழுத்தை வெட்டிவிட்டார். அதே நேரத்தில், வடக்கு நோக்கி ஒரு யானை படுத்திருந்தது. வடக்கு நோக்கி யார் படுத்தாலும், உலக நலனுக்கு ஆகாது என்பது சாஸ்திரம். அந்த நேரத்தில் பார்வதி வந்தாள். தன் மணாளனைக் கண்டித்தாள். பிள்ளைக்கு மீண்டும் உயிர் வேண்டும் என்றாள். சிவபெருமானும், வடக்கு நோக்கி படுத்து, உலக நலனுக்கு எதிர்விளைவைத் தந்து கொண்டிருந்த யானையின் தலையை வெட்டி, பிள்ளையாருக்கு பொருத்தி, மீண்டும் உயிர் கொடுத்தார். தாய், தந்தை கலப்பின்றி பிறந்த அந்தக் குழந்தை, கஜமுகாசுரனை வென்று தேவர்களைப் பாதுகாத்தான்.

யானைத் தலையை விநாயகருக்கு தேர்ந்தெடுத்த தன் மூலம், பல அறிவுரைகள் மனிதனுக்குத் தரப்படுகின்றன. மனிதனின் வாயும், உதடும் தெளிவாக வெளியே தெரிகிறது. மற்ற மிருகங்களுக்கும் கூட அப்படித்தான். ஆனால், யானையின் வாயை தும்பிக்கை மூடிக் கொண்டிருக்கிறது. அது வெளியே தெரியாது. தேவையின்றி பேசக்கூடாது என்பதும், தேவையற்ற பேச்சு பல பிரச்னைகளை ஏற்படுத்தும் என்பதும் இதனால் விளக்கப்படுகிறது. விநாயகருக்கு, சுமுகர் என்ற பெயருண்டு. ச என்றால் மேலான அல்லது ஆனந்தமான என்று பொருள்படும். அவர் ஆனந்தமான முகத்தை உடையவர். யானையைப் பார்த்தால் குழந்தைகள் ஆனந்தமாக இருப்பது போல, பக்தர்களுக்கும் ஆனந்தத்தை தரவேண்டும் என்பதற்காக இந்த முகத்தை சிவபெருமான் அவருக்கு அளித்தார். விநாயகர் சதுர்த்தி நன்னாளில், ஓம் கணேசாய நம என்ற மந்திரத்தை, 108 முறை சொல்லி, அருகம்புல் அணிவித்து வழிபட்டால், அவரது நல்லருளைப் பெறலாம்.

### பிள்ளையார் சுழி தேவதைகள்!

பிள்ளையார் சுழியில் உள்ள அகரத்திற்குப் பிரம்மன், உகரத்திற்குத் திருமால், மகரத்திற்கு ருத்திரன், பிந்துவிற்கு மகேசன், நாதத்திற்குச் சிவன் என்று குறிப்பிடுகின்றனர்.



எனவே, ஐந்து தெய்வ வணக்கமே பிள்ளையார் சுழி என்பர்.

### விநாயகரும், சர்ப்பமும்

விநாயகர் உதரவந்தம் பாம்பு. அணி பாம்பு, பூணூல் பாம்பு எனத் தம் உடலில் சர்ப்ப அணிகலன் கொண்டுள்ளார். பிள்ளையார்பட்டியில் லிங்கமும் பாம்பும், திருப்பரங்குன்றத்தில் கரும்பும், பவானியில் வீணையும், மானாமதுரையில் சங்கும், சங்கரன்கோவிலில் பாம்பாட்டிச் சித்தர் பீடத்தில் நாகத்தையும் கையில் கொண்டுள்ளார். தேனியில் அமிர்த கலசம் ஏந்தி காட்சியளிக்கிறார்.

### பிள்ளையார் பிரார்த்தனை பலன்கள்

மண்ணால் செய்த விநாயகரை வழிபட்டால், நற்பதவி கிடைக்கும். புற்று மண்ணில் உருவாக்கப்பட்ட விநாயகரை வணங்கினால் லாபம் கிட்டும். உப்பால் உருவான விநாயகரை வணங்கிட எதிரிகள் அழிவர். கல்லால் அமைந்த விநாயகரை வழிபட, சகல பாக்கியங்களும் பெறலாம்.

### விநாயகர் – சில தகவல்கள்

தமிழ்நாட்டில் முதன் முதலாக தங்கத் தேரில் பவனி வந்த பிள்ளையார் என்ற பெருமையைப் பெற்றவர் கோவை ஈச்சனாரிப் பிள்ளையார். இங்குள்ள தேர், ஏழரை கிலோ தங்கம், 18 கிலோ வெள்ளியால் செய்யப்பட்டது.

### இழந்த பதவிகளை மீண்டும் பெற...

சிலருக்கு தொழிலில் இழப்பு ஏற்பட்டு இருக்கலாம். சிலருக்கு பதவி இழப்பு ஏற்பட்டிருக்கலாம். சிலருக்கு சொத்து இழப்புகள் ஏற்பட்டிருக்கலாம். இவர்கள், நடனமாடும் தோற்றத்தில் இருக்கும் நர்த்தன விநாயகரை அணுகி, அவருக்கு அபிஷேகம் செய்து, இனிப்பு நைவேத்யம் செய்து, வழிபட்டு வந்தால், இழந்தவைகளை மீண்டும் பெறலாம் என்பது ஐதீகம்.

### வியப்பூட்டும் விநாயகர்! வித்தியாசமான விநாயகர்

கை - தொழில், கும்பம் ஏந்திய கை - ஆக்கும் தொழில், மோதகம் ஏந்திய கை - காக்கும் தொழில், அங்குசம் ஏந்திய கை - அழிக்கும் தொழில், பாசம் ஏந்திய கை - மறைத்தல் தொழில்.

### விநாயகருக்கு விருப்பமான நிவேதனம்

மோதகம், அப்பம், பழம், பொரி கடலை, கரும்பு, மா, பலா, வாழை, நாகப்பழம், விளாம்பழம், தேங்காய், இளநீர், அவரை, துவரை, சுண்டல், கொய்யா, புட்டு, பொங்கல், எள் உருண்டை, வடை, பாயசம், தேன், கல்கண்டு, சர்க்கரை, தினை மாவு, பாகு, அதிரசம் முதலியன.

### பன்னிரெண்டு விநாயகர்

வக்ரதுண்டர், சிந்தாமணி, கணபதி, கஜானை கணபதி, விக்ன கணபதி, மதுரேச கணபதி, துண்டு கணபதி, வல்லப கணபதி, தூப கணபதி, கணேசர், மதோத்கட கணபதி, ஹேரம்ப கணபதி. விநாயகர் என்ற சொல்லுக்கு சிறந்த தலைவர் என்று பொருள். வி - சிறந்த, நாயகர் - தலைவர். விநாயகரை உருவாக்க: கருங்கல், சலவைக்கல், பளிங்குக்கல், சுத்தி, வெள்ளை எருக்குவேர், பஞ்சலோகம், வெள்ளி, செம்பு, பொன், தந்தம், மஞ்சள், சந்தனம், சர்க்கரை, பசுஞ்சாணம், முதது, பவளம், மண், விருட்ச மரங்கள் முதலியன.

### கணபதியின் 16 வடிவங்கள்

விநாயகரை 16 வடிவங்களில் அலங்கரிக்கலாம். இந்த அமைப்பில் வணங்குவதால் மாறுபட்ட பலன்கள் நமக்கு கிடைக்கும்.

1. பாலகணபதி: மா, பலா, வாழை ஆகிய மூன்று பழங்களையும் கரும்பையும் தம் கரங்களில் ஏந்தி சூரியோதய காலத்துச் சிவப்பு வண்ண மேனியுடன் பிரகாசிக்கும் பாலகனைப் போன்ற உருவமுள்ளவர். இவரை வழிபடுவதால் தோஷங்கள் நீங்கும்.
2. தருண கணபதி: பாசம், அங்குசம், அப்பம், விளாம்பழம், நாவற்பழம், முறித்த ஒற்றை தந்தம், நெற்கதிர், கரும்பு ஆகியவற்றை தம் எட்டுக்கைகளில் ஏந்தி, சூரியோதய கால ஆகாயத்தின் செந்நிற மேனியுடைய இளைஞனாகக் காட்சி தருபவர். இவரை வழிபடுவதால் முகக்கலை உண்டாகும்.
3. பக்த கணபதி: தேங்காய், மாங்காய், வாழைப்பழம், வெல்லத்தினாலான பாயாசம் நிரம்பிய சிறுகுடம் ஆகியவற்றை தம் நான்கு கைகளில் ஏந்தி நிலா



ஒளியை ஒத்த வெண்மை நிற மேனியுடன் காட்சியளிப்பவர். இவரை வழிபடுவதால் இறை வழிபாடு உபாசனை நன்கு அமையும்.

4. **வீர கணபதி**: தனது பதினாறு கரங்களில் ஒன்றில் வேதாளத்தையும், மற்ற கரங்களில் ஆயுதங்களும் ஏந்தி, ரவுத்ராகாரமாக வீராவேசத்தில் செந்நிற மேனியுடன் விளங்கும் ரூபத்தை உடையவர். இவரை வழிபடுவதால் தைரியம், தன்னம்பிக்கை உண்டாகும்.

5. **சக்தி கணபதி**: பச்சைநிற மேனியுடைய சக்தியுடன் காட்சியளிப்பவர். பாசம், அங்குசம் ஏந்தியிருப்பவர். பயத்தை நீக்குபவர். செந்தூர வண்ணம் கொண்டவர். இவரை வழிபடுவதால் உடல் ஆரோக்கியம் ஏற்படும்.

6. **துவிஜ கணபதி**: இரண்டு யானை முகங்களுடன் இடது கையில் சுவடி, அட்சயமாலையும், தண்டமும், கமண்டலமும் ஏந்தியவர். வெண்ணிற மேனி கொண்டவர். இவரை வழிபடுவதால் கடன் தொல்லை நீங்கும்.

7. **சித்தி கணபதி**: பழுத்த மாம்பழம், பூங்கொத்து, கரும்புத்துண்டு, பாசம், அங்குசம் ஆகியவற்றைக் ஏந்தி ஆற்றலைக் குறிக்கும். சித்தி சமேதராகவும் பசும்பொன் நிறமேனியானவரான இவருக்குப் பிங்கள கணபதி என்ற பெயர் வந்தது. வழிபடுவதால் சகல காரியம் சித்தியாகும்.

8. **உச்சிஷ்ட கணபதி**: வீணை, அட்சமாலை, குவளை மலர், மாதுளம் பழம், நெற்கதிர், பாசம் ஆகியவற்றையும் ஏந்தியுள்ளார். கருநீல வண்ணமேனியுடைய இவரை வழிபடுவதால் வாழ்க்கை உயர்வு பதவிகளை பெறலாம்.

9. **விக்னராஜ கணபதி**: சங்கு, கரும்பு, வில், மலர், அம்பு, கோடாரி, பாசம், அங்குசம், சக்கரம், தந்தம், நெற்கதிர், சரம் ஆகியவற்றை தன் பன்னிரு கைகளில் ஏந்தி ஸ்வர்ண நிற மேனியுடன் பிரகாசமாக விளங்குபவர். இவரை வழிபடுவதால் விவசாயம் விருத்தியாகும்.

10. **க்ஷிப்ர கணபதி**: கற்பகக்கொடி, தந்தம், பாசம், அங்குசம் ஆகியவற்றை தன் நான்கு கரங்களிலும் ரத்தினங்களை பதித்த கும்பத்தை தனது துதிக்கையிலும் ஏந்திய செம்பருத்தி மலரைப் போன்ற சிவந்த மேனியுடைய இவர் சீக்கிரமாக அருள்புரிபவராகக் கருதப்படுகிறார். இவரை வழிபடுவதால் கல்வி விருத்தியாகும்.

11. **ஹேரம்ப கணபதி**: அபய ஹஸ்தங்களுடன் (கரங்கள்), பாசம், அங்குசம், தந்தம், அட்சமாலை, கோடாரி, இரும்பினாலான வலக்கை, மோதகம், பழம் ஆகியவற்றை ஏந்தி, பத்து கைகளும், ஐந்து முகங்களும் அமைந்து வெண்ணிற மேனியுடன் சிம்ம வாகனத்தில் அமர்ந்து இவர் காட்சி தருகிறார். நேபாள நாட்டில் காணப்படும் இவர் திசைக்கு ஒன்றாக நான்கு முகங்களும் உயரே நோக்கிய ஐந்தாவது முகத்துடனும் விளங்குகிறார். இவரை வழிபடுவதால் விளையாட்டு, வித்தைகள் இவற்றில் புகழ் பெறுவார்கள்.

12. **லட்சுமி கணபதி**: பச்சைக்கிளி, மாதுளம் பழம், பாசம், அங்குசம், கற்பகக்கொடி, கத்தி ஆகியவற்றை தன் ஆறு கைகளிலும், மாணிக்க கும்பத்தை தன் துதிக்கையிலும் ஏந்தி தன் இருபுறமும் இரு தேவிகளை அணைத்துக் கொண்டு வெள்ளைமேனியாய் அமர்ந்து அருள்புரிபவர். இவரை வழிபடுவதால் பணம், பொருள் அபிவிருத்தியாகும்.

13. **மகா கணபதி**: பிறை சூடி, மூன்று கண்களுடன் தாமரை மலர் ஏந்தி தன் சக்தி நாயகராகிய வல்லபையை அணைத்த வண்ணம் கைகளில் மாதுளம்பழம், கதை, கரும்பு, சக்கரம், பாசம், நெய்தல், புஷ்பம், நெற்கதிர், தந்தம், கரும்பு, வில், தாமரை மலர் ஆகியவற்றையும் துதிக்கையில் ரத்தின கவசத்தையும் ஏந்தி சிகப்புநிற மேனியாய் விளங்குபவர். இவரை வழிபடுவதால் தொழில் விருத்தியாகும்.

14. புவனேச கணபதி: விநாயகர் தன் தந்தத்தை முறித்து வீசியதால் அசுரனது சக்தி ஒடுங்கி சிறு மூஞ்சூறு வடிவத்துடன் ஓடினான் கஜமுகாசுரன். அவன் மீது பாய்ந்து ஏறி அவனை தன் வாகனமாக்கிக் கொண்ட இவர் செந்நிற மேனியுடன் பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் ஏந்தி கற்பக விருட்சத்தின் கீழ் காட்சி தருகிறார். இவரால் விவகாரம், வியாஜ்ஜியம் வெற்றியாகும்.



15. **நிருத்த கணபதி**: மஞ்சள் மேனியுடன் பாசம், அங்குசம், அப்பம், கோடரி, தந்தம் ஆகியவற்றை ஐந்து கைகளில் ஏந்திய மோதகம் இருக்கும் துதிக்கையை உயர்த்தி ஒற்றைக்காலில் நிருத்த கணபதியாகக் காட்சி தருகிறார். இவரை வழிபடுவதால் சங்கீதம், சாஸ்திரங்களில் சிறப்பு பெறுவார்கள்.

16. **ஊர்த்துவ கணபதி**: பொன்னிற மேனியுடைய இவர் எட்டு கைகள் கொண்டவர். தேவியை தன் இடதுபுறம் அணைத்துக் கொண்டு வீற்றிருக்கிறார். இவரை வழிபடுவதால் இல்வாழ்க்கை இன்பமாக இருக்கும்.

## பிள்ளை மனம் கொண்டவர் வெள்ளை குணம் உடையவர்

விநாயகருக்குப் பலவிதமான பெயர்கள் வழங்கப் படுகின்றன. அப்பெயர்கள் ஒவ்வொன்றுக்கும் அர்த்தம் உண்டு.

| | |
|---|---|
| கணபதி | பூதகணங்களுக்கெல்லாம் தலைவன் |
| விக்னேஸ்வரன் | தடை அனைத்தையும் போக்குபவர் |
| லம்போதரன் | தொந்தி உடையவர் |
| ஐங்கரன் | ஐந்து திருக்கரங்களைக் கொண்டவர் |
| வக்ரதுண்டன் | வளைந்த துதிக்கை பெற்றவர் |
| பிள்ளையார் | குழந்தைபோல் வெள்ளைமனம் கொண்டவர் |
| ஒற்றைக்கொம்பன் | ஒரு கொம்பு உடையவர் |
| ஹேரம்பர் | திக்கற்றவர்களுக்கு உதவுபவர் |
| விநாயகர் | மேலான தலைவர் |
| தந்திமுகன் | தந்தத்தை பெற்றவர் |

தந்தையைப் போல் பிள்ளைதாயைப் போல பிள்ளை என்பது தான் உலக வழக்கு. ஆனால், தன் தந்தை சிவபெருமானின் தோற்றத்தை விநாயகப்பெருமான் ஒத்திருப்பார். இருவரும் வேறு வேறு அல்லர். சிவபெருமானின் மற்றொரு வடிவமே விநாயகப் பெருமான் என்பர்.

1) சிவபெருமானைப் போலவே விநாயகப்பெருமான் சிவந்த மேனியை உடையவர்
2) சிவபெருமானுக்கு 5 தலைகள் இருப்பது போல ஹேரம்ப கணபதிக்கு 5 தலைகள்
3. இருவருக்கும் மூன்று கண்கள்
4. தலையில் இருவரும் மூன்றாம் பிறையணிந்திருப்பர்
5. இருவரும் பாம்பை ஆபரணமாக அணிந்திருப்பர்
6. தந்தையைப் போல இவரும் ஐந்தொழில்களைச் செய்வர்
7. இருவரும் நடனக்கோலத்தில் காட்சி தருவர் (நடராஜர், நர்த்தன கணபதி)
8. பார்வதி சிவனின் இடப்பாகத்தில் இருப்பது போல், வல்லபை விநாயகரின் இடப்பக்கம் இருப்பாள்.

## எலி மீது யானை அமர்ந்தது எப்படி?

யானை வடிவம் கொண்ட விநாயகர் எப்படி ஒரு எலியின் மீது அமர முடியும் என்ற சந்தேகம் எழுவது இயல்பே. ஒரு பெரிய உருவம் ஒரு சிறிய விலங்கின் மீது ஏறி அமர்கிறது என்று இதற்கு பொருள் கொள்ளக்கூடாது. அணுவுக்கு அணுவாகவும், பெரிதுக்கும் பெரிதானவனுமாக இறைவன் இருக்கிறான் என்பதே இதன் தத்துவம். இறைவனை நம்மால் புரிந்து கொள்ள முடியாது என்பதையும் இது உணர்த்துகிறது. பார்வையில்லாத ஐவர் ஒரு யானையைத் தொட்டுப்பார்த்தனர். ஒருவர் யானையின் வயிறைத் தொட்டு, அது சுவர் போல் இருப்பதாகச் சொன்னார். இன்னொருவர் அதன் வாலைத் தொட்டு கயிறு போல் இருக்கிறதென்றார். மற்றொருவர் காலைத் தொட்டு தூண் போல் உள்ளதென்றார். ஒருவர் துதிக்கையைத் தொட்டு உலக்கை போல் இருக்கிறதென்றார். ஒருவர் காதைத் தொட்டு முறம் போல் உள்ளதென்றார். இதில் எதுவுமே உண்மையில்லை. அதுபோல, இறைவனையும் இன்னாரென வரையறுத்துச் சொல்ல முடியாது. அவரது குணநலன்களை அறிந்து கொள்ள முடியாது. எலி மீது யானை ஏறுவதென்பது எப்படி கற்பனைக்கு கூட சாத்தியமில்லையோ, அது போல் இறைவனும் நம் கற்பனைகளையெல்லாம் கடந்தவன் என்பதே இதன் தத்துவம்.

## விக்கினங்கள் தீர்க்கும் விநாயகர் சதுர்த்தி விரதம்

விநாயக விரதங்களுள் மிக விசேஷமானது இந்த விரதம். இந்துக்கள் யாவரும் விரும்பி அநுஷ்டிக்கும் விரதம். விநாயகர் ஆலயங்களில் சிறப்பாகவும், ஏனைய



ஆலயங்களில் பொதுவாகவும் இவ் விரதநாளிலே விசேஷ அபிஷேகம் பூஜை வழிபாடுகள் நிகழ்கின்றன. எனினும் இவ்விரதத்தினைப் பூஜை வழிபாடுகளுடன் இல்லங்களிலும் கைக்கொள்வது நன்று.

### விநாயகப்பெருமான் உற்பவமான தினம் இது என்பர்.

ஆவணிமாத வளர்பிறைச் சதுர்த்தித் திதியன்று இவ்விரதம் அநுஷ்டிக்கப்பட வேண்டும். மதியவேளை யில் சதுர்த்தி நிற்றல் அவசியம்.

கந்தபுராணத்தில் சிறப்பித்துக் கூறப்படும் இந்த விரதமானது சூதமுனிவரால் பஞ்சபாண்டவருக்கு உபதேசிக்கப்பட்ட பெருமையை உடையது. துரியோதனனாதி கௌரவர்களின் கொடுமையினால் பாண்டவர்கள் வனவாசம் செய்ய நேர்கிறது. காட்டிலே மிகுந்த கஷ்டமும் மனவேதனையும் அடைந்திருக்கும் நிலையில் சூதமுனிவரை ஒருநாள் சந்திக்கின்றார்கள்.

அப்போது தருமர் தமது கஷ்டங்கள் நீங்கிச் சுகமாக வாழ வழிகேட்கிறார். அதற்கு வழியாக இந்த விநாயக சதுர்த்தி விரதத்தை உபதேசிக்கிறார் சூதமுனிவர். அது மட்டுமல்லாமல் இந்த விரதத்தை முன்பு அநுஷ்டித்துப் பயன்பெற்றவர்களின் வரலாற்றையும் எடுத்துக் கூறுகிறார்.

தமயந்தி நளனை மீண்டும் அடைந்ததும், கிருஷ்ணர் ஜாம்பவதியையும், சியமந்தகமணியைப் பெற்றுக் கொண்டதும், இராமன் சீதையை மீட்டதும், இந்திரன் அசுரப்பகையை வென்றதும், பகீரதன் கங்கையைப் பூமிக்குக் கொண்டுவந்ததும் இந்த விரத மகிமையினால் தான் என்று விளக்கினார்.

இதனைக்கேட்ட பாண்டவரும் முறைப்படி விநாயக விரதத்தைக் காட்டிலேயே அநுஷ்டித்து உரிய காலத்தில் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றனர். இஷ்ட சித்திகளைப் பெற, நினைத்த காரியசித்தியைப் பெற விரும்புவோர் இவ்விரதத்தைக் கைக்கொள்ளலாம்.

அதிகாலை துயிலெழுந்து நீராடி நித்திய கர்மாநுஷ்டானங்களை முடித்துக் கொண்டு பிரார்த்தனை வழிபாடுகள், ஆலய தரிசனம் முதலியவற்றில் ஈடுபடவேண்டும். மத்தியானம் ஒரு பொழுது உண்ணலாம். நல்லெண்ணெய் சேர்க்கக்கூடாது என்பது விதி. இரவு பட்டினி இருக்க முடியாதவர்கள் பால்பழம் அல்லது பலகாரம் உண்ணலாம்.

வீட்டிலே பூஜை வழிபாடுகளுடன் விரிவாக இந்த விரதமிருக்க விரும்புவோர் வீட்டிற்கு ஈசான திக்கில் பசும்சாணியால் மெழுகித் தூய்மையாக்கப்பட்டு வெள்ளை கட்டித் தயார் செய்யப்பட்ட ஓரிடத்தில் அல்லது பூஜை அறையிலே மாவிலை தோரணங்களாலும் சிறிய வாழைமரம் முதலியவற்றாலும் அலங்கரித்து அங்கு ஐந்து கும்பங்களை முறைப்படி ஸ்தாபித்து சித்த கணபதி, வித்தியா கணபதி, மோஷ கணபதி, மஹா கணபதி ஆகிய மூர்த்திகளைப் பிரதிஷ்டை செய்து பூஜைகளை நடத்தலாம்.

நாயகர் சதுர்த்தியன்று விநாயகர் அகவல், விநாயகர் கவசம், காரிய சித்திமாலை பாடல்களைப் பாடி அவரை வழிபடலாம். இதில் எடுத்த செயல் வெற்றி பெறச் செய்யும் தனிச்சிறப்புடைய காரிய சித்திமாலையின் விளக்கம் தரப்பட்டுள்ளது. கேட்ட வரம் தரும் தனிச்சிறப்புடைய இத்துதியை விநாயகர் முன்பு அமர்ந்து உள்ளம் ஒன்றிப் பாராயணம் செய்பவர்களின் மன விருப்பம் எளிதில் நிறைவேறும். சிறப்பு மிக்க இத்துதியை மூன்று வேளைகளிலும் (காலை, மதியம், மாலை) உரைப்பவர்கள் நினைத்த காரியங்கள் கைகூடும். அனைத்து வகைகளிலும் வெற்றி உண்டாகும். எட்டு நாட்கள் ஓதிவர மனதில் மகிழ்ச்சி உண்டாகும். சங்கடஹர சதுர்த்தி திதிகளில் (தேய்பிறை சதுர்த்தி) எட்டுமுறை ஓதினால் அஷ்டமாசித்தி கைகூடும். தினமும் 21 முறை இப்பாடலைப் பாராயணம் செய்வோரின் சந்ததி கல்வி யிலும், செல்வத்திலும் மேம்பட்டுத் திகழும் என்பது ஐதீகம்.

விசேஷ நிவேதனங்களாக அறுசுவை உணவும், தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம் என்பனவும் சொல்லப்பட்டிருக்கின்றன. நாவற்பழம், விளாம்பழம், வாழைப்பழம், கரும்புத்துண்டு, வெள்ளரிப்பழம், அப்பம், மோதகம், கொழுக்கட்டை ஒவ்வொன்றிலும் இருபத் தொன்று என்ற எண்ணிக்கையில் படைத்து நிவேதனம் செய்ய வேண்டும். (வெள்ளரிப்பழத்தை இருபத்தொரு துண்டுகளாக நறுக்கி வைக்கலாம்)

தத்தமக்குரிய புரோகிதரை அல்லது அருகிலுள்ள ஆலய அர்ச்சகரை அழைத்து இந்தப் பூஜையைச் செய்விக்கலாம். சங்கல்பத்துடன் ஆரம்பித்து பிராமண அநுக்ஜை, விக்னேஸ்வர பூஜை, புண்யாக வாசனம், பஞ்சகவ்யபூஜை முதலிய பூர்வாங்கக் கிரியைகளிலிருந்து ஆவாஹனாதி சர்வோபசார பூஜைகளையும் செய்து தீபாராதனை நமஸ்காரங்களுடன் நிறைவு செய்யலாம். *

# எட்டின் மகிமை தெரியுமா?

**ம**னிதப் பிறப்பில் எட்டாவது மாதம் ஒரு திருப்புமுனை. தாயின் கருப்பையில் இருக்கும் குழந்தை அப்போதுதான் முழு வளர்ச்சியைப் பெறுகிறதாம். கருப்பையில் இடம்போதாமல் நெருக்கத்தில் சிக்கி, இருக்கும் இடத்துக்கு ஏற்ப தன்னுடைய கை-கால்களை மடக்கிக்கொண்டு, உடல் உறுப்புகளைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முதல் அறிவை அப்போதுதான் அந்தக் குழந்தை பெறுகிறது. முற்பிறவியில் செய்த தீவினையால்தானே, ஒரு தாயின் கருப்பைக்கு வந்தோம். இந்தப் பிறவியில் தவறு ஏதும் செய்யக் கூடாது எனும் சிந்தனை ஞானம் ஏற்பவதும் 8-வது மாதத்தில்தான் என்கிறது கீதை. ஆனால் பிறந்ததும் அந்த ஞானத்தை மனிதன் மறந்து போகிறான். மீண்டும் அந்த ஞானம் அவனுக்கு 80 வயதில் நிச்சயம் தோன்றுமாம். இதனாலேயே 8 எனும் எண்ணை ஞான எண்ணாகக் கூறுவார்கள். மாணிக்கவாசகர் அருளிய திருவாசகமும், எட்டு திங்களில் கட்டமும் பிழைத்தும்... என்று கருப்பையில் உள்ள 8 மாத சிசுவின் வடிவை, மிக அற்புதமாக விவரிக்கிறது. அதுசரி... மாணிக்கவாசகர் சொல்லச் சொல்ல, அந்த நடராஜ பெருமானே தன் கைப்பட எழுதிய பெருமை மிக்க நூலான திருவாசகம், பன்னிரு திருமுறைகளில் எந்தத் திருமுறையில் வைக்கப்பட்டுள்ளது தெரியுமா? 8 – வது திருமுறையாகத்தான் !

**அஷ்ட கணபதிகள்:** முழுமுதற் கடவுளாம் கணபதியை அஷ்டகணபதிகளாகவும் கொண்டாடுவர். ஆதி கணபதி, மகாகணபதி, நடன கணபதி, சக்தி கணபதி, வாலை கணபதி, உச்சிஷ்ட கணபதி, உக்ர கணபதி, மூல கணபதி ஆகிய அஷ்ட பிள்ளையார்களை வழிபட வினைகள் யாவும் நீங்கும் !

**அஷ்ட புஷ்பங்கள்:** புன்னை, செண்பகம், பாதிரி, வெள்ளெருக்கு, நந்தியாவர்தம், அரளி, நீலோத்பலம், தாமரை ஆகிய மலர்களை தெய்வ பூஜைக்கு சிறந்த அஷ்ட புஷ்பங்களாகப் போற்றுகின்றன ஞானநூல்கள் !

**திசை யானைகள் எட்டு:** ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சார்வபௌமம், சுப்பிரதீகம் ஆகியவையே திசை யானைகள் 8 எனப் போற்றுகின்றன புராணங்கள் !

**அஷ்ட ஐஸ்வரியங்கள்:** தனம், தானியம், நிதி, பசு, புத்திரர், வாகனம், சத்தம், தைரியம் ஆகியன அஷ்ட ஐஸ்வரியங்களாகும். இறைசிந்தையும், அறவாழ்வும் இந்தச் செல்வங்களைப் பெற்றுத் தரும்.

**அருள் தரும் அஷ்ட பிரபந்தங்கள்:** மாலவனின் பெருமைகளை விவரிக்கும் நூல்களில் எட்டு குறிப்பிடத்தக்கவை. அவை: திருவரங்கக் கலம்பகம், திருவரங்கத்துமாலை, திருவரங்கத்து அந்தாதி, ஸ்ரீரங்கநாயகர் ஊசல், திருவேங்கடமாலை, திருவேங்கடத்து அந்தாதி, அழகர் அந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி !

**அஷ்ட பந்தனம்:** சுக்கான்கல், கொம்பரக்கு, சாதிலிங்கம், செம்பஞ்சு, தேன் மெழுகு, எருமை வெண்ணெய், குங்கிலியம், நற்காவி.... ஆகிய எட்டு பொருட்களுமே, ஆலயங்களில் விக்கிரக பிரதிஷ்டையில் பயன்படும் அஷ்ட பந்தனமாகும்.

**அட்டமா ஸித்திகள்:** தவமுனிகள் செய்யும் யோக முறையால் எட்டுவிதமான ஸித்திகளை அடையலாம். அற்புதமான அந்த ஸித்திகள்: அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராத்தி, பிராகாமியம், ரூடவ்சத்துவம், வசித்துவம் !

**அஷ்ட வசுக்கள்:** அனலன், அணிலன், ஆபத்சைவன், சோமன், தரன், துருவன், பிரத்தியூஷன், பிரபாசன் ஆகியோரே அஷ்ட வசுக்கள் ! இவர்களில் பிரபாசன் என்பவனே, வசிஷ்ட முனிவரின் சாபத்தால் பூமியில் பிறந்து, பீஷ்மராகத் திகழ்ந்தான் !

**அஷ்ட வித்யேச்வரர்:** அநந்தர், சூக்ஷ்மர், சிவோத்தமர், ஏகநேத்ரர், ஏகருத்ரர், திரிமூர்த்தி, ஸ்ரீகண்டர், சிகண்டி ஆகியோரை அஷ்ட வித்யேச்வரர் எனப் போற்றுவர். இவர்கள் மாயைக்கு மேல் சுத்த வித்யைக்குக் கீழிருக்கும் புவனவாசிகள் என்கின்றன ஞானநூல்கள்.

**எட்டெட்டந்தாதி:** காஞ்சி ஸ்ரீகாமாட்சி அம்மனின் மீதான ஒரு பாடல் இது. எட்டெட்டு பாடலாக 64 செய்யுள்கள் அடங்கிய அந்தாதியாக திகழ்கிறது என்பார்கள். ஆனாலும், விநாயகர் வழிபாடாக முதலில் ஒரு பாடலும், செய்யுள் பலனாக கடைசியில் ஒரு பாடலும் அதிகம் உண்டு.

# KUMBABISHEKAM FUND 2013

| Date | Name | Amount | Date | Name | Amount |
|---|---|---|---|---|---|
| 04.02.2013 | Mr Kanthasamy | 65.00 | 14.04.2013 | Mr Thirumaran | 20.00 |
| 06.02.2013 | Dr Pankayatchelvan | 3,000.00 | 14.04.2013 | Mr Anand | 20.00 |
| 07.02.2013 | Mr Sriskantha Rajah | 100.00 | 14.04.2013 | Mr Chinnathambi | 31.00 |
| 07.02.2013 | Mrs Janushka | 50.00 | 14.04.2013 | Undiyal Collection (£324) | 24.00 |
| 09.02.2013 | Mr Ashok Shah Family | 2,200.00 | 14.04.2013 | Mr Janaki Ande | 40.00 |
| 12.02.2013 | Mr Jeyabalasingam | 100.00 | 14.04.2013 | Lucky Food and Wine | 102.00 |
| 12.02.2013 | Dr Sivathasan | 250.00 | 14.04.2013 | Mr Bakthy | 100.00 |
| 13.02.2013 | Mr S Siva | 100.00 | 14.04.2013 | Mr Ganagasaby | 50.00 |
| 13.02.2013 | Mr Thiyagarajah | 251.00 | 18.04.2013 | Mr ILanko | 100.00 |
| 14.02.2013 | Mr Sriskantha Rajah | 200.00 | 19.04.2013 | Mr Shanmugathasan | 100.00 |
| 15.02.2013 | Mr Muruganantham | 500.00 | 19.04.2013 | Mr Vishwanathan | 101.00 |
| 16.02.2013 | Mr Vytheeswaran | 50.00 | 19.04.2013 | Mr Uthayakumar | 101.00 |
| 16.02.2013 | Mr Anilpillai | 520.00 | 19.04.2013 | Mr Srikumar | 50.00 |
| 19.02.2013 | Mr Jeganathan | 200.00 | 19.04.2013 | Mrs Sasitha | 250.00 |
| 19.02.2013 | Mr Thayakaran | 500.00 | 20.04.2013 | Mr Sooriyakumar | 250.00 |
| 20.02.2013 | Mr Ashok | 25.00 | 20.04.2013 | Mr Thatparan | 200.00 |
| 22.02.2013 | Mr Gobalamoorthy | 100.00 | 20.04.2013 | Mr Kugan | 50.00 |
| 23.02.2013 | Mr Selvam | 100.00 | 20.04.2013 | Mr Sivakumar | 500.00 |
| 28.02.2013 | Mr Vasan | 50.00 | 20.04.2013 | Mr Rasan | 50.00 |
| 01.03.2013 | Mr S Piraba | 100.00 | 20.04.2013 | Mr Kanagasundaram | 250.00 |
| 04.03.2013 | Mr Saravanabavan | 300.00 | 21.04.2013 | Mrs Pradeep Elakkiya | 100.00 |
| 06.03.2013 | Dr Himayakanthan | 4,200.00 | 21.04.2013 | Mr Neroshan S | 50.00 |
| 06.03.2013 | Mr Sanjeevarajan | 100.00 | 21.04.2013 | Mr Akilendran | 65.00 |
| 07.03.2013 | Dr Dineshnair | 100.00 | 23.04.2013 | Mr Vasantha Boyle | 100.00 |
| 07.03.2013 | Dr Sureshnair | 100.00 | 23.04.2013 | Mr Naveen Hebbur | 100.00 |
| 07.03.2013 | Mr S Somanathannair | 100.00 | 23.04.2013 | Mr Balarathnam | 500.00 |
| 07.03.2013 | Mr Mukunthan | 500.00 | 24.04.2013 | Mr Uma Shankar D | 101.00 |
| 07.03.2013 | Mr Kanthasamy | 30.00 | 26.04.2013 | Mr Shanmugalingham | 501.00 |
| 09.03.2013 | Mr Sukunakumar | 1,001.00 | 26.04.2013 | Mr Uma Suthan | 40.00 |
| 09.03.2013 | Mr Sreetharan | 101.00 | 26.04.2013 | Mr Jennakan | 100.00 |
| 10.03.2013 | Ms Rekha Dave | 1,501.00 | 27.04.2013 | Dr Mahendrakumar | 2,000.00 |
| 10.03.2013 | Dr Jeyaramdas | 500.00 | 27.04.2013 | Mr K Manoharan | 100.00 |
| 15.03.2013 | Mr Sriskantha Raja | 100.00 | 27.04.2013 | Mr A Balendran | 50.00 |
| 15.03.2013 | Ganesha Moorthy | 75.00 | 28.04.2013 | Mrs Mankayatkarasi | 20.00 |
| 15.03.2013 | Mr Muruganantham | 500.00 | 28.04.2013 | Mr Mathur | 311.00 |
| 15.03.2013 | Viaduct Stores | 500.00 | 28.04.2013 | Mr Tharmapalan | 500.00 |
| 15.03.2013 | Mr Siva | 200.00 | 28.04.2013 | Mr A Sakathevan | 2,000.00 |
| 18.03.2013 | Mrs Nayyar | 1,100.00 | 30.04.2013 | Mr Mukunthan | 200.00 |
| 20.03.2013 | Mr Ganesh Devoty | 30.00 | 30.04.2013 | Mr Muruganantham | 2,000.00 |
| 21.03.2013 | Mr Ganesha Moorthy | 100.00 | 01.05.2013 | Mr Rajivan | 100.00 |
| 21.03.2013 | Mr S Balachandran | 1,000.00 | 01.05.2013 | Mr Patel | 101.00 |
| 21.03.2013 | Mr Mathitharan | 500.00 | 01.05.2013 | Mr Premathas | 100.00 |
| 22.03.2013 | Mr Thayananthan | 101.00 | 02.05.2013 | Mr Yoga | 100.00 |
| 24.03.2013 | Mr Binu & Radhika | 501.00 | 03.05.2013 | Mrs Pallavi Patel | 101.00 |
| 25.03.2013 | Mr Appan 451-454 | 400.00 | 03.05.2013 | Mr Sriskantharaja | 200.00 |
| 27.03.2013 | Mr Kavin Siva | 100.00 | 03.05.2013 | Mrs R Kalyani | 100.00 |
| 28.03.2013 | Ms T C Perumal | 500.00 | 04.05.2013 | Mr Chandramohan | 150.00 |
| 29.03.2013 | Mr Suresh Chellappan | 51.00 | 04.05.2013 | Mr Selvam | 200.00 |
| 30.03.2013 | Mr Kanthasamy | 1,000.00 | 04.05.2013 | Mr Sasikumaran | 100.00 |
| 30.03.2013 | Mrs R Tharmakula Singam | 200.00 | 04.05.2013 | Mr Ganesh Devotees | 25.00 |
| 31.03.2013 | Mr Sajithvarma | 111.00 | 04.05.2013 | Mr Nadarajah | 200.00 |
| 01.04.2013 | Ms Santhalingam | 500.00 | 04.05.2013 | Mrs Reka Dave | 1,500.00 |
| 02.04.2013 | Mr Subotharan | 300.00 | 06.05.2013 | Mrs Vasantha | 51.00 |
| 04.04.2013 | Mr Ganesha Moorthy | 900.00 | 06.05.2013 | Mr Saravanabavan | 200.00 |
| 05.04.2013 | Mr Vijay Verma | 200.00 | 07.05.2013 | Mr Rajeev Kumar | 251.00 |
| 09.04.2013 | Mr Umamageswaran | 100.00 | 07.05.2013 | Mr J Patel | 51.00 |
| 13.04.2013 | Mr Santhirakasan | 700.00 | 07.05.2013 | Mr G Manivannan | 100.00 |
| 14.04.2013 | Maruthuneer (Sale) | 202.00 | 08.05.2013 | Mr Manuventhan | 100.00 |

| Date | Name | Amount |
|---|---|---|
| 09.05.2013 | Mr Laxman | 50.00 |
| 09.05.2013 | Ms Sudarshini | 40.00 |
| 10.05.2013 | Dr Pankayatchelvan | 500.00 |
| 11.05.2013 | Mr N.T. Pillai | 250.00 |
| 11.05.2013 | Mr Nagaruban | 500.00 |
| 12.05.2013 | Mr Vinu & Suja | 101.00 |
| 12.05.2013 | Mr Kanthasamy | 1,000.00 |
| 12.05.2013 | Mr Markandu | 100.00 |
| 13.05.2013 | Mr Vasanthakumar | 25.00 |
| 13.05.2013 | Mr Senthoorselvan | 200.00 |
| 13.05.2013 | Mr Balakrishnan | 100.00 |
| 14.05.2013 | Mr Kowsalyan | 100.00 |
| 14.05.2013 | Mr Sivarajah | 50.00 |
| 15.05.2013 | Mr Kanthasamy | 500.00 |
| 15.05.2013 | Mr Jayabal | 51.00 |
| 15.05.2013 | Mr Kankuli | 20.00 |
| 15.05.2013 | Mr Arunakirinathan | 150.00 |
| 17.05.2013 | Mr B Sivayohan | 500.00 |
| 17.05.2013 | Mr Sivakumaran | 500.00 |
| 19.05.2013 | Mr Shandiralingam | 100.00 |
| 21.05.2013 | Mr V.M Bhatt | 250.00 |
| 21.05.2013 | Mr Y. Yogarajah | 500.00 |
| 21.05.2013 | DIYNA Food& Wine | 200.00 |
| 21.05.2013 | Mr Akilendran | 50.00 |
| 22.05.2013 | Ganesh Devotee | 50.00 |
| 22.05.2013 | Mr Balaratnam | 500.00 |
| 24.05.2013 | Mr Arulrajah | 500.00 |
| 24.05.2013 | Mr Kajan | 100.00 |
| 25.05.2013 | Mr Suresh | 25.00 |
| 25.05.2013 | Rajeswari Amma | 500.00 |
| 25.05.2013 | Mr Karunanithy | 250.00 |
| 26.05.2013 | Mr Thayakaran | 500.00 |
| 27.05.2013 | Mr S.Sekar | 20.00 |
| 27.05.2013 | Mrs S.Yogarajah | 1,500.00 |
| 27.05.2013 | Mr Anand Khamam | 25.00 |
| 28.05.2013 | Ganesh Devotee | 50.00 |
| 28.05.2013 | Mr Dev Chattiraa | 15.00 |

| | |
|---|---|
| **Total Project cost** | **£101,000** |
| **Additional Cost** | **£12,500** |
| **TOTAL COST** | **£113,500** |
| **Less: Collected to date** | **£62,952.00** |
| **Needed Urgently** | **£50,548.00** |

| Date | Name | Amount |
|---|---|---|
| 28.05.2013 | Mr Pravin Ray | 101.00 |
| 28.05.2013 | Mr N.Awasthi | 100.00 |
| 28.05.2013 | Mr Malhiyalaki | 20.00 |
| 29.05.2013 | London Flooring | 500.00 |
| 29.05.2013 | Jeyakanthan Family | 250.00 |
| 30.05.2013 | Mr K.Jeganathan | 1,000.00 |
| 30.05.2013 | Mr Brockley Food & Wine | 500.00 |
| 31.05.2013 | PILTOWN SERVICE STN | 201.00 |
| 31.05.2013 | Mr Tharmalingam | 150.00 |
| 31.05.2013 | Mr Vishen COOPAMAH | 100.00 |
| 01.06.2013 | Mr Nadarajah | 100.00 |
| 01.06.2013 | Mr Auran | 50.00 |
| 01.06.2013 | Mr Gopakumar Nair | 50.00 |
| 02.06.2013 | Mr Subashharan Family | 20.00 |
| 02.06.2013 | Mr Jayesh.S | 30.00 |
| 02.06.2013 | Mr V.Shenuy | 501.00 |
| 02.06.2013 | Mr Binu and Radhika (501) | 250.00 |
| 02.06.2013 | Mr Kuptha | 2,000.00 |
| 03.06.2013 | Mr T Karunanithi | 250.00 |
| 04.06.2013 | Mr Sivakumaran | 100.00 |
| 04.06.2013 | Mr R. Thavarajah | 70.00 |
| 04.06.2013 | Mr Selvaratnam | 150.00 |
| 04.06.2013 | Mrs Jeyavathany | 500.00 |
| 04.06.2013 | Mr B. Nishanthan | 50.00 |
| 6/6/2013 | Mr Uthayakumar | 200.00 |
| 6/7/2013 | Chicken World | 100.00 |
| 6/7/2013 | Mr K Packriy | 1,000.00 |
| 6/7/2013 | Mr Tharmapalan | 500.00 |
| 6/8/2013 | Yoham Aunty | 100.00 |
| 6/8/2013 | Abi Textiles | 150.00 |
| 6/9/2013 | Mr Gobinath | 501.00 |
| 6/9/2013 | Mr Aleat | 100.00 |
| 6/9/2013 | Mr Vijayakumaran | 500.00 |
| 6/9/2013 | Mr Bhaskar.Jana | 101.00 |
| 6/9/2013 | Rameseshut.L | 108.00 |
| 6/10/2013 | Mr S.Sivarajah | 250.00 |
| 6/13/2013 | Miss Asha Purohit | 505.00 |
| **GRAND TOTAL** | | **£62,952.00** |

அச்சுக்கு போகுமுன் இதுவரை கிடைக்கப்பெற்ற பெயருடன் கூடிய நிதிகள்

குறிப்பு: பெயர் எழுத்துப்பிழை இருப்பின் மன்னிக்க வேண்டுகிறோம்.

# லட்சதீபம்



**தீபம் ஏற்றி வழிபாடு செய்வது சைவ மக்களின் மரபு. லண்டனின் லட்சதீபம் ஏற்றி வழிபாடு செய்வதற்கு சக்தி கணபதி கோயிலில் சென்ற வருடம் முழுவதும் வசதி செய்து கொடுக்கப்பட்டது. அந்த வகையில் இதுவரையில் 10,940 தீபங்கள் ஏற்றப்பட்டுள்ளது. லட்சதீபம் ஏற்ற பக்தர்களின் அனுசரணை வேண்டும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.**



# நந்திக்கொடி : விளக்கம்

விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா

*அப்பனை நந்தியை ஆரா அமுதினை*
*ஒப்பில் வள்ளலை ஊழி முதல்வனை*
*எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்*
*அப்பரிசு ஈசன் அருள் பெறலாமே.*

இது திருமந்திரம்.

கோபுர தரிசனம் கோடி புண்ணியம். கோபுர தரிசனம் பாவ விமோசனம். அவ்வாறே சிவாலய கோபுரங்களில் கம்பீரமாகப் பறந்து கொண்டுள்ள நந்திக் கொடிகளைத் தரிசித்த மாத்திரத்தில், வழிபட்ட மாத்திரத்தில் அடியார்களுக்கு கோடி புண்ணியம் கிட்டும். பாவ விமோசனம் கிடைக்கும் என்பதை இத் திருமந்திரப் பாவில் இருந்து அறிகிறோம்.

*''எப்பரி சாயினும் ஏத்துமின், ஏத்தினால்*
*அப்பரிசு ஈசன் அருள் பெறலாமே''*

என்ற திருமந்திரப் பாடல் அடி இவ்வுண்மையை உணர்த்தும்.

திருமுறைகளைப் படிக்கும் போது அறக் கடவுளும் திருமாலுமே விடை வடிவம் ஏற்று இறைவனைத் தாங்கி நிற்கும் உண்மையை உணர்கிறோம். நந்திக் கொடியை இதன் காரணமாக சைவ மக்கள் மட்டுமின்றி இந்து மக்களின் கொடியாகக் காண்கிறோம்.

நாயன்மார்களுக்கு சிவனார் நந்திக் கொடியுடன் தரிசனம் தந்திருக்கிறார். ''சிவனே நின் கொடியில் விடையினைக் காண்கிறேன்'' என்பார் சம்பந்தர். இதோ அப்பாடலடி

***''மாறு கொண்டார் புரமெரித்த மன்னவனே***
***கொடிமேல் ஏறு கொண்டாய்''***

இன்னும் ''நரை விடை நற்கொடியுடை நாதன்'' என்று சிவனை விளிக்கிறார் அப்பர். ''ஏறு விடைக் கொடி எம்பெருமான்'' எனப் பாடுகிறார் சுந்தரர். இனி மாணிக்க வாசகப் பெருமான் பாடுகின்ற பாடலைப் பாருங்கள்.

***''ஏற்றுயர் கொடியுடையய் எனையுடையாய்***
***எம்பெருமான் பள்ளியெழுந்து அருளாயே''***

இத்தகைய நந்திக் கொடியை இன்று சைவப் பெருமக்கள் மட்டுமின்றி இந்துக்களும் ஆலயங்களி லும், விழாக்களிலும் ஏற்றிப் போற்றுகின்றனர். இது இந்துக் கலாச்சார வைபவங்களிலும் ஏற்றப்படுகிறது.

நந்திக்கொடி தமிழர் தம் சமயத்தை மட்டும் அன்றி அவர் தம் பண்பாடு கலாச்சார பாரம்பரியத்தைப் பறைசாற்றி நிற்கிறது. எமது மக்களின் விழுமியங் களைப் பிரதிபலிக்கிறது,

தாய்க்கும் சேய்க்கும் இடையே உள்ள உறவினைக் குறிக்கும் தொப்புள் கொடி போன்று சைவமக்கள் இந்துக்கள் யாவருக்கும் பொதுவான ஒரு கொடியாக இன்று நந்திக் கொடி விளங்குகிறது. இது நமது மக்களின் ஒருமைப்பாட்டினைக் குறிக்கும் கொடியாக இன்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இம்மரபு தமிழர் வரலாற்றில் மிகவும் பழைய காலந்தொட்டு நிலவி வருகிறது. புறநானூற்றுப் பாடல் ஒன்றில் இவ்வாறு சிவனது கொடி நந்தி என்ற கருத்து காணப்படுகிறது. சங்க காலத்தில் கூட நந்தி சிவனாரின் கொடியெனப் போற்றப்பட்டு உள்ளது.

சைவப் பெருமக்களின் வீட்டுவாயிலில் நந்திக்கொடி பறக்க வேண்டும். அவர் தம் திருமண வைபவங்களில், பொது விழாக்களில் நந்திக் கொடி பறக்க வேண்டும். விழாக்கள் தொடங்கும் போது நந்திக் கொடி ஏற்றப்பட வேண்டும். சைவப் பெருமக்களின் ஊர்திகளில் நந்திக் கொடி பறக்க வேண்டும்.

நந்திக் கொடி நமக்குப் பல்வேறு விழுமியங்களை எடுத்துக் கூறுகிறது. இந்துக்கள் வாழ்க்கையை எப்படி நோக்குகின்றனர் என்பதை எடுத்துக் கூறுவது நந்திக் கொடி, மக்கள் சேவையை நினைவூட்டுவது நந்திக் கொடி, தியாகத்தை வலியுறுத்துவது நந்திக்கொடி.

எல்லாவற்றுக்கும் மேலாக நமது உள்ளங்களிலே தெய்வீக அலைகளை உருவாக்க வல்லது நந்திக் கொடி. நல்ல சிந்தனைகளை மட்டுமின்றி ஆன்மீக எழுச்சியினையும் ஊட்டவல்லது நந்திக்கொடி.

உண்மையிலேயே, மிக உயர்ந்த நிலையில் நோக்கும் போது, திருவருள் நமக்குக் கைகூடுவதற்காக ஏற்றப்படுவது நந்திக் கொடி. இதை விளக்கும் பாடல் ஒன்றினைப் பார்ப்போம். தில்லை நகரில் ஆதிரைத் திருவிழாவில் கொடி ஏற்றத்தின் போது உமாபதி சிவம் அவர்கள் பாடிய கொடிப்பாட்டு இதோ:

*அஞ்செழுத்து மெட்டெழுத்து மாறெழுத்தும் நாலெழுத்தும்*

*பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் - நெஞ்சழுத்திப்*

*பேசு மெழுத்துடனே பேசா வெழுத்தினையும்*

*கூசாமற் காட்டக் கொடி.*

*- கொடிக்கவி.*



**Muthukumarasamy Markandayar**

Voluntary Administrator

Feb 2005 - Sept 2009

இலங்கை பருத்திதுறையை பிறப்பிடமாகவும், Hartley College-இல் உயர்கல்வி பயின்று, இலங்கை நீர்பாசன இலாகாவில் (Irrigation Dept) பொறியியலாளர் (Engineer) ஆக கடமை ஆற்றி 1985ஆம் ஆண்டு இளைப்பாறியவர்.

இலண்டன் குறோய்டனில் வசித்தபோது Feb-2005 முதல் Sept-2009 வரை நிர்வாக பொறுப்பாளராக சக்தி கணபதி ஆலயத்தில் கடமையாற்றினார். எல்லோராலும் 'Uncle' என்று அன்புடன் அழைக்கப்பட்டவரையும் இந்நாளில் நினைவு கூறுவோம்.

# ஆலய மூர்த்திகள்








# திருவிழா காட்சிகளும் சிறப்பு நிகழ்வுகளும்











குறோய்டன் ஸ்ரீ சக்தி கணபதி
ஆலயத்தில் மயில்.
சூரசம்காரத்தில் சேவலும் மயிலும்
பறந்த அற்புத காட்சி. 1000 செலவு
செய்து திருச்செந்தூர் சென்றாலும்
இக் கண்கொள்ளா காட்சியை காண
ஆயிரம் கண்கள் வேண்டும்









திருவிழா காட்சிகளும்
சிறப்பு நிகழ்வுகளும்

# திருவிழா காட்சிகளும்
# சிறப்பு நிகழ்வுகளும்





























## ஆலய மூர்த்திகள்








முருகன் வள்ளி
திருமணம்





குறோய்டன்
ஶ்ரீ சக்தி கணபதி
ஆலயத்தில்
பொங்கல் விழா








நவராத்திரி பூஜை
கலை நிகழ்ச்சிகள்



## ஆலய புனருத்தாரணப் பணிகளும் நிலம் கீழ் வெப்பமேற்றியும்














எமது ஆலயத்தினால் தாயக உறவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அன்பளிப்பும் பாடப்புத்தகங்களும்

ஆலயப் படத்தொகுப்பு : அசோகன்

# ஈழ நாடும் விநாயகர் வழிபாடும்

ஆறு. திருமுருகன்

சிவபூமி எனத் திருமூலர் சுவாமியால் போற்றப்பட்ட ஈழநாட்டின் இருதயமாக விளங்குவது யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்தில் பலநூறு வருடப் பழமை வாய்ந்த வழிபாடாக விநாயகர் வழிபாடு நிலவி வருகின்றது. விநாயகருக்குத் தனிக்கோயிலும் மற்ற தலங்களில் விநாயகருக்குப் பரிவாரக் கோயிலும், ஸ்தம்ப மண்டபத்தில் விநாயகரை வரவேற்புத் தெய்வமாக இருத்துகின்ற பாரம்பரியமும் யாழ்ப்பாணத்தின் தொன்மையானப் பண்பாடாக விளங்கிவருகின்றது. எச்சுபகாரியங்களிலும் பசுவின் சாணியில், மஞ்சளில் பிள்ளையார் பிடித்து வைத்து கருத்திற் கொள்வதும், மார்கழி மாதத்தில் இல்லங்கள் தோறும் கோலமிட்டு விநாயகரை முப்பத்தொரு நாட்கள் பிடித்து வைக்கும் வழக்கமும் யாழ்ப்பாண மக்களின் பாரம்பரிய விநாயகர் வழிபாட்டு அம்சமாக விளங்குவது குறிப்பிடத் தக்கது.

போர்த்துக்கேயர் இலங்கையை கைப்பற்றுவதற்கு முன்பு சைவசமயமும் சிவாலய வழிபாடும் ஈழ நாட்டில் மிகவும் எழுச்சி பெற்று விளங்கியதாக வரலாறு கூறுகிறது. அன்னியர் வருகைக்கு முன்பு ஈழத்தில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில் மன்னர்கள் கட்டிய பெரிய விநாயகர் கோயில்கள் இருந்தன என்பதற்கு இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், வாய்மொழிச் சான்றுகள் உள்ளன. சோழநாட்டு அரசிளங்குமரி மாருதப்புரவீகவல்லி குதிரை முகம் மாறும் பொருட்டு கீரிமலை கண்டகி தீர்த்தத்தில் நீராட வருகைதந்து தீராத முகம் மாறி நலம் பெற்றதற்காகப் பல பெருங்கோயில்கள் அவளது ஞாபகமாகக் கட்டப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் மட்டுமின்றி அளவெட்டி கும்பளாவளைப் பிள்ளையார் கோயில், வறுத்தலைப் பிள்ளையார், கொல்லங்கலட்டிப் பிள்ளையார், பெருமாக்கடவைப்பிள்ளையார் போன்ற விநாயகர் தலங்கள் அரசிளங்குமாரி காலத்தில் எழுந்தவை யெனவும் அவை பின் போர்த்துக்கேயரால் முற்றாக அழிக்கப் பட்டன எனவும் கூறப்படுகின்றது. 1109இல் கருணாகர மன்னன் இணுவில் உரும்பிராய் கிராம எல்லையில் கருணாகரப்பிள்ளையார் கோயிலைக் கட்டுவித்தான் என அங்குள்ள கல்வெட்டு சான்று கூறுகின்றது.

கி.பி. 1475இல் சிங்கைப் பரராஜசேகரன் யாழ்ப்பாணத்தை ஆண்டபோது நல்லூர் நகரத்தின் நான்கு புறங்களிலும் பெருங்கோயில்களைக் கட்டுவித்தான். கிழக்குத் திசையில் அவன் கட்டுவித்த வெய்யிலுகந்தப் பிள்ளையார் கோயில் முன்காலத்தில் மிகப் பிரசித்தமாக விளங்கியுள்ளது.

சிங்கைப் பரராஜசேகரனின் மைத்துனனும், மந்திரியு மான அரசகேசரி, நல்லூர் ராசவீதியில் குதிரை வண்டியில் போகும்போது நீர்வேலியில் குதிரை திசைமாறி வேகமாக ஓர் குளத்தை நோக்கிச் சென்றதாகவும், அவ்விடத்தில் தனது நேர்த்தியாக அரசகேசரி மிகப் பெரிய விநாயகர் கோயிலைக் கட்டியதாகவும் வரலாற்று நூல்கள் கூறுகின்றன. இத்திருக் கோயில் இன்று நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயில் என அழைக்கப்படுகிறது.

இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் என்று இன்று அழைக்கப்படும் விநாயகர் கோயிலைத் தமிழ்வேந்தன் பரராசசேகரன் கட்டிப் பேணினான் என்றும், அன்னியர் வருகையால் அத்தலம் முற்றாக அழிந்து பின் அருகில் இருந்த தீர்த்தக்கேணியிலும், மடத்திலும் பிள்ளையாரை மக்கள் பூசித்து வந்ததால் மடத்துவாசல் பிள்ளையார் என இக்கோயில் அழைக்கப்பட்டு வந்ததாகவும் இத் திருக்கோயில் பற்றிய வரலாற்று நூல் குறிப்பிடுகின்றது. பரராஜசேகர மன்னனின் சகோதரன் செகராசசேகரனால் கட்டப்பட்ட கோயில் அன்னியரால் அழிக்கப்பட்டதாக கூறப்பட்டாலும் இன்றும் இணுவில் செகராசசேகரப் பிள்ளையார் கோயில் என்ற நாமத்துடன் ஒரு கோயிலுள்ளது.

**கரப்பிரான் பிள்ளையார் கோயில், ஆனைக்கோட்டை**
**நூற்றி ஐம்பது வருட வரலாறு கொண்ட கோயில்.**

**ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயில்-அத்தியடி**

இவ்வாலயத்தில் நூறுவருடங்களுக்கு முன் சிதம்பரத்திலிருந்து கொண்டு வரப்பட்ட நர்த்தன விநாயகர் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபாடு நடைபெற்றது.

**வண்ணார்பண்ணை பன்றிக்கோட்டை பிள்ளையார் கோயில்**

பழமை வாய்ந்த இவ்வாலயத்தில் சித்தி புத்தி சமேத விநாயகர் அமைந்திருப்பது சிறப்பு அம்சமாகும்.


ஈழத்துப் புராதன சிவாலயங்களிலும் ஏனைய முருகன் தலங்களிலும் விநாயகர் வழிபாடு சிறப்புற்று விளங்கியுள்ளது. கீரிமலைப் பகுதியில் கடற்கரை எல்லையில் நிலத்தின்கீழ் மிகப்பழைய விநாயகர் விக்கிரகம் கண்டெடுக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

**யாழ்ப்பாண மாவட்டம்**
**யாழ்ப்பாணம்-செயலர் பிரிவு**
**வில்லூன்றி ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோயில்**

இராமபிரான் சிவபூசை செய்த இடம் எனவும், அவரது வில்பட்டு நன்னீர் ஊற்று தோன்றியதால் பெயர் ஏற்பட்டதாகவும் கூறப்படும் இவ்வூரில் நூறு வருடத்திற்கு மேற்பட்ட விநாயகர் விக்கிரகம் காணப்படுகிறது. கல்வெட்டுக்கள், சாசனங்கள் உள.

நன்னீராட்டு திருவிழா இனிதே நடைபெற எங்களின் வாழ்த்துக்கள்




நன்னீராட்டு திருவிழா
இனிதே நடைபெற
எங்களின் வாழ்த்துக்கள்
MITHUS
Jewellers
322-324 London Road
Croydon CRO 2TJ
Tel : 020 8683 1756
Fax : 020 8683 1792

நன்னீராட்டு திருவிழா இனிதே நடைபெற எங்களின் வாழ்த்துக்கள்




நன்னீராட்டு திருவிழா இனிதே நடைபெற எங்களின் வாழ்த்துக்கள்



நன்னீராட்டு திருவிழா இனிதே நடைபெற எங்களின் வாழ்த்துக்கள்

**Tel : 0208 9000100**

# Best Foods



## Best Foods ன் மாதாந்த மலிவு விற்பனை

எங்கள் வியாபார நிலையத்தில் ஒவ்வொரு மாதமும் அதிரடி மலிவு விற்பனையாக பல பொருட்களை மக்களுக்கு விற்பனை செய்கிறோம். ஒவ்வொரு மாதமும் எங்கள் கிளைகளுக்குச் சென்று மலிவு விலை பொருட்களை பெற்றுக்கொண்டு கணிசமான பணத்தை சேமியுங்கள்



**11-13 Ealing Road**
**Wembley Middlesex HAO 4AA**

நன்னீராட்டு திருவிழா இனிதே நடைபெற எங்களின் வாழ்த்துக்கள்



நன்னீராட்டு திருவிழா இனிதே நடைபெற எங்களின் வாழ்த்துக்கள்

100 String Hoppers- £10
50 String Hoppers- £6
Sothi and Sampal

6 Puttu -£10
3 Puttu -£6

Mutton Rolls -60p









Tel:0208 6833333
0208 6844440
Mob:07957715637

319 Whitehorse Road
Croydon
CR0 2PN

நன்னீராட்டு திருவிழா இனிதே நடைபெற எங்களின் வாழ்த்துக்கள்



நன்னீராட்டு திருவிழா இனிதே நடைபெற எங்களின் வாழ்த்துக்கள்

Natural Stone & Porcelain tiles from £13.99/m²

# CROYDON GRANITE LTD



**Specialist Granite & Quartz Worktops, Tiles, Fireplaces and Vanity Tops**

**T: 020 8664 9701 ~ www.croydongranite.com**

755-757 London Road, Thornton Heath CR7 6AW

## Granite & Quartz worktops supplied and fitted from £900.00 & £1200.00 respectively



**BLUE RAY**



**BLACK BEAUTY**



**CRYSTAL YELLOW**



**BLACK MIRROR QUARTZ**



**GREY MIRROR QUARTZ**



**WHITE MIRROR QUARTZ**

******Condition Apply******

**This offer is up to 6 linear meters, 2 unpolished cut-outs, site within range of M25.**

**All prices are subject to VAT**

நன்னீராட்டு திருவிழா இனிதே நடைபெற எங்களின் வாழ்த்துக்கள்

Best Foods



எங்கள் வியாபார நிலையத்தில் ஒவ்வொருமாதமும் அதிரடி மலிவு
விற்பனையாக பல பொருட்களை மக்களுக்கு விற்பனை செய்கிறோம்.
ஒவ்வொரு மாதமும் எங்கள் கிளைகளுக்குச் சென்று
மலிவு விலை பொருட்களை பெற்றுக்கொண்டு
கணிசமான பணத்தை சேமியுங்கள்

364 - 366, Bath Road
Hounslow, Middlesex TW4 7HT
**Tel : 020 8577 6002**
**Fax : 020 8570 2323**

Best Foods ன்

**மாதாந்த மலிவு விற்பனை உங்கள் செலவை குறைக்க உதவுகிறது!**

நன்னீராட்டு திருவிழா இனிதே நடைபெற எங்களின் வாழ்த்துக்கள்

# FUSHIA

## *HAPPY HOUR!*

## 5.00 PM TO 8.00 PM

# 50% DISCOUNT

**ON FOOD**

**£1.99 Cobra Beer or Glass of House wine**

**DINE IN OR TAKE AWAY**

**Order must be taken before 8.00pm**

## Sunday to Thursday

T&C Apply

## Fushia Restaurant and Banqueting Hall

**Vegetarian welcome – Over 50 items Available**

**3 Brighton Road, South Croydon CR2 6EA, 020 86808833**

www.fushiauk.com E-mail:info@fushiauk.com

**Plenty of free parking available nearby during our opening hours**

நன்னீராட்டு திருவிழா இனிதே நடைபெற எங்களின் வாழ்த்துக்கள்



நன்னீராட்டு திருவிழா இனிதே நடைபெற எங்களின் வாழ்த்துக்கள்

# DOSA
## LOUNGE

*A Taste of Pure Spice Heaven*

SRI LANKAN & SOUTH INDIAN
RESTAURANT AND TAKE AWAY

ALL VEGETARIAN FOODS ARE COOKED SEPARATELY IN OUR VEGETARIAN KITCHEN AND SERVED ON SEPARATE PLATES

**PARTY/ FUNCTION HALL**
AVAILABLE FOR HIRE.
SMALL HALL UP TO 35 SEATS,
BIG HALL UP TO 120 SEATS



FREE DELIVERY
(6PM TO 10PM)
WITHIN 3 MILES RADIUS.
MINIMUM ORDER OF
£20.00

OUTDOOR CATERING FOR PARTIES, FUNCTIONS ETC AVAILABLE

OPENING TIMES
MONDAY – SUNDAY
11AM – 11PM

**Tel: 020 8684 6661**
5-7 St.James's Road, West Croydon, CR0 2SB
www.dosalounge.co.uk


நன்னீராட்டு திருவிழா இனிதே நடைபெற எங்களின் வாழ்த்துக்கள்



Best Foods

259 - 261, London Road
West Croydon
Surrey CRO 2RL
**Tel : 020 8684 6269**
**Fax : 684 4677**

Best Foods ன்
மாதாந்த மலிவு விற்பனை
உங்கள் செலவை குறைக்க உதவுகிறது!



எங்கள் வியாபார நிலையத்தில் ஒவ்வொரு மாதமும் அதிரடி மலிவு
விற்பனையாக பல பொருட்களை மக்களுக்கு விற்பனை செய்கிறோம்.
ஒவ்வொரு மாதமும் எங்கள் கிளைகளுக்குச் சென்று மலிவு விலை
பொருட்களை பெற்றுக்கொண்டு கணிசமான பணத்தை சேமியுங்கள்

நன்னீராட்டு திருவிழா இனிதே நடைபெற எங்களின் வாழ்த்துக்கள்



நன்னீராட்டு திருவிழா இனிதே நடைபெற எங்களின் வாழ்த்துக்கள்



நன்னீராட்டு திருவிழா இனிதே நடைபெற எங்களின் வாழ்த்துக்கள்



நன்னீராட்டு திருவிழா இனிதே நடைபெற எங்களின் வாழ்த்துக்கள்

# Eelavan Stores

308 London Road
Croydon CR0 2TJ

**TOOTING**
30 Mitcham Road
Tooting Broadway
London SW17 9NA

**LEWISHAM**
KRS (BEST FOOD)
சிவன் கோவிலுக்கு முன்பாக
33 Lee High Street
London SE 13 5NS

## KODEESWARAN LIMITED

**Siva.Jeyakody**
Director
07424307537, 0208 684 4137






## நன்றி சொல்கிறோம்...

குறோய்டன் ஸ்ரீ சக்தி கணபதியின் அனுக்கிரகத்தால், எமது ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் மிகச் சீரும் சிறப்புமாக இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த நல்ல நாளில், நாம் எடுத்த இந்தப் பெருமுயற்சிக்கு, எல்லா வகையிலும் ஆக்கமும், ஊக்கமும் அளித்து ஒத்துழைத்த அனைவருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றிகளைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மலருக்கான வாழ்த்துச் செய்திகளைத் தந்த பெருமக்கள் மற்றும் மலருக்கான ஆக்கங்களைத் தந்துதவி மலரைச் சிறப்பித்த அன்பர்கள் அனைவருக்கும் நன்றி!

மிகுந்த பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும், விளம்பரங்கள் வழங்கித் தோள்கொடுத்த அனைத்து வர்த்தக நிறுவனங்களுக்கும் எங்கள் நன்றி உரியது.

தன்னுடைய பணிகளுக்கு இடையில், மிகக் குறுகிய காலத்தில், மலரை மிகச் சிறப்பாக ஆக்கித்தந்த தமிழர் தகவல் பதிப்பாசிரியருக்கு மனமார்ந்த நன்றிகள்!

பகல் இரவு பாராமல், மழையென்றும் பனியென்றும் கருதாமல் ஆலயப் புனரமைப்புப் பணிகளில் சிறப்பாக எங்களோடு ஒத்துழைத்த அனைத்துத் தொண்டர்களுக்கும் நன்றி!

கும்பாபிஷேகமும், அதையொட்டி வெளியிடப்படுகின்ற இந்த மலரும் சிறக்கப் பல வகைகளிலும் எங்களுக்குத் துணை நின்ற அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் இருகரம் கூப்பி நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்ஃறாம்.

அனைவரும் எல்லாம் வல்ல எம் ஸ்ரீசக்தி கணபதியின் அருளும், ஆசியும் பெற்று மென்மேலும் சிறக்க வேண்டுகிஃறாம்!

**கும்பாபிஷேகச் செயற்குழு**



வடிவமைப்பு : S. அம்பிகா
அச்சிப்பதிவு : தமிழர் தகவல்



புதுப்பொலிவுடன்
JK Gold House & Fashion House Ltd
நன்னீராட்டு திருவிழா
இனிதே நடைபெற
எங்களின் வாழ்த்துக்கள்
ஆடை
ஆபரணம்
வாங்க
உங்கள்
ஆசை பூர்த்தியாக
நீங்கள் என்றும்
நாடவேண்டிய
ஒரே இடம்
020 8684 4577
314 - 316 London Road, West Croydon, CR0 2TJ
your family fashion & jewel house in croydon
(In front of Best food Supermarket)





சனி, ஞாயிறு விடுமுறை தினங்கள் பாராது ஆவணிச்சதுர்த்தியில்
தேர்த் திருவிழா நடைபெறும் ஒரே ஒரு ஆலயம்

முதன்முறையாக புலம்பெயர் நாடுகளில் வானுயர்ந்த சப்பறம்